OLIARAZI

மாத சஞ்சிகை

# ஒளி அரசி

இல்லத்தரசிகளின் தோழி

ஒளிஅரசி

நல்லதொரு குடும்பம்

ஒளி - 02 இதழ் - 04
மார்ச் 2015
பக்கங்கள் : 72

ரூபா 75



PUBLIC LIBRARY
JAFFNA

உள்ளே...
புலமைப்பரிசில்
வினாத்தாள்

சாதனை
மங்கை

## மகளிர் தின சிறப்பிதழ்

உன்னால்
முடியும்

அன்பு + அறிவு + அழகு + திறன் + முயற்சி + வாழ்த்து + பொழுதுபோக்கு

அரசியலோ பாலியலோ கலக்காத
ஒரு பரிணாமப் படைப்பு

வவுனியாவில் பிரமாண்டமான காட்சியறை

# நியூ கேர்டின் மஹால்

# NEW CURTAIN MAHAL




ஐந்து வருட பூர்த்தியை முன்னிட்டு விசேட விலைக்கழிவுடன் நேர்த்தியான முறையில் வடிவமைத்து உங்கள் இல்லங்களுக்கு வந்து அளவு எடுத்து பொருத்திக் கொடுக்கப்படும்.

No. 54/03, Jaffna Road, Vavuniya.

http://www.newcurtainmahal.com Tel: 0776441909, 0242227634

# New Swarkka Hotel



- Rooms
- Wedding Hall
- Catering
- Restaurant
- Van for Hire



No : 33, Soosaipillaiyarkulam, Vavuniya.

T.P: 024-222 1090 Mob : 077-8084164


swarkka2007@hotmail.com

PUBLIC LIBRARY
JAFFNA


# உள்ளே...



மனைவிக்கு தினமும் நேரம் ஒதுக்குங்கள் 05


ரொமான்ஸ் இரகசியம் 08


காதலில் கூட்டல், கழித்தல் 14



காதல் மைனாக்கள் 27


மகளிர்தினம் உருவான கதை 28


ஆஸ்கார் விருதுகள் 30



மாதொருபாகன் சர்ச்சை 38


நந்தவனம் 49


தாயின் வயிற்றில் 55


இசைக் குயில் 65


வாசகர்கள், விநியோகஸ்தர்கள் அனைவருக்கும் எமது மகளிர்தின வாழ்த்துக்கள்

"ஒளி அரசி"

இல்லத்தரசிகளின் தோழி

மாதம் ஒரு முறை

மார்ச் 1 - 31, 2015

நியூ விஷன் மீடியா சின்டிகேற் பிறைவேட் லிமிடட் - ஆசிரியர் குழுவால் அச்சிட்டு வெளியிடப்படுகிறது.

**வடிவமைப்பு:**

எஸ். கஜரூபன், எஸ். ஏ. ரெனிபோட்

**ஆசிரிய பீடம்**

**தொலைபேசி:** 071 8628369, 011 5738003

தொலைநகல்: 011 5517945

E-mail: oliarazi33@gmail.com

editoroliarazi@gmail.com

**விளம்பரப் பிரிவு :**

கொழும்பு : 078 8864730, 071 4114997

வட மாகாணம் : 021 5671111

**விநியோகப் பிரிவு :**

கொழும்பு : 011 5737592, 071 8628379

வட மாகாணம்:

021567222, 0776569617, 071 6182182

**சந்தா விபரம்:** ( ஒரு வருடம்) 900/= (தபால் செலவு தவிர்ந்த)

**கடித தொடர்புகளுக்கு :**

ஆசிரியர், 'ஒளிஅரசி'

85, ஜயந்த மல்லிமாராச்சி மாவத்தை,

கொழும்பு - 14.

**வாசகர் விழிப்பு:**

**விளம்பரங்களின் உண்மைத்தன்மை தொடர்பாக கொடுக்கல் வாங்கல் மேற்கொள்ளும்போது ஆவணங்களை சரியாகப் பரிசோதித்து பார்ப்பது வாசகர்களின் கடமையாகும்.**

# மகளிர் தினம்...

**அன்பான வாசகர்கட்க்கு,**

ஒளிஅரசியின் மற்றுமோர் இதழின் ஊடாக உங்களைச் சந்திப்பதில் மிக்க மகிழ்ச்சியடைகின்றோம். இல்லத்தரசிகளின் தோழியான ஒளியரசியினைப் பொறுத்தவரை இம்மாத இதழ் சிறப்பானதொன்றாகவே கருதப்படுகின்றது. வீடுகளிலும் சமூகத்திலும் பெண்கள் மீது இழைக்கப்படுகின்ற கொடுமைகளுக்கு எதிராக குரல் கொடுப்பதற்கான விசேட நாளான சர்வதேச மகளிர் தினம் அனுஷ்டிக்கப்படுகின்ற மார்ச் மாதம் உண்மையில் சிறப்பானஒன்றாகவே உணரப்படுகின்றது.

இவ் உலகில் பேணி போற்றப்படவேண்டிய பெண்மையானது, காலம் காலமாக அடக்கி ஒடுக்கப்பட்டு வந்துள்ளது. பெண்மைக்கு பாதுகாப்பு கொடுக்கவேண்டிய வீடு என்கின்ற கட்டமைப்பும், சமூகம் என்கின்ற கட்டமைப்பும் அதனின்று தவறி பெண்கள் மீதான வன்முறைகளைக் கட்டவிழ்த்து விட்டுள்ளது. இதில் உள்ள பயங்கரம் என்னவென்றால், பெண்களுக்கு எதிராக இடம்பெறுகின்ற இந்த கொடுமைகள் பற்றியும், வன்முறைகள் பற்றியும் பலரும் பேசத்தயங்குவதுடன் பாராமுகமாக இருந்துவிடுகின்றனர். இதுவே வன்முறைகள் செய்வோருக்கு வாய்ப்பாக அமைந்துவிடுவதுடன் வன்முறைகள் பெருகவும் காரணமாக அமைந்துள்ளது. எனவே, பெண்களுக்கு எதிராக எங்கெங்கெல்லாம் ஒடுக்குமுறைகளும் வன்முறைகளும் இடம் பெறுகின்றதோ அதற்கெதிராக குரல் கொடுக்க ஆரம்பித்தல் அவசியம். உண்மையில் பெண்களுக்கெதிராக இந்தச் சமூகத்தில் நிகழ்கின்ற அநீதிகள் பற்றிப் போதுமான விழிப்புணர்வு ஏற்படுத்தப்படுதல் அவசியமானதொன்றாகும். இதற்க்கு ஆண், பெண் என்கின்ற பேதங்கள் இன்றி அனைவரும் ஒன்றினைதல் அவசியம்.

மறுபுறத்தில் பெண்களும் தமது திறமைகளை வளர்த்துக் கொள்ளுதல் வேண்டும். வெறுமனே வீட்டு வேலைகளைச் செய்தோமா, நாடகங்களைப் பார்த்தோமா என இருந்துவிடாமல் தமது அறிவினை உயர்த்திக்கொள்ளவேண்டும். அறிவு வளர்ச்சியும், பொருளாதார வளர்ச்சியுமே ஒரு சமூகத்தின் விடுதலையினைப் பெற்றுத்தருகிற காரணிகளாக காணப்படுகின்றது. எனவே பெண்கள் அறிவிலும் பொருளாதார நிலையிலும் உயர முயற்சித்தல் அவசியம். அதுவே அவர்களுக்கு முழுச் சுதந்திரத்தைப் பெற்றுத்தரும்.

- ஆசிரியர் குழு -

# மனைவிக்கு தினமும் நேரம் ஒதுக்குங்கள்

நீங்கள் வேலைக்கு செல்பவர் என்றாலும் சரி, தனியாக தொழில் செய்பவர் என்றாலும் சரி, தினமும் ஒரு மணி நேரத்தை மனைவியுடன் மகிழ்ச்சியாக பேசுவதற்கு என்றே செலவிடுங்கள். வேலை முடிந்து களைப்பாக வீடு திரும்பினால் டி.வி.யும், ரிமோட்டுமாக இருந்துவிடாதீர்கள்.

மனைவியை அருகே அழைத்து, அன்று வீட்டில் நடந்த விஷயங்களைப் பற்றிக் கேளுங்கள். அரட்டை அடித்துப் பேசுங்கள். இருவரும் ஒன்றாக டி.வி. பார்த்துக்கொண்டிருந்தால், அதில் வரும் கதாபாத்திரங்களிலேயே மூழ்கிவிடாமல் பக்கத்தில் மனைவி இருக்கிறாள் என்பதை மனதில் வைத்துக்கொண்டு அவளிடமும் கலகலப்பாக பேசுங்கள்.

உங்கள் குடும்பத்துக்கு தேவையான நல்ல விஷயங்களை ஆரோக்கியமாக விவாதியுங்கள். இந்த விவாதத்தில் உங்கள் குடும்பப் பிரச்சினைகள் பலவற்றுக்கு தீர்வு கிடைக்கலாம். தங்களைப்பற்றி புகழ்ந்து பேசுவதை விரும்பாத பெண்களே இருக்க முடியாது. அடிக்கடி உங்கள் அன்பான மனைவி பற்றிய அவரின் நல்லகுணங்களை பற்றி புகழ்ந்து பேசுங்கள்.

சம்பளம் பெறுவோர், சம்பளம் வாங்கிய நாள் அன்று மனைவிக்கு பிடித்த பொருள் ஒன்றை வாங்கிக் கொண்டு போய் கொடுத்தால் அவர்களது மனைவி அடையும் ஆனந்தத்திற்கு அளவே இருக்காது. உங்கள் மனைவியை எப்போதும் காதலியாக, தோழியாகவே நினைத்திருங்கள். ஒரு காதலன் காதலியிடம் எப்படி அன்பாக நடந்துகொள்வானோ, அதேபோன்று நடந்துகொள்ளுங்கள்.

இல்லையென்றால், அப்படி நடக்க முயற்சி யாவது செய்யுங்கள். 'உன்னுடைய ஆசைகள் எல்லாவற்றையும் நான் நிறைவேற்றிவிட்டேனா? நிறைவேறாத ஆசைகள் இருந்தால் சொல். அதை நான் நிறைவேற்றுகிறேன்' என்று அவ்வப்போது மனைவியிடம் சொல்லிப் பாருங்கள். நீங்கள் இப்படி கேட்ட மாத்திரத்திலேயே உள்ளம் குளிர்ந்துபோவாள் உங்களவள்.

மனைவி கஷ்டப்பட்டு சில வேலைகளை செய்யும்போது, அதில் நீங்களும் பங்கெடுத்துப் பாருங்கள். அந்தநேரம், அவள் மனதிற்குள் ஆனந்த மழைச்சாரலே பொழியும்.


மொத்தத்தில், நீங்கள் மனைவியிடம் எந்த அளவுக்கு அன்பாக இருக்கிறீர்களோ, அந்த அளவுக்கு அவளும் உங்களிடம் அன்பாக இருப்பாள். நீங்கள் அவளிடம் ஒரு காதலனாய் பழகும் போது அவளும் உங்கள் காதலியாய் மாறிவிடுவாள்! அதனால் காதலியுங்கள், மனைவியை... ●



# சொல்லமுடியாத துயரங்கள்...


நான் உடைந்து போவதற்கு
ஒரு நிமிடம் முன்னால்
நம் பிணைப்பு இருந்தது...

சொல்லமுடியாத
துயரங்களை எல்லாம்
செப்பனிட்டு செப்பனிட்டு
என்னை இழந்தேன்...
வலிந்து பெறப்பட்ட
புன்னகையொன்றை
மிகப் பிரயத்தனப்பட்டு தூக்கியபடி
ஒவ்வொரு பொழுதாய் கழித்தேன்.



உன்னோடு பேசி
மகிழ்ந்து கிடக்க
நினைக்கும் போதெல்லாம்
தடுக்கப்படும் வக்கிரமாய்
ஆக்கப்பட்டு ஆளாளப்பட்டு
திணிக்கப்படும்
பண்டங்களையெல்லாம்
துணிவுடன் ஏற்றேன்...
பாதம் வீங்கும் கர்ப்பிணிபோல
எல்லாவற்றையும்
உன்னிடம் மட்டும்
சுகப்பிரசவத்துக்காய்
அழைத்து வரும்போது
கதறக்கதற கத்தியால் கிழித்து
நினைவை வடுவாக்கினேன்...

சற்று நேரத்துக்கு முன்னர்
அடக்கம் செய்யப்பட்ட
என் நினைவுகளுக்கு
முன்னால் அமர்ந்து
ஒப்பாரி வைக்கவாவது
உன்னையழைக்கலாம்
என்று நெருங்கினேன்.
புதைக்கப்பட்ட
உன் நினைவுகளின்
நினைவுகூட இன்றி
சிரிப்பதில் மும்முரமாய்
இருந்தாய் நீ...




**நோயாளி :** டாக்டர்! எனக்கு பல் ஆடுது!

**டாக்டர் :** எந்த பாட்டுக்கு?



**மகன் :** அப்பா! இனிமே கம்பியூட்டர் படிச்சாதான் நல்ல வேலை கிடைக்கும்!

**தந்தை :** அப்ப..... நீ படிச்சா கிடைக்காதா?



**ஒருவர் :** என் பூட்டை உடைத்து 5 லட்சம் கொள்ளை அடித்து விட்டார்கள்!

**மற்றவர் :** பூட்டுக்குள் எப்படிடா 5 லட்சம் வைத்திருந்தாய்?



**நண்பன் :** டேய்! நாளைக்கு ஒரு பெண் பார்க்கப் போறேன்! நீயும் வந்துவிடு!

**மற்றவர் :** கண்டிப்பா! உனக்கு ஒரு கஷ்டம் என்றால் நான் சும்மா இருப்பேனா?



**மனைவி :** ஏங்க நீங்களாவது உங்கள் நண்பரிடம் சொல்லக் கூடாதா. அவருக்குப் பார்த்த பெண் நல்லாவே இல்ல!

**கணவன் :** நான் ஏன் சொல்ல வேண்டும்! பாவிப்பயல் எனக்கு அவன் சொன்னானா!



**நோயாளி :** இரண்டு இடியப்பத்தைக்கூட முழுசா சாப்பிட முடியல டாக்டர்...?

**டாக்டர் :** என்னாலையும் முழுசா இரண்டு இடியப்பத்தை சாப்பிட முடியாது, பிச்சுத்தான் சாப்பிடனும்!



# ரொமான்ஸ் இரகசியங்கள் – 15

வானதிக்கும், ராஜ்குமாருக்கும் இந்த ஜூலை வந்தால் பதின்மூன்றாவது திருமண நாளும் வந்துவிடும்.

இத்தனை வருடங்களில் ஒருவர் மீது மற்றவருக்கு இருக்கும் அன்பு பெருகிக்கொண்டுதான் போகிறதே தவிர, துளியாவது குறையக் காணோம். காரணம், திருமணமான புதிதில் வானதி போட்ட பலமான நங்கூரம்.

ராஜ்குமார் எப்போதும் அம்மா பிள்ளைதான். ‘புத்தம் புதிதாக மனைவி வந்திருக்கிறாள். உண்ணவும், உறங்கவும்கூட தனக்காகக் காத்திருக்கிறாள்’ என்ற கிறக்கம் அவனுக்குள் இருந்தாலும் ‘அம்மா மனம் நோகும்’ என்பதற்காக அவள் மீதான அன்பை அடக்கியே வாசித்தான். அறைக்கு வெளியே அவளை சட்டையே செய்யமாட்டான். ஆனால், அத்தனை அன்பையும் அந்த நான்கு சுவருக்குள் பொழிவான்.

வானதிக்கு அதனாலேயே அந்தப் பேரன்பும் கசக்கத்தான் செய்தது. ‘உன் அம்மாவின் முன்னால் நீ என்னை தட்டாமாலையெல்லாம் சுற்றவேண்டாம். சாப்பிட்டியா? என்று கேளேன்’ என்று கதறி அழத் தோன்றும் அவளுக்கு.

‘‘அவனைப் பத்தி என்ன தெரியும் உனக்கு’’ என்று ஒரு நாளைக்கு பத்து முறை அவள் மாமியார் சொல்வது அவளை மேலும் மேலும் சுட்டெரிக்கும்.

ஆனால், அந்த இடத்தில்தான் வானதி உணர்வுகளை கொஞ்சம் தள்ளி வைத்துவிட்டு புத்திக்கு வேலை கொடுத்தாள். தன் கணவனை இப்படி நடந்துகொள்ள வைப்பதும், மாமியாரை இப்படிப் பேச வைப்பதும் எதிர்க்கட்சியினரின் சதியோ, தீவிரவாதிகளின் நாசவேலையோ அல்லவே. முழுக்க முழுக்க ஒரு தாயின் பாசமும் மகனின் நேசமும்தானே.

இத்தனை பிரியத்தைத் தன் மகனிடம் காட்டத் தெரிந்த ஒரு தாய்க்கு அதைத் தன்னிடமும் காட்டத் தெரியும்தானே. தாயின் மனம் சங்கடப்படக்கூடாது என்று நினைக்கும் ஒரு மகனுக்கு மனைவியின் காதலும் புரியும்தானே. நீர் அடித்து நீர் எப்படி விலகும்? நிஜமான அன்பு எப்படி காயப்படுத்தும்?

மாமியாரின் வார்த்தைகளில் இருப்பது விஷமம் அல்ல. பயம். எங்கே மருமகள் வந்ததும் நமக்கான முக்கியத்துவம் குறைந்து

விடுமோ என்கிற கலக்கம். ''நான் உங்களை துரத்தியடிக்க வந்தவள் இல்லை. உங்கள் மகனோடு சேர்த்து உங்களையும் கூடுதலாக நேசிக்க வந்தவள்தான் என்பதை மட்டும் அவருக்குப் புரியவைத்துவிட்டால்... அதைத்தான் செய்தாள் வானதி.

ராஜ்குமார் அலுவலகத்துக்குக் கிளம்பிப் போனபிறகு தன் கல்லூரி கால லூட்டிகளை - அம்மா வீட்டின் நினைவுகளை... அத்தனையையும் கொஞ்சம் கொஞ்சமாகப் பகிர ஆரம்பித்தாள் மாமியாரிடம்.

மாமியாரும் தன் பிறந்த வீட்டின் பெருமைகளை வாய் வலிக்கும் வரை சொன்னார் வானதியிடம்.

விளைவு... நேசம் கொண்ட தோழிகளாகிப் போனார்கள் இருவரும்.

''டேய் ராஜ்குமார், வீட்டுக்குள்ளேயே இருக்குறாள்ல... பார்க், பீச்னு எங்கயாவது கூட்டிட்டுப் போயேண்டா. இவன் எப்பவும் இப்பிடித் தான்மா. சரியான சோம்பேறி. வெளி இடங்களுக்குக் கிளம்பவே மாட்டான்''

இருவருக்கும் அம்மாவாகிப் போன அந்தத் தாயின் ஆசியுடன் பைக்கில் பறந்தார்கள் இருவரும்.

உங்க அம்மாவுக்கு இருமல் ரொம்ப இருக்குதப்பா. சாயந்திரம் நம்ம டாக்டர்கிட்ட அப்பாயின்மென்ட் வாங்கிடுங்களேன்'' இப்படி - அவள் அக்கறை காட்டிய தினங்களில் எல்லாம் கூடுதல் இனிப்போடு கழிந்தன அவர்களின் இரவுகள்.

''மனிதர்கள் கண்ணாடியைப் போன்றவர்கள். நீங்கள் அவர்களிடம் எதைக் காட்டுகிறீர்களோ அதையே தருவார்கள்'' என்ற வாசகம் எத்தனை உண்மை என்பதை அனுபவபூர்வமாக உணர்ந்தாள் வானதி.

இந்த 13 வருடங்களில் நிலைமை அப்படியே தலைகீழாகிவிட்டது.

''ஏம்மா வானதி... அவனை இன்னும் காணோமே. ஆபீஸிலிருந்து லேட்டா வர்றதா ஏதாவது சொன்னானாம்மா?''

தன் மகனையே இவள் மூலமாகத் தொடர்புகொள்ளத் தயாராகிவிட்டார் அந்த மாமியார்.

''எங்க அக்கா பையன் கல்யாணத்துக்கு இன்விடேஷன் கொடுத்தாங்க இல்லியாம்மா. அவங்க நம்ம வீட்டுல எல்லா கல்யாணத்துக்கும் வந்திருக்காங்க. செய்முறை எவ்ளோ செய்யலாம்னு நினைக்கிறே?''

எல்லாவற்றுக்கும் ஆலோசனை கேட்கிறார் மாமனார்.

பிரச்சினைகளும் வருவதுண்டுதான். தாய்க்கும், மகளுக்குமே ஆயிரம் சண்டைகள் வருகையில் மாமியார் - மருமகளுக்கிடையே வராதா என்ன? அதிகம் வேண்டாம்; ஒற்றை வார்த்தை போதுமே வீடு பற்றி எரிய!

அப்போதும் அதை அணைப்பவள் வானதிதான். உருகி வழிந்தாலும் நெருப்பையே கிரீடமாகச் சூட்டிக் கொள்ளும் மெழுகுவர்த்தியைப்போல விட்டுக்கொடுத்ததால் உயர்ந்து நின்றாள் வானதி.

''என்ன சொக்குப்பொடி போட்ட வானதி? வானதி, வானதினு மூச்சுக்கு முந்நூறு தடவை சொல்றாங்க அத்தை'' ஏக்கத்துடன் கேட்பார்கள் பக்கத்து வீட்டினர்.

''அம்மாவுக்கு வானதி அண்ணின்னா கொஞ்சம் ஸ்பெஷல்தான். நொடிப்பாள் மச்சினிச்சி.

''அம்மாவுக்கு மட்டுமல்ல. எல்லாருக்கும்தான் வானதின்னா ஸ்பெஷல் அவ அப்பிடி யார் மனசும் கோணாம நடந்துக்கறா'' என்று அந்தத் தீயில் கொஞ்சம் எண்ணெயை விடுவார் மாமனார்.


அத்தனையையும் கண்டும் காணாத மாதிரி மனசு கொள்ளாத பெருமையுடன் பார்த்துக்கொண்டிருக்கும் ராஜ்குமார், வானதிக்கு மட்டும் கேட்கும் குரலில் பாடுவான்.

'ஆப்பிள் பெண்ணே நீ யாரோ...!''

(தொடரும்...)

வாழ்க்கைதான் எத்தனை
விசித்திரமானது!
அழவைக்கிற கோபத்தையும்
சிரிப்பைத் தரும் அன்பையும்
உன் ஒருவனிடமே
தந்திருக்கிறது!

– சு. நாராயணி



PUBLIC LIBRARY JAFFNA.

# எல்லா குழந்தைகளும் அறிவாளிகளே!

[சென்றமாத தொடர்ச்சி]

**தர்க்க - கணித ரீதியான நுண்ணறிவு (Logical - mathematical intelligence)**

இவ் ஆற்றல் உள்ள குழந்தைகள் காரண, காரிய அடிப்படையில், தர்க்க ரீதியான சிந்தனை, கருத்தியல்கள் மற்றும் விமர்சனச் சிந்தனை போன்ற விடயங்களில் சிறந்தவர்களாக இருப்பார்கள். எண்களில் அமைவை பிரித்தறிதல்/நுணுக்கி அறிதல் திறன், எந்தவொரு விடயமானாலும் அதன் அடிப்படைக் கோட்பாடுகளைப் புரிந்துகொள்ளும் திறன் கொண்டவர்களாக இருப்பார்கள். கணிதத்தை எளிதாகப் புரிந்துகொள்வார்கள். சிக்கலான கணக்குகளையும் ஆர்வத்துடன் தீர்ப்பார்கள். அறிவியல் சோதனைகளில் ஈடுபாடு காட்டுவார்கள். எந்தவொரு பிரச்சினையாக இருந்தாலும் அதனை மேலோட்டமாகப் பார்க்காமல், அதன் ஆழத்தைப் புரிந்துகொண்டு தீர்க்க முயற்சி செய்வார்கள். இவர்கள் கேட்கிற தர்க்க ரீதியான கேள்விகளுக்குப் பதில் சொல்ல முடியாமல் பெற்றோர்களும் ஆசிரியர்களும் திணறுவார்கள். எதையும் ஆராய்ந்து கற்றுக்கொள்ள வேண்டும் என்று விரும்புவார்கள். இப்படிப்பட்டவர்களின் திறமைகள் கண்டறியப்பட்டு ஊக்குவிக்கப்பட்டால், எதிர்காலத்தில் விஞ்ஞானி, கணிதவியியலாளர், கணிப்பொறி நிரலாளர், பொறியியலாளர்களாகச் சிறந்து விளங்குவர்.

**உடல் - தசை இயக்கத்திறன் (Bodily - Kinesthetic intelligence)**

இத்திறன் கொண்ட குழந்தைகளுக்கு, உடல் இயக்கங்களைக் கட்டுப்படுத்தும் திறமை அபாரமானதாக இருக்கும். விளையாட்டில் அதிக ஆர்வமிருக்கும். எந்தவொரு செயலிலும் மனமும், உடலும் ஒத்திசைந்து, நேர உணர்வோடு இலக்கை நோக்கித் துல்லியமாகச் செயலாற்றுவார்கள். கேட்பது அல்லது பார்ப்பதன்மூலம் நினைவில் வைத்துக்கொள்வதைவிட, ஒன்றைச் செய்வதன்மூலம் நினைவில் வைத்துக்கொள்வார்கள். இவர்கள் விளையாட்டு, நடனம், நடிப்பு, கைவினைப் பொருட்களைத் திறம்படச் செய்வதுபோன்ற உடல் இயக்கத்தை ஒருங்கிணைத்துச் செய்யும் பணிகளில் வல்லமை பெற்றவர்களாகத் திகழ்வார்கள். விளையாட்டு வீரர், போலிஸ் மற்றும் இராணுவம்,

நடனக்கலைஞர், இசைக்கலைஞர், ஓவியர், நடிகராக சிறந்து விளங்குவர்.

**மனிதர்களைக் கையாளும் நுண்ணறிவு (Interpersonal intelligence)**

இத்திறனுள்ள குழந்தைகள் மற்றவர்களுடன் எளிதாகத் தொடர்புகொள்ளும் ஆற்றல் பெற்றவர்கள். பிறரின் மனநிலை, உணர்வுகள், மனோநிலை மற்றும் நோக்கங்களைப் புரிந்து செயற்படுவார்கள். உதாரணமாக, பெற்றோர்களிடம் - ஆசிரியர்களிடம் - தாத்தா - பாட்டியிடம் - சக நண்பர்களிடம் எப்போதும் ஆரோக்கியமான உறவை தக்கவைத்துக்கொள்வார்கள். பேச்சிலும், எழுத்துபூர்வமான தகவல் தொடர்பிலும் வல்லவர்கள். வித்தியாசமான கோணங்களில் இருந்து சூழல்களைப் பார்ப்பார்கள். பிறருடன் நேர்மறையான உறவு, குழுக்களில் உள்ள பிரச்சினைகளைத் தீர்ப்பது போன்றவற்றில் சிறப்பாகச் செயற்படுவார்கள். பிறரைக் கவர்வது எப்படி; தனது தேவைகளை எப்படிப் பூர்த்தி செய்துகொள்வது; எப்படிப் பழகுவது; நட்பு பேணுதல் போன்றவற்றில் திறன் பெற்றவர்கள். பொதுநலவாதி மற்றும் தவறுகளைத் தட்டிக்கேட்கும் குணம் கொண்டவர்கள். விற்பனையாளர், அரசியல்வாதி, மேலாளர், ஆசிரியர், ஆலோசகர், உளவியலாளர், தத்துவ அறிஞர் மற்றும் சமூக ஆர்வலராக மிளிரும் வாய்ப்புகள் அதிகம்.

**தன்னிலை சார்ந்த நுண்ணறிவு (Intrapersonal intelligence)**

இவர்கள் சுய பிரதிபலிப்புத் திறனுடையவர்கள். இத்திறன் பெற்ற குழந்தைகள் தம்மைப் பற்றிய ஆழமான புரிதல் கொண்டவர்கள். தமக்குள் இருக்கும் பலம், பலவீனங்களை, சுய உணர்ச்சிகளைக் கணிக்கும் ஆற்றல் பெற்றவர்கள். கோட்பாடுகள் மற்றும் கருத்துகளைப் புரிந்துகொள்வதில் ஈடுபாடு, ஒருவரின் ஊக்கங்கள் மற்றும் உணர்வுகளுக்கான அடிப்படையைப் புரிந்துகொள்ளுதல் இவர்களுக்குச் சாத்தியம். உள்ளுணர்வுகள், மதிப்புகள், நம்பிக்கைகள் மற்றும் சிந்திக்கும் முறைகளுக்கு ஏற்ப தன்னுணர்தல் இவர்களின் சிறப்புக் குணம். இவர்களின் தனித்துவம் சரியான வழிகாட்டலுடன் வளர்க்கப் பட்டால் எதிர்காலத்தில் தத்துவ அறிஞர், எழுத்தாளர், கோட்பாட்டுவாதி, விஞ்ஞானியாகச் சிறந்து விளங்குவர்.

**இயற்கை சார்ந்த நுண்ணறிவு (Naturalistic intelligence)**

இயற்கைச் சார்ந்த விடயங்களில் அதிக ஈர்ப்புள்ளவர்களாக இருப்பார்கள். உதாரணமாக, விலங்குகள், தாவர இனங்கள், பாறைகள் மற்றும் மலை வகைகள் போன்ற இயற்கையின் வடிவங்களைப் பற்றித் தெரிந்து கொள்வதிலும், தகவல் சேகரிப்பதிலும் ஆர்வம் அதிகமாக இருக்கும். இவர்கள் உலக சுற்றுச்சூழலின் முக்கியத்துவத்தையும், நெறிமுறைகளையும், சிக்கல்களையும் எளிதாக உணரக்கூடியவர்கள். மனிதநேயமிக்கவர்கள்.

மேலும் இந்தத் திறனுள்ள குழந்தைகள் மரம் வளர்த்தல், தோட்டப் பராமரிப்பு, சுற்றுச்சூழல் பாதுகாப்புத் தொடர்பான விடயங்களில் தங்களை அதிகம் ஈடுபடுத்திக்கொள்வார்கள். மண், மரம், தாவர இனங்கள், விலங்கியல், உயிரியல் போன்றவற்றை ஆராய்ச்சி செய்வதில் மிகுந்த விருப்பம் உள்ளவர்கள். வெளியில் தெரியாத இயற்கை மாற்றங்களைக் கூட இவர்கள் உணர்ந்துகொள்வார்கள். முகாமிடுதல், தோட்டம் அமைத்தல், மலையேறுதல், வெளியில் செல்லுதல் போன்றவற்றில் ஆர்வம். இயற்கையுடன் தொடர்பில்லாத விடயங்களில் ஆர்வம் காட்டமாட்டார்கள். உயிரியலாளர், சுற்றுச்சூழல், ஆர்வலர், தோட்டக்கலை நிபுணர், விவசாயி போன்ற பணிகளில் இவர்கள் சிறந்து விளங்குவர்.

> உள்ளுணர்வுகள், மதிப்புகள், நம்பிக்கைகள் மற்றும் சிந்திக்கும் முறைகளுக்கு ஏற்ப தன்னுணர்தல் இவர்களின் சிறப்புக் குணம்.

(தொடரும்...)

# பெண்ணியலாளருடன்...

## நட்சத்திர இல்லத்தரசி

**இலங்கைத் திருநாட்டில் எடுத்துக்காட்டாக இருக்கும் பெண்களின் பெருமைகளை சமூகத்துடன் பகிரவே இப்பகுதி. அந்தவகையில் இம் மாத நட்சத்திர இல்லத்தரசியாக மகளிர் அதிநிலைய நிர்வாகப் பணிப்பாளர் திருமதி சரோஜா சிவச்சந்திரன் அவர்களுடனான அனுபவப்பகிர்வுகள்.**

இலங்கையில் பலராலும் அறியப்பட்ட பெண்ணியல் வாதியும் கல்வியாளரும் அதிநிலைய நிர்வாகப் பணிப் பாளருமாகிய திருமதி சரோஜா சிவச்சந்திரன் அவர்களுடன் மகளிர் தினத்தை முன்னிட்டு ஒரு சிறப்பு நேர்காணல் ஒன்றிற்காக ஒளிஅரசியின் சார்பாக அனுகினோம். எத்தனையே பணிகள் மற்றும் அலுவல்கள் மத்தியிலும் தமது கருத்துக்களை எமது வாசகர்களோடு பகிந்துகொள்ள சம்மதித்தார். வழமைபோல் வாசகர்களுக்காக உங்களை அறிமுகப்படுத்துங்களேன் என்று ஆரம்பித்தோம்...

பெண் சமூகத்தில் எதிர்நோக்குகின்ற பிரச்சனைகளை கருத்திற்கொண்டு அவர்களுக்கு உதவுமுகமாக மகளிர் அதிநிலையம் எனும் அமைப்பை உருவாக்கி அதன் நிர்வாகப் பணிப்பாளராக கடமையாற்றி வருகிறேன். நான் பல்கலைக் கழக விரிவுரையாளராகவும், இலங்கை மன்றக் கல்லூரியின் சிரேஷ்ட விரிவுரையாளராகவும் கடமையாற்றிய அனுபவம் இந்நிலையத்தை ஆரம்பிக்க உந்துணையாக இருந்தது என்றார்.



**பெண்ணியலாளர் என்றதும் உடனே ஞாபகத்துக்கு வருவது சரோஜினி சிவச் சந்திரன் என்ற பெயர்தான். உங்களது இத்த கைய ஆளுமைக்கு அடிப்படைக் காரணம் ஏதும் உண்டா? நீங்கள் கடந்துவந்த பாதை பற்றி எம்மோடு பகிரமுடியுமா?**

நான் கடமையாற்றிய துறைகளில் ஏற் பட்ட அனுபவம், வெளிநாட்டு மாநாடுகளில் பெற்றுக்கொண்ட தகவல்கள் என்பவையும், எல்லா சமூகங்களிலும் பெண்களுக்கெதிரான வன்முறைகள் அதிகமாகவே உள்ளமையும், இது குறைக்கப்படவேண்டும் எனும் எண்ண மும் இதற்கான காரணங்களாகும்.

**இன்றைய சமூகத்தில் பெண்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகள் எவை என நீங்கள் கருதுவது யாது?**

இன்று சமூகத்தில் பெண்களுக்கு மட்டும் பிரச்சினைகள் என்று இல்லை. ஆண்களுக்கும் பிரச்சினைகள் உள்ளன. ஆனால் பெண்கள் கூடுதலான பிரச்சினைகளை எதிர்நோக்கு கின்றனர் பெண்களின் பிரச்சினைகளை நோக் கினால், சமூகம், சமூகத்தில் காட்டும் வன்முறை கள் நிறுத்தப்படவேண்டும். பெண்களுக்கெதிராக வன்முறைகள் என்பது பெருமளவில் பெருகி யுள்ளன. பாகிஸ்தான் நாட்டில் அசிட் வீசுதல் போன்ற பிரச்சினையும், இந்தியாவில் வரதட் சணைக்காக கொடுமை செய்தல், தீயிட்டு எரித்தல் போன்றவையும் இலங்கையில் பாலியல் கொடுமைகள், சீதனக் கொடுமைகள் என்பவையும் பரவலாக உள்ளன. படித்த ஆண்கள்கூட இவ்வாறான கொடுமைகளினால் பெண்களைத் துன்புறுத்த முனைகின்றனர். அதுமட்டுமல்ல, வார்த்தை துஷ்பிரயோகங் களும் பெண்களை அதிக மன அழுத்தத்துக்கு ஆளாக்கின்றன. இவையெல்லாம் நிவர்த்திக்கப் படவேண்டும். இவற்றை மாற்றுவதென்பது பெரிய சவால். இதற்கான முன்னெடுப்புகள் தொடர்ச்சியாக செய்யப்படவேண்டும். ஆண் பிள்ளைகளின் சிறுவயது முதல் அவர்களின் எதிர்பாலினம் பற்றிய நல்ல சிந்தனைகளை வளர்த்தல் வேண்டும்.

பெண்கள் தவறு செய்யவில்லை என்று கூறமுடியாது. இன்றைய தொழில்நுட்ப மாற்றத்தின் புரட்சிகூட பெண்களைப் பாதிப்ப தாகவே உள்ளது. தனியாக ஒரு பகுதியை பிழை என்று கூறமுடியாது. அவரவர் தனது இருப்பை உணர்ந்து செயற்படவேண்டும்.

**இறுதிப்போரில் அதிகம் பாதிக்கப் பட்டது பெண்களும், குழந்தைகளும் தான். இவ்வாறு பாதிக்கப்படட பெண் களுக்குத் தங்கள் அமைப்பு மேற்கொள் ளும் நடவடிக்கை எவை?**

இறுதிப்போர் எனக் கூறுவதைவிட தொண் ணூறுகளிலிருந்து எமது பெண்கள் போருக்கு முகம்கொடுத்தே வந்திருக்கின்றனர். வாழ வேண்டிய வயதில் பல இளைஞர்கள் உயிரை மாய்த்துக்கொண்டதால் பெண்களே அதிகம் பாதிக்கப்பட்டுள்ளனர். வடமாகாணத்தில் மட்டுமே 59,000 விதவைகள் உள்ளனர். இவர் கள் உடல், உள ரீதியாக பல பாதிப்புகளை எதிர் நோக்கியுள்ளனர். இவர்களை எந்தவகையில் சீர்செய்வது என்பது சவாலாகவே உள்ளது. இதற்கான கொள்கை மாற்றமும் அரசால்கூட ஏற்படுத்தப்படவில்லை. அரசசார்பற்ற நிறு வனங்கள் பல்வேறு உதவிகளைச் செய்கின் றன. சுயதொழில் கடன் உதவிகள், வீட்டுத் திட்ட உதவிகள் போன்றவை இவற்றில் அடங் கும். நாங்களும் இவ்வாறான உதவிகளைச் செய்துள்ளோம். இவற்றைவிட இந்தப் பெண்களை தன்னம்பிக்கை மிக்கவர்களா கவும், துணிச்சல் உள்ளவர்களாகவும், சக்தி மிக்கவர்களாகவும் மாற்றவேண்டியதே தலை யாய கடமையாகும். முல்லைதீவு, மாங்குளம், கிளிநொச்சி ஆகிய இடங்களிலுள்ள பல பெண் களை இவ்வாறு எமது அமைப்பு தயார்படுத்தி யுள்ளது. இவ்வாறு தயார்படுத்தப்பட்ட பெண்கள் இன்று தைரியசாலிகளாக, தமது தேவைகளைக் கேட்டு பெற்றுக்கொள்பவர்களா கவும், தமது தேவைக்காகக் குரல் கொடுப் பவர்களாகவும் மாறியுள்ளனர் என்பதே எமது அமைப்பின் வெற்றியாக உள்ளது.

**பெண்களின் பிரச்சினைகளை வெளியுல கிற்கு கொண்டுவருவதற்கு ஒரு பெண்ணி யலாளர் என்ற வகையில் நீங்கள் எடுத் துள்ள நடவடிக்கைகள் எவை?**

பெண்ணியலாளர் என்பதைவிட பெண் களுக்காகச் செயற்படுபவர் என்பதே பொருந் தும். பல தேசிய மாநாடுகளில் எமது பெண்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை யதார்த்தபூர்வ மாகக் கூறியுள்ளேன். ஐ.நா. சபைக்கும் இந்தப் பிரச்சினைகளைத் தெரியப்படுத்தியுள்ளேன். இப் பெண்கள் சார்பாக பல துறையினரிடம் (வெளிநாடுகளிலும்) உரையாடியுள்ளேன்.

**ஓர் ஆண் செய்யும் தவறை ஒட்டுமொத்த ஆணினத்தின் தவறாகக் கூறுவது சரியானது என எண்ணுகிறீர்களா?**

பிரச்சினை என்னவென்றால், பெண்களுக்கெதிரான வன்முறை சமூகத்தின் ஒரு தனி ஆணினால் ஏற்படும் போதும் ஆணாதிக்க சக்தி என்பது பல ஆண்களிடமே உள்ளது. நாளடைவில் எல்லோரிடமும் இந்தச் சக்தி வெளிப்படலாம். எனவேதான் நாம் இதனை ஆணாதிக்கத்தின் தவறாகப் பார்க்கின்றோம்.

**உங்களைப் போன்ற பெண்ணியலாளர்களின் காலத்தினைக் கடந்து இளம் தலைமுறையில் பெண்ணியலாளர் அருகிவிட்டதன் காரணம், பெண்களுக்கான பிரச்சினைகள் இல்லாமல் போய்விட்டதா? அன்றி இளம் தலைமுறையினரின் ஆர்வமின்மையா?**

இன்றைய இளம் தலைமுறையினருக்குப் பல பிரச்சினைகள் உள்ளன. சமூகத்தின் பிரச்சினைகளை ஆராயும் குணம் சிலருக்கே உள்ளது. தன்னலம் மட்டுமே குறியாகக் கொண்டவர்கள், குடும்பத்திற்கு கட்டுப்பட்டவர்கள், கணவனுக்காக, பிரச்சினைகளைக் கண்டு ஒதுங்கிவிடுபவர்கள் இப்படிப் பல ரகத்தில் உள்ளனர். இளம் பெண்களால் சமூகத்திடம் ஒரு கருத்தைக் கூறிவிட முடியாது. அதை சமூகம் ஏற்றுக்கொள்ளாது. ஒரு பெண்ணியலாளராய் - அதிலும் பெண்கள் செயற்பாட்டாளர் ஆவதற்கு முதிர்ச்சி வேண்டும்; சிறந்த பக்குவம் வேண்டும். இவ்வாறு வெளிப்படும் பெண்களை ஆண்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும். அவ்வாறு ஏற்றுக்கொள்ளப்பட்டவர்களே இன்று பெண்ணியலாளர்களாக மாறியுள்ளனர். பல பெண்கள் இவ்வாறு தம்மை வளர்ப்பதில் முனைந்துள்ளனர். காலப்போக்கில் பலர் பெண்ணியலாளர்களாக உருவெடுப்பார்கள். இதற்கு ஆர்வமின்மையோ, பெண்களின் பிரச்சினைகள் இல்லாமல் போய்விட்டதோ காரணமல்ல. காலம் பயிற்றுவித்துக்கொண்டிருக்கிறது. இவர்களை எமது சமூகம் ஏற்றுக்கொள்ளவேண்டும்.

**வீடு, சமூகம் என்னும் இரண்டையும் ஒரே மாதிரி பார்க்கின்றீர்களா? அல்லது வெவ்வேறு தலத்தில் நின்று பார்க்கின்றீர்களா?**

வீடு என்பது குறுகிய எல்லைப்படுத்தப்பட்ட ஒன்று. இந்தக் குறுகிய எல்லைக்குள் வாழவேண்டும் என்றே எல்லோரும் எதிர்பார்க்கின்றனர். வீட்டுப்பிரச்சினை வளரும்போதே சமூகப் பிரச்சினையாக மாறுகின்றது. சமூகப் பிரச்சினைக்குக் காரணம், வீட்டுப் பிரச்சினைகள்தான். வீடு, சமூகம் இரண்டும் வெவ்வேறு தளங்கள் என்றே கருதுகின்றேன்.

**பெண்ணியலாளர் சரோஜினி சிவச்சந்திரன் என்ற ஆளுமையின் பின்னால் யார், யார் உள்ளனர்?**

நான் மட்டுமே தான். சமூகம் கற்றுத்தந்த படிப்பினைகள், நான் பார்த்து நேசித்த பெண் ஆளுமைகள் இவை மட்டும்தான்.



**பெண் சகோதரிகளுக்குத் தாங்கள் யாது கூற விரும்புகின்றீர்கள்?**

பெண் சகோதரிகள், எமது கலாசார பண்பாடுகளைப் பின்பற்றி தாங்களே தமது தலைமுறையின் முன்மாதிரிகளாகத் திகழவேண்டும். பெண்ணியம் எனக் கூறி தீய விமர்சனங்களைப் பெற்றுவிடக்கூடாது. நல்ல விமர்சனங்களைப் பெறும் நோக்கில் செயற்படவேண்டும். நல்ல செயல்களைச் செய்து தமது அறிவை வளர்த்து குடும்பத்திலும், சமூகத்திலும் தமது அந்தஸ்தை உயர்த்திக்கொள்ள வேண்டும். குடும்ப அந்தஸ்து கூடும்போது சமூக அந்தஸ்து தானாக வரும். சமூக அந்தஸ்து கூடும்போது நாட்டின் அந்தஸ்து, கௌரவம் என்பன மெருகேறும். இவ்வாறு செயற்படும் அனைவரும் வெற்றி மங்கையர்களே என்றார். ●

# காதலில் கூட்டல், கழித்தல்



நான் காதலிப்பதே வேடிக்கைதான். அதிலும் நான் மூன்று காதலைத் தாண்டி வந்துவிட்டேன் என்பதை என்னாலேயே நம்பமுடியவில்லை. ஒரு காலத்தில் ரஜினி ஆக ஆசைப்பட்டேன். தற்போது அந்த ஆசை எல்லாம் இல்லை என்று சிம்பு தெரிவித்துள்ளார். இரு ஆண்டுகளாக சிம்புவின் படங்கள் எதுவும் வெளியாக வில்லை. இந்நிலையில், இந்த ஆண்டு அவரின் படங்கள் அடுத்தடுத்து வெளி யாக உள்ளன. இதனால் மகிழ்ச்சியில் உள்ளார்.

இந்நிலையில், நாளிதழ் ஒன்றுக்கு சிம்பு அளித்த நேர்காணலில், நயன், ஹன்சிகாவு டனான காதல் முறிந்துவிட்டதே என்று அதையே நினைத்துக்கொண்டிருக்க முடியாது. இதை உணர்ந்ததால்தான் என்னால் தற்போதும் ஹன்சிகா, நயன் தாராவுடன் நடிக்கமுடிகிறது. தற்போது காதல் ஒரு பிளஸ் மற்றும் ஒரு மைனஸ் ஆக உள்ளது. முன்பெல்லாம் காதல் தோல்வி அடைந்தால் அந்த பெண்ணை பழிவாங்கத் துடித்தேன். தற்போது அந்த எண்ணம் இல்லாமல் அடுத்த வேலையை கவனிக்கச் செல்வது பிளஸ். ஆனால், பலர் இஷ்டத்திற்கு ஜாலியாக காதலிக்கிறார்கள். அதை காதல் என்று வேறு தவறாக நினைப்பது தான் மைனஸ் என்றார்.

# 5 ஆண்டுகளுக்குப் பிறகு...



குழந்தை பிறந்த பின், ஐஸ்வர்யாராய் சினிமாவை விட்டு கடந்த 5 வருடங்களாக ஒதுங்கி இருந்தார். 5 வருட இடை வெளிக்குப்பின் அவர் மீண்டும் நடிக்க ஆரம்பித்துள்ளார். பிரபல இந்தி பட அதிபர் சஞ்சய் குப்தா தயாரிக்கும் படத்தின் மூலம் அவர் மறுபிரவேசம் செய்கிறார். ஐஸ்வர்யாராயுடன் இர்பான் கான், ஷபனா ஆஸ்மி ஆகியோரும் இந்த படத்தில் நடிக்கிறார் கள். படப்பிடிப்புக்கு ஐஸ்வர்யாராய் தினமும் 12 பாதுகாவலர்களு டன் வருகிறாராம். அவர் வீட்டில் இருந்து புறப்படும்போதே பாது காவலர்களும் கூடவே படப்பிடிப்பு தளத்துக்குள்ளும் அவர்கள் வந்துவிடுகிறார்கள். படப்பிடிப்பு இடைவேளை சமயங்களில் ஐஸ்வர்யாராய் சக நட்சத்திரங்களுடன் அமர்ந்து பேசிக்கொண்டிருக் கும்போது, பாதுகாவலர்கள் அவரைச் சூழ்ந்து நிற்கிறார்களாம். இந்த அளவுக்கு ஐஸ்வர்யாராய்க்கு பலத்த பாதுகாப்பு போடப் பட்டிருப்பது ஏன்? என்று விசாரித்தபோது, ரசிகர்கள் தொந்தரவைத் தவிர்க்கவே இத்தனை ஏற்பாடு என்று பதில் கிடைத்தது. இந்த பாதுகாவலர்களுக்கான செலவு மட்டும் ரூ. 40 லட்சம் ஆகிறதாம். இந்த செலவை யார் செய்கிறார்கள் தெரியுமா...? அமிதாப் பச்சன் குடும் பத்தினர் அல்ல; ஐஸ்வர்யாராய் நடிக்கும் படத்தின் தயாரிப்பாளர்!




சிறிது நேரத்துக்குள அவனது முகமோ வலியின் வடுக்களைச் சுமந்துவிட்டிருந்தது. எதுவும் பேசத் தோன்றாது மெல்ல நிமிர்ந்தான்.

யோசனையோடு நண்பனை நோக்கிய தீபக், காரை மதுவிழி பவனம் நோக்கித் திருப்பினான்.

அஸ்வந் தடுமாறியது சில நிமிடமே. மறுநொடியே ஸ்வேதா மேடத்துடனான சந்திப்புக்கு அவரிடம் அனுமதி பெற்றுவிட்டிருந்தான்.

வாசலில் மறித்த காவல்காரனிடம் மேடத்திடம் அனுமதி பெற்றுவிட்டதாகக் கூறியவன் தனது செல்போனை எடுத்து இலக்கத்தை அழுத்த ''சரி. சரி உள்ள போங்க'' என அனுமதித்த காவல்காரனிடம் அன்பாகப் புன்னகைத்தபடி. கூடவந்த தீபக் அஸ்வந்திடம் எதுவுமே பேசவில்லை.

வாசலில் நின்று அவர்கள் வருவதைப் பார்த்த மதுவிழியின் உடலெங்கும் புது இரத்தம் பாய்ந்தது. அஸ்வந்தையே கண் இமைக்காது பார்த்துக்கொண்டிருந்தவள் 'மது' என்ற அத்தையின் குரல்கேட்டு புள்ளி மானாய் துள்ளி மறைந்தாள்.

தனது அறையில் நின்றவாறே ஜன்னலினூடாக அஸ்வந்தையும் தீபக்கையும் பார்த்தவள், வாடிப்போன அஸ்வந்தின் முகத்தைப் பார்த்ததும் ஒருகணம் தவித்துப்போனாள். தனது நிலையிலேயே அவனும் இருக்கிறான் என எண்ணியபடி அவனைச் சீண்டிப் பார்ப்பதற்காக வெளியில் எங்கும் செல்லாது அப்படியே நின்றாள். அப்போது அருகிலிருந்த வானொலியில் 'நில்லடி என்றது உள்மனது செல்லடி என்றது பெண்மனது'' எனும் வரிகள் காற்றலையில் தவழ்ந்து வந்தன.

ஸ்வேதாவிடம் தொழில் விடயங்களைப் பேசிவிட்டு எழுந்துகொண்ட அஸ்வந் சுற்றுமுற்றும் கண்களை ஓடவிட்டான். கண்ணிலேயே தென்படாத மதுவிழி மீது கோபம்கூட ஏற்பட்டது. ஏமாற்றத்தின் வலி கண்ணுக்குள் பிரதிபலித்தது. பெரிய மூச்சுகளை எடுத்துவிட்டுக்கொண்டான்.

அஸ்வந்தின் கண்ணில் தோன்றிய வலியை மதுவிழியால் தாங்கிக்கொள்ள முடியவில்லை. வைன் கொடுக்கப்பட்ட பொம்மைபோல மாடிப்படிகளில் தாவி

வந்தவள், ''கூப்பிட்டீங்களா அத்தை?'' என்றபடி ஸ்வேதாவின் முன்னால் போய் நின்றாள்.

''இல்லையே நான் கூப்பிடவில்லை'' என்ற ஸ்வேதா அருகிலிருந்த கைப்பையில் இருந்து சில தாள்காசுகளை எடுத்துக் கொடுத்து, ''காவல்கார ஐயாவோட சம்பளப்பணம் கொடுத்திட்டு வா'' என்றார்.

பணத்தைப் பெற்றுக்கொண்ட மதுவிழி வாசல் நோக்கி நடந்தாள். மதுவிழியை மீண்டும் அழைத்த ஸ்வேதா, ''அவரோட மனைவிக்கு சுகயீனமுன்னு சொன்னார். இப்ப எப்படி சுகமா?'' எண்டும் கேட்டு வாம்மா என்றார்.

ஒரு காவலாளியிடம்கூட இவ்வளவு அன்பும், கரிசனையும் கொண்ட ஸ்வேதா மேடத்தை எண்ணியபோது அஸ்வந்தால் மனதுக்குள் பாராட்டாமல் இருக்க முடியவில்லை. ''சே இவ்வளவு அன்பானவராக இருந்தும் என்ன பிரயோசனம். அந்தத் தவறு மட்டும் செய்யாமல் இருந்திருந்தால்'' என மனதிற்குள் ஓடிய எண்ணங்களைக் கட்டுப்படுத்திக்கொண்டு ''ஓ.கே. மேடம். நாங்கள் வருகிறோம்'' எனக் கூறிவிட்டுப் புறப்பட்டனர்.

காவல்காரனிடம் பேசிக்கொண்டிருந்த மதுவிழி சற்றுத்தூரத்தில் அஸ்வந்தைக் கண்டதும் தலையைக் கவிழ்ந்து கொண்டாள். அவனோடு பேசத்துடித்த நாவை சிரமப்பட்டு அடக்கிக்கொண்டாள். கால்கள் இரண்டும் மெல்ல நடுங்கின. இதயத்துடிப்பின் ஒலி வெளியே கேட்டுவிடும்போல இருந்தது. தனது உடலின் அங்கங்கள் ஏன் இப்படி பரபரக்கின்றன? என அவளுக்கே புரியவில்லை.

காவல்கார ஐயாவிடம் விடைபெற்றுக்கொண்டு காரில் ஏறி அமர்ந்துவிட்டு மெல்ல நிமிர்ந்த அஸ்வந், ஓரவிழிகளில் நீர்துளிர்க்க நிமிர்ந்து பார்த்த தனது காதல் நாயகியின் பார்வையில் சிக்குண்டு நின்றான். அந்தக் கணத்தில் அவள் ஆயிரம் வார்த்தைகள் பேசியதுபோல இருந்தது அஸ்வந்துக்கு. மெல்ல அரும்பிய அந்த நீர்த்துளிகள் அவளது காதலின் ஆழத்தைச் சொன்னது.

இருவரையும் பார்த்த தீபக்கின் உதடுகளில் சின்னச் சிரிப்பொன்று மலர்ந்தது. நண்பனின் தோளைத் தட்டிவிட்டு மதுவிழியிடம் திரும்பி, ''போயிற்று வாறோம்'' - என்றான்.

''சரி அண்ணா'' - என்றாள் புன்னகையோடு.

'அண்ணா' என்ற அவளது அழுத்தமான வார்த்தையைக் கேட்டதும் ஒருகணம் சிலிர்த்தான் தீபக். இத்தனை அன்புடன் அவனை எவரும் அப்படி அழைத்ததில்லை. மதுவிழியை நன்றாகப் பார்த்துவிட்டு அன்பாய் புன்னகைத்தான்.

அவ்வேளை, ஸ்வேதாவின் குரல்கேட்க, ''வாரேனத்தை'' - என்றபடி மின்னலாய் மறைந்தாள்.

அஸ்வந்தைக் கண்டதும் தலையைக் கவிழ்ந்து கொண்டாள். அவனோடு பேசத்துடித்த நாவை சிரமப்பட்டு அடக்கிக் கொண்டாள்.

அண்ணா என அழைப்பதற்கு உறவே இல்லாதிருந்த தீபக்கிற்கு மதுவிழியின் 'அண்ணா' என்ற வார்த்தை சொல்லமுடியாத சுகத்தைத் தந்தது. ''ஆஹா இப்பிடி ஒரு தங்கச்சி மட்டும் எனக்கிருந்தா'' என எண்ணிவிட்டு தனக்குள் சிரித்துக்கொண்டான்.

''என்ன தீபக் தானா சிரிக்கிறே? நல்லாதானே இருந்தே. எப்ப இப்பிடி ஆச்சு?'' என்றான் அஸ்வந். சீரியசாக நண்பனை முறைத்த தீபக்,

''ஓகே. ஓகே. தமாஷ்'' - என்ற அஸ்வந்திடம் ''இல்லடா மதுவிழி அண்ணான்னு சொன்னதும் மனசில ஏற்பட்ட சுகம் இருக்கே... அப்பப்பா... எனக்கும் இப்பிடி ஒரு தங்கச்சி இருந்தா எப்படி இருக்கும்னு நினைச்சேன். சந்தோஷத்தில சிரிப்பு வந்திட்டுதுடா'' - என்றான்.

''அதுக்கென்ன தீபக் துவியையே தங்கச்சியா நினைச்சுக்கோ. உனக்கு தங்கச்சி ஆகிற தகுதி அவளுக்கு இல்லையா என்ன?''

''என்னடா சொல்ற நீ... அவ... அவ... தீபக் பாசம் என்றது பாகுபாடு பாத்து வாறதில்லை. அன்பை ஆள்பாத்து செலுத்த

முடியாது. அவ அண்ணான்னு சொன்னதும் உனக்குள்ள ஏற்பட்ட இன்பம் உன்னோட அனுமதியோடயா வந்திச்சு? இல்லைத் தானே. இதத்தான் பாசம் என்பது. அண்ணான்னு சொன்ன அந்த நொடியே உன் தங்கச்சியா மாறிட்டா. நீயும் ஏத்துகிட்டே. அதுதான் நிஜம்'' - எனக்கூறிய அஸ்வந்தை வியந்துபோய் பார்த்தான் தீபக்.

''இப்ப என்ன மது என்னோட தங்கச்சி அவ்வளவுதானே. அண்ணான்னா தெரியுமில்ல. அவ நல்லது, கெட்டதெல்லாம் நான் பாக்கணும் ஓகேயா?''

''ஓகே. ஓகே'' - என்ற அஸ்வந்தை சோகமாய் பார்த்தான் தீபக். ''ஏன்டா அஸ்வந் சின்ன வயசில இருந்து எப்பவுமே பிரியாத என்னை இவ்வளவு தூரம் பிரிக்கிறே? என்னைத் தள்ளிவிடுறதில உனக்கென்ன சந்தோஷம்?''

''டேய்... உன்னையும், என்னையும் பிரிக்க எப்பவுமே எவராலயுமே முடியாது. கவலைப் படாத. என்னாலதான் துவிக்கு ஒரு நல்ல துணையா இருக்கமுடியாது. உன்னை மாதிரி நல்ல அண்ணனாவது கிடைக்கட்டுமே. பிளீஸ்டா.''

''ம். ஓகே'' - என்றான் தீபக் புன்னகையுடன்.

செல்போனில் தனது படத்தையும், சற்று முன் எடுத்த அஸ்வந்தின் படத்தையும் இணைத்துப் பார்த்த மதுவிழி நாணத்தால் சிவந்துபோனாள்.

அத்தைக்குத் தெரியாமல் எதையுமே செய்தறியாத என்னை இப்படி குற்றவாளியாக்கிய திருடா, நீ என்ன செய்துகொண்டிருக்கிறாய். என்னைப்போல கனவு காண்கிறாயோ?'' எனத் தன்னையறியாமல் பேசியபடியே உறங்கிப்போனாள்.

''ஆன்ரி சம்யு இல்லையா'' - எனக்கேட்டபடி உள்ளே நுழைந்தாள் மதுவிழி. செடிகளுக்கு நீர் ஊற்றியபடி நின்ற சம்யுக்தாவின் தாயார், ''அடடா... மதுவிழியா.... வாம்மா சம்யு குளிக்கிறா இரும்மா கூப்பிடுறேன்'' - என்றபடி உள்ளே செல்ல ''இல்ல ஆன்ரி. அவ குளிக்கட்டும். நானே உள்ள போறேன். நீங்க செடிக்குத் தண்ணி ஊத்துங்க'' என்றபடி குளியலறை நோக்கி நடந்தாள்.

அப்போதுதான் குளித்து முடித்து வெளியே வந்த சம்யுக்தா, தோழியைக் கண்டதும் ''என்ன மது இப்பிடி திடுதிப்பென வந்து நிக்கிறாய்? ஓ. அதுதான் மழைவேற இருட்டிற மாதிரி இருக்கு'' - என ஜோக்கடித்தவள் மதுவிழியின் முகத்தில் தெரிந்த யோசனையைப் பார்த்ததும் ''என்னடி...?'' என்றாள் சீரியசாக.

''வெளிய போய் வரலாம் வாரியா சம்யு?'' - என்ற மதுவிழியிடம் ''இதோ பத்து நிமிசத்தில வாறன் இரு'' - என்றபடி அவசரமாய் அறைக்குள் நுழைந்தாள். சொன்னபடியே பத்தே நிமிசத்தில் ரெடியாகி வந்தவள், ''அம்மா... மது வீட்டுக்கு போய்வாறன்'' - என்றபடி மதுவிழியோடு கூட நடந்தாள்.

''சொல்லு. எங்க போகலாம்?'' - என்ற சம்யுக்தாவிடம் ''வா பக்கத்தில இருக்கிற பாக்கில இருந்திட்டு வீட்டுக்குப் போகலாம்'' - என்றாள்.

அன்று ஞாயிற்றுக்கிழமை என்பதால் அந்தப் பூங்கா சிறார்களால் நிரம்பி வழிந்தது. குழந்தைகள் விளையாடுவதையே பார்த்தபடி பேசாமல் இருந்த மதுவிழியிடம்,

''என்ன மது, என்ன பேசணும்? இப்படி எதுவுமே பேசாம இருந்தா...''

''சம்யு... எப்பிடி சொல்றதுன்னுதான் புரியல'' - என்றவள், சிறு மௌனத்தின் பின் ''அஸ்வந் தெரியுமா'' - என்றாள். ''இல்லையே'' - என்ற சம்யுக்தாவிடம்,

அவன் அலுவலகம் வந்த நாளில் இருந்து ஒன்றும் விடாமல் கூறினாள்.

''ஏய்... அஸ்வந்தை லவ் பண்றியா?... - என்ற சம்யுக்தாவிடம்,

''இதுதான் காதலான்னு எனக்குப் புரியல சம்யு. ஆனா அஸ்வந்தை பாக்கணும், அவரோட பேசணும்னு மனம் துடியா துடிக்குது. அத்தைக்கு தெரியாம இப்பிடி பண்றது தப்புன்னு தெரியும். ஆனா... தவிர்க்க நினைச்சாலும் அஸ்வந்தோட நினைவுகள் என்னை விட்டு மறையிறதா இல்ல. என்ன பண்றதுன்னே புரியலடி'' - எனக்கூறிவிட்டு தலையைக் கவிழ்ந்துகொண்டாள்.

''மது... காதல்னா இதுதான்னு எனக்கும் சரியா தெரியாது. ஆனா புக்சில படிச்சிருக்கேன். ஏன்டி உன்னை இப்பிடி வதைக்கிறே. போன் பண்ணி அஸ்வந்தோட பேசு'' - என்றாள்.

''அப்ப பேசட்டுமா...?'' - எனக் கேட்டபடி நிமிர்ந்தவள், தூரத்தில் தீபக்குடன் பேசியபடியே குழந்தைகளுடன் விளையாடிக்கொண்டிருந்த அஸ்வந்தைக் கண்டதும் அப்படியே விழிவிரித்தபடி அமர்ந்திருந்தாள்.

(தொடரும்...)

# நிறுத்தங்களில் நிற்காத ரயில்

அதிவேக ரயில் பயணங்களை வழங்குவதில் சீன ரயில்வே துறையை மிஞ்ச முடியாது. தற்போது ரயில்களின் பயண நேரத்தை குறைப்பதற்காக புதிய தொழில்நுட்பத்தை கண்டுபிடித்துள்ளது.

ரயில் எந்த ஸ்டேசனிலும் நிற்காமல் ஓடிக்கொண்டிருக்கும்போதே பயணிகள் ஏறுவதற்கும் இறங்குவதற்கும் வழி கண்டுபிடித்துள்ளனர்.

ஒரு ஸ்டேசனில் ரயில் நின்று செல்ல ஐந்து நிமிடம் ஆகிறது என்றால், வழியில் 30 ஸ்டேசன்கள் இருக்கும்பட்சத்தில் 150 நிமிடங்கள் ஆகும்.

அதாவது, சுமார் இரண்டரை மணி நேரம் இதன் மூலம் செலவாகும். இதை மிச்சப்படுத்தலாம் என்கிறது சீன ரயில்வே.

இந்த தொழில்நுட்பத்தின்படி ரயில் எந்த ஸ்டேசனிலும் நிற்கத் தேவை யில்லை. ரயில் பெட்டியின் மேல்பாகத்தில் தனியாக ஒரு இணைப்புப் பெட்டி உள்ளது. ஒரு ஸ்டேசனில் இறங்க




வேண்டிய பயணிகள் அந்த பெட்டிக்கு சென்றுவிட வேண்டும்.

ஸ்டேசன் வந்ததும் மேலே உள்ள அந்தப் பெட்டி மட்டும் தனியாக கழன்று ஸ்டேசனில் நின்றுவிடும். அதுபோல ஏறவேண்டிய பயணிகள் ஸ்டேசனில் தயாராக இருக்கும் பெட்டிக்கு சென்றுவிட வேண்டும்.

ரயில் அந்த ஸ்டேசனை கடக்கிறபோது ரயிலில் மேல்பகுதியில் இந்த பெட்டி இணைந்துகொள்ளும். இதற்கென சிறப்பு வடிவமைப்பை மேற்கொண்டு வருகிறது.

# ரோபோ சிப்பந்தி



ஜப்பானில் ஒரு ஹோட்டலில் ரோபோவை வேலைக்கே அமர்த்தி விட்டனர். ஜூலை மாதத்திலிருந்து இந்த ரோபோ தனது கடமையை ஆற்ற உள்ளது. அசல் பெண் பணியாளரைப் போல வடிவமைக்கப்பட்டுள்ள இந்த ரோபோ, விருந்தினர்களை வரவேற்பது, அவர்களை சோதனையிடுவது உள்ளிட்ட பணிகளை மேற்கொள்ளவிருக்கிறது. ஜப்பான் மொழி தவிர ஆங்கிலம், சீன, கொரிய மொழிகளையும் புரிந்து கொண்டு பதிலளிக்கும். தவிர விருந்தினர்களது உடைமைகளை எடுத்துச் செல்வது, காபி தயாரிப்பது உள்ளிட்ட பணிகளையும் செய்யும். இதன் மூலம் ஓட்டல் நவீனமயமாகும் என்றும், செலவுகள் குறையும் என்றும் குறிப்பிட்டுள்ளது அந்த ஹோட்டல் நிர்வாகம்.

# தினப் பத்திரிகைகள் படிக்கும் பெண்கள் எத்தனை பேர்?

ஆயிரக்கணக்கான மக்கள் முன்னிலையில் ஒரு வழக்காடு மன்றம் நடந்துகொண்டிருந்தது. எனக்கு நீதிபதி பொறுப்பு. 'குடும்ப வாழ்வின் வெற்றியைத் தீர்மானிப்பவர் ஆண்களா? பெண்களா?' என்பது தலைப்பு. பெண்களைத் தாக்கிப் பேசிய பேச்சாளர் ஒரு வெடிகுண்டை வீசினார். எப்படி?

''பெண்களுக்குப் பொது அறிவு கிடையாது'' என்றார். அதிர்ச்சியுடன், ''என்ன?'' என்றேன். பேச்சாளர் நிதானமாக, ''பொது அறிவு என்ன பொது அறிவு...? பொதுவா அறிவே கிடையாது?'' என்று குற்றம் சாட்டிப் பேசினார். சபை சிரித்தது. என்னால் சிரிக்க முடியவில்லை.

கோபம் வந்தது. ''கவனமாகப் பேசுங்கள்'' என்று எச்சரித்தேன். ஆனால், அவர் கூறிய காரணங்கள் என்னை அசைக்கத் தொடங்கின. ''வாரப் பத்திரிகை, மாதப் பத்திரிகை படிக்கிற பெண்கள் அதிகம். ஆனால், தினப்பத்திரிகை படிக்கிற பெண்கள் எத்தனை பேர்...? நாட்டு நடப்பு பற்றி எத்தனை பெண்கள் அக்கறை காட்டுகிறார்கள்?'' என்று கேட்டார். மிகவும் யோசிக்கவேண்டிய விஷயம்.

அதைவிட தொலைக்காட்சிப் பெட்டியில் சினிமா பார்க்கும்போது குடும்பமே பார்க்கிறது. ஆனால், செய்திகள் தொடங்கியதும் பெண்கள் அடுப்படிக்குள் பாய்ந்து உணவைத் தயார் செய்வது ஏன்? செய்தி நேரம் வந்ததும் சினிமாவில் இடைவேளை மாதிரி அதைச் சாப்பாட்டுக்குப் பயன்படுத்த பல பெண்கள் விரும்புவது உண்மைதானே! இது சரிதானா? செய்தி நேரம் என்ன சினிமா இடைவேளையா? இப்படி இருந்தால் நாடு உருப்படுமா? என்றார்.

யோசிக்க ஆரம்பித்தேன். படித்த பெண்கள், அலுவலகம் போகிறவர்கள் இந்தக் குற்றச்சாட்டுக்கு விதிவிலக்கு என்று நம்பினேன்.



ஆனால், என் நம்பிக்கையை உலுக்கிவிட்டது ஒரு தொலைபேசி அழைப்பு. அப்போது நான் தொலைக்காட்சி செய்தி பார்த்துக்கொண்டிருந் தேன். செய்தி வாசிப்பவர் எனக்கு நன்றாகத் தெரிந்தவர். அவர் என் குடும்ப நண்பரும்கூட. அப்போது என் தொலைபேசி அலறியது. யாராக இருக்கும் என நினைத்துக்கொண்டு பேச ஆரம்பித்தேன்.

எதிர் முனையில் என் நண்பரின் மனைவி, ''அந்த செய்தி வாசிப்பாரும் உங்கள் நண்பர் தானே...?'' என்றார். ''ஆம்... எதற்காகக் கேட்கிறீர்கள்?'' என்றேன். ''வழக்கமாகக் கழுத்தைப் போர்த்திக்கொண்டு செய்தி வாசிப்பார். இன்று அப்படிப் போர்த்த வில்லை. அவர் கழுத்தில் போட்டிருக்கும் ஒரு முத்து மாலையைப் பார்த்தீர்களா? அது இயற்கையான முத்தா... அல்லது செயற் கையா? எங்கே கிடைக்கும்? என்ன விலை என்று விசாரிச்சுச் சொல்ல முடியுமா?'' என்றார்.

செய்தியைவிட செய்தி வாசிப்பவரை வாசிக்கும் அம்மணி கலாநிதிப்பட்டம் பெற்றவர் போதுமா? நான் அதிர்ந்து போனேன். பெண் விடுதலை, பெண் முன்னேற்றம் குறித்த முயற்சிக்கு இத்தகைய குணநலன்கள் நல்லதுதானா என்று இப்போது யோசிக்கி றேன். வாழ்க்கையை வண்ணப்படுத்துவது பெண்மை. அதற்கு அழகுணர்ச்சி இருப்பது அவசியம். அழகுப் பொருள்கள், அலங்காரப் பொருள்கள் மீதான பெண்களின் ஈடுபாட்டை நான் இவ்வளவு நாளாக எதிர்ப்பது இல்லை. ஆனால், இப்போது என் கருத்து மறுபரிசீல னைக்குரியது என்றே கருதுகிறேன்.

பெண்களின் அழகுணர்ச்சிக்கான விலை இன்று மிக மிக அதிகம். காலக் கொலையோ அதைவிட அதிகம். எப்படி? நகங்களை வண்ணப் படுத்தி, பழைய வண்ணங்களை நீக்கிப் புதுவண்ணம் பூச நெயில் பாலிஷ், ரிமூவர்; உதடு களை உயிர்ப்பேற்ற உதட்டுச் சாயம் (லிப்ஸ் டிக்), கன்னங்களில் கவர்ச்சி கூட்ட ரூஜ், கண்ணிமைகளைப் பெரிதுபடுத்தி அழகைக் கூட்ட மஸ்காரா, அழகாய்க் காட்ட ஐ லைனர், கழுத்தை, முகத்தைக் கழுவிக் காட்ட கிளென்சிங் மில்க், மாஸ்க் ப்ளீச், தோலின் இயற்கை மணத்தை வாசனையில் புதைக்க பாடி ஸ்ப்ரே மற்றும் சென்ட் வகைகள், கொண்டை தொடங்கி கெண்டைக்கால் வரை 'மாட்சிங்' பார்த்து அலங்கரிக்கத் தேவையான விதவிதமான உபகரணங்கள் (க்ளிப், ரிப்பன், பான்ட், விதவிதமான செருப்புகள்).

பொருட்செலவும் நேரச் செலவும் இவ்வளவு தேவையா? யோசியுங்கள். அறிவார்ந்த விஷயங்களில் அதிக கவனம் செலுத்துங்கள். அதற்காக மம்தா பானர்ஜியாகவும், மாயா வதியாகவும் மாறச் சொல்லவில்லை. கொஞ் சம் சிக்கனம்... தேவை இக்கணம்.

எல்லா நாடுகளிலும் இந்த வியாதி இருக் கிறது. உதாரணம் சொல்கிறேன். அமெரிக் காவில் பல விஞ்ஞானிகள் பங்கேற்ற விருந்து ஒன்றினுக்கு உலகப் புகழ்பெற்ற விஞ்ஞானி ஐன்ஸ்டீன் போயிருந்தார். அவர் மனைவி அவருடன் போகவேண்டியவர். போக முடிய வில்லை. கடைசி நேரத்தில் உடம்பு சரியில்லை. விருந்து முடிந்து வீட்டுக்குத் திரும்பிய ஐன்ஸ்டீனிடம் அவர் மனைவி கேட்டார்...

''விருந்து எப்படி நடந்தது?''

''நன்றாக இருந்தது'' என்று சுருக்கமாகக் கூறிவிட்டு அங்கு தாம் சந்தித்த விஞ்ஞானிகள் பற்றியும் அவர்களுடன் விவாதித்த அறிவு பூர்வமான விஷயங்கள் பற்றியும் ஆவலுடன் ஐன்ஸ்டீன் சொல்லத் தொடங்கினார். அவர் மனைவிக்குப் பிடிக்கவில்லை. முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடிக்க, 'நான் இந்த அறுவையைக் கேட்கவில்லை. அங்கு விருந் துக்கு வந்திருந்த பெண்கள் எந்த எந்த மாதிரி கவுன் அணிந்திருந்தார்கள்... கவனித்தீர்களா?' என்று சீறினார்.

ஐன்ஸ்டீன் பொறுமையாக, ''இதோ பார்... விருந்து மேஜைக்கு மேலே பெண்களின் முகம் மட்டும்தான் தெரிந்தது. அதனால் அவர்கள் அணிந்துவந்த ஆடை எப்படிப்பட்ட ஆடை எனக்குத் தெரியாது. உனது விருப்பத்தை நிறைவேற்ற வேண்டுமென்றால் நான் மேஜையின் கீழே குனிந்து பார்த்திருக்க வேண்டும். அது அவ்வளவு கௌரவமாக இருக்காது'' என்றார்.

பெண் பிள்ளைகளுக்கு ஒன்று சொல்கி றேன். நீங்கள் சில விஷயங்களுக்கு அடிமை களாக இருக்கும் வரை ஆண்கள் உங்களை அடிமைகளாக வைத்திருப்பார்கள். அந்த அடிமைத்தனத்திலிருந்து நீங்கள் வெளிவந்து விட்டால் ஆண்களால் உங்களை அடிமைப் படுத்தவே முடியாது. என் பெண்மக்களே... என் அக்கறையைப் புரிந்துகொள்ளுங்கள். புரிந்துகொண்டால் வெற்றி நிச்சயம்! ●

# தலை சீவும் போது கவனிக்க வேண்டியவை



தலைக்கு குளித்தவுடன் கூந்தலை சீவவேண்டாம். ஏனெனில், கூந்தலானது ஈரமாக இருக்கும்போது சீவினால் முடியில் முடிச்சுகள் மற்றும் சிக்குகள் அதிகமாக இருக்கும். இந்த நிலையில் சீப்பை கொண்டு சீவினால் முடியானது கொத்தாக வேரோடுதான் வரும்.

கூந்தலை சீவும்போது மண்டை ஓட்டில் நன்கு பதியும்படி நன்கு சீவவேண்டும். கூந்தலும், தலைச்சருமமும் ஒன்றல்ல. ஆகவே, கூந்தலை சீவும்போது தலைச்சருமத்தில் நன்கு படும்படி சீவினால் தலைச்சருமத்தில் இரத்த ஓட்டம் அதிகரித்து மயிர்க்கால் நன்கு வளரும். இவ்வாறு தினமும் செய்தால் கூந்தலானது நன்கு ஆரோக்கியமாக வளரும்.


கூந்தலை முதலில் சீவ ஆரம்பிக்கும்போது கூந்தலின் முனையில் இருந்து ஆரம்பிக்க வேண்டும். ஏனென்றால், கூந்தலில் முடிச்சுகளானது முனையிலேயே அதிகமாக இருக்கும். ஆகவே, அப்போது முதலில் இந்த முடிச்சுகளை அகற்றிப் பின் ஆரம்பித்தால் கூந்தல் உதிராமல் இருக்கும். இல்லையென்றால் கூந்தல் வேரோடுதான் வரும்.

மேலும் கூந்தலை இறுக்கமாக கட்டக்கூடாது. நிறைய பேர் இந்த மாதிரியே கூந்தலை கட்டுகின்றனர். கூந்தலை போனி டைல் போடக்கூடாது. அப்படி போட்டால் முடியானது இடையில் கட் ஆகி உதிரும்.

# லிப்ஸ்டிக் போடுவதால் ஏற்படும் பாதிப்புகள்

லிப்ஸ்டிக் பயன்படுத்தும்போது, அதில் உள்ள ரசாயனங்களால், நிறைய பிரச்சினைகள் ஏற்படும் என்பது பெண்களுக்குத் தெரியும். இருந்தாலும், உதட்டழகை மெருகேற்றுவதில் ''லிப்ஸ்டிக்'' தவிர்க்க முடியாத ஒன்று. தரமான 'லிப்ஸ்டிக்'குகளை அடையாளம் காண்பது எப்படி?

லிப்ஸ்டிக்கில், குரோமியம், காட்மியம், மற்றும் மக்னீசியம் அதிக அளவில் உள்ளன. இதை பயன்படுத்தும்போது, கடுமையான நோய்க்கு உடல் ஆளாவதோடு, உடல் உறுப்புகளும் பாதிப்படையும் என்கின்றனர். அதிகப்படியான காட்மியமானது, சிறுநீரகத்தில் படிந்தால், அவை நாளடைவில் சிறுநீரக செயலிழப்பை ஏற்படுத்திவிடும்.



ஒரு நாளைக்கு, பலமுறை லிப்ஸ்டிக் போட்டு வந்தால், வயிற்றில் கட்டிகள் வளரும்! பெரும்பாலான லிப்ஸ்டிக்குகளில் இருக்கும் 'ஈயம்', நரம்புகளின் செயல்திறனை பாதிக்கும். இதனால் மூளையில் பாதிப்பு ஏற்படவும் வாய்ப்புண்டு மேலும், ஹார்மோன் ஏற்றத் தாழ்வுகளும், மலட்டுத்தன்மையும் கூட ஏற்படலாம்!

இவை தவிர, 'லிப்ஸ்டிக்' தயாரிப்பில் பயன்படுத்தப்படும் பெட்ரோ கெமிக்கல்கள், பாராபின்ஸ் மற்றும் பிஸ்மத் ஆக்ஸிகுளோரைடு உள்ளிட்டவை, நாளமில்லா சுரப்பிகளில் சீர்குலைவை ஏற்படுத்தி, இனப்பெருக்கம் மற்றும் வளர்ச்சியை தடுக்கும்! மொத்தத்தில், எவ்வளவு தரமான லிப்ஸ்டிக்காக இருந்தாலும், குறைவான உபயோகமே உடல்நலத்திற்கு நல்லது!



# கண்ணாடி அணியும் பெண்களுக்கு...

மூக்கு கண்ணாடி எமது அன்றாட வாழ்க்கையில் அவசியமான பொருளாக மாறிவிட்டது. கண்ணாடி அணியும் பெண்கள் தங்கள் கண்களுக்கு எவ்வாறு மேக் அப் போடலாம் என்பதை பார்க்கலாம்.

கண்ணாடிக்கு நல்ல ப்ரேம் பயன்படுத்த வேண்டும். இதனால் கண்ணாடி அணிந்திருக்கும் உங்களின் கண்கள், கறை மற்றும் கழுவுதல் இல்லாமல் சரியாக இருக்கும். கண் இமை ரோமங்களை சுருட்டி விடுங்கள். பலவிதமான கலரில் மஸ்காராவை பயன்படுத்த வேண்டும் என்றில்லை. அடிப்படை கர்லர் ஒன்றே போதும் உங்கள் பணியை திறம்பட செய்துமுடித்திட. இதனால் கண்ணாடி அணிந்திருக்கும் பெண்களின் கண்களுக்கான மேக்-அப் சிறப்பாக அமையும்.

முடிந்தால் ஐ-ஷேடோ போடுவதை தவிர்க்கவும். அதற்கு காரணம், அது உங்கள் கண்ணாடியின் பின்புறத்தை நசநசவென ஆக்கிவிடும். கண்ணாடி அணிந்திருப்பவர்கள் தங்கள் கண்களுக்கு மேக் அப் போடும்போது இதனை தவிர்க்க வேண்டும். நல்ல ஐ-லைனரை பயன்படுத்துங்கள். பூனை கண் வடிவம் அல்லது இறக்கை வடிவம் போன்ற பல விதமான வடிவங்களை முயற்சித்து பாருங்கள்.

கண்ணாடி அணிந்திருக்கும் நீங்கள் கண்களுக்கு மேக்-அப் செய்யும்போது, நீங்கள் அணிந்திருக்கும் கண்ணாடி வகை (மெல்லியது அல்லது தடியானது) என்பதை தெளிவாக கூறவேண்டும். ஒருவேளை உங்கள் கண்கள் பெரியதாக தெரிந்தால், அளவுக்கு அதிகமாக ஐ-லைனரை பயன்படுத்தாதீர்கள். அதனை லேசாக போட்டு கண்களை சின்னதாகவும், மென்மையானதாகவும் காட்டுங்கள்.


கண்ணாடி அணிந்தவர்கள் கண்களுக்கு மேக் அப் போடும்போது அதிக முயற்சி இல்லாமல் இது உங்கள் முக தோற்றத்தை உயர்த்தி காட்டும். கண்ணாடி அணிந்தவர்கள் கண்களுக்கு மேக் அப் செய்யும்போது கன்னங்களில் பிங்க் நிற ப்லஷரை பயன்படுத்தினால் உங்கள் தோற்றம் பனித்துளியை போல அழகாக காட்சியளிக்கும்.

# முகத்தை ஜொலிக்க செய்யும் மாஸ்க்

ஒரு தேக்கரண்டி வெள்ளரிக்காய் விழுது, ஒரு தேக்கரண்டி கடலை மாவில் தயிர், சிறிதளவு தேன் மற்றும் பன்னீரை கலந்து முகத்தில் தடவிவந்தால், சருமத்தின் இறுக்கம் குறைந்து இலகுவாகி சருமம் புத்துணர்ச்சியுடன் இருக்கும்.

நன்குக் காய்ச்சியப் பாலில் இருந்து எடுக்கப்பட்ட பாலாடையை இரவு தூங்குவதற்கு அரைமணி நேரத்திற்கு முன்பு மாஸ்க் போல முகத்தில் உபயோகப்படுத்தி பின் குளிர்ந்த நீரில் முகம் கழுவினால் முகம் பிரகாசிக்கும்.

தினமும் காலை மற்றும் மாலை வேளைகளில் முல்தானி மெட்டியை பன்னீரில் கலந்து முகத்தில் தடவி காய்ந்த பின் குளிர்ந்த நாளில் முகம் கழுவி வந்தால் முகத்தில் இருக்கும் கரும்புள்ளிகள் படிப்படியாக குறைந்துவிடும்.



# பொது அறிவுப் போட்டித் தொடர் - 02

அறிவுத் தேடலில் ஆர்வமுடைய வாசகர்களது அறிவுப் பசியை தீர்க்கும் ஒரு களமாக ஒளிஅரசி **சைப்பீ ரெடிங் கம்பனியினது** அனுசரணையுடன் பொது அறிவுப் போட்டித் தொடரினை அறிமுகப்படுத்தியுள்ளது. இங்கு தரப்படுகின்ற பொது அறிவு சம்பந்தமான கேள்விகளுக்கு சரியாக விடை எழுதி அனுப்பும் வாசகர்களில் முதல் மூன்று அதிஷ்டசாலிகள் தெரிவு செய்யப்பட்டு முறையே ரூபா 750, ரூபா 500 மற்றும் ரூபா 250 பெறுமதியான பணப்பரிசில்கள் வழங்கப்படும்.

## வினாக்கள்

01. கிரிக்கட் விளையாட்டின் தாயகம் என்று அழைக்கப்படும் நாடு எது?

02. இந்தியாவின் தற்போதைய ஜனாதிபதி யார்?

03. அண்மையில் வெளியிடப்பட்ட 10 ரூபா நாணயக் குத்தியில் பொலநறுவை மாவட்டத்துக்குரிய நாணயக் குத்தியில் உள்ள உருவம் யாரைக் குறிக்கின்றது.?

04. அண்மையில் நடைபெற்ற ஒஸ்கார் விருது வழங்கும் நிகழ்வில் சிறந்த கதாநாயகனுக்கான விருது யாருக்கு கிடைத்தது.

05. "கொன்றை வேந்தன்" என்பதை இயற்றியவர் யார்?

06. இலங்கையில் இருந்து வெளிவந்த மிகப் பழமையான தமிழ் நாழிதழ்களில் ஒன்றான "ஈழகேசரி" நாளிதழ் எக்காலப்பகுதியில் வெளிவந்தது?

07. உலகில் அதிக சனத்தொகையைக் கொண்ட நாடு எது?

08. ஆசிய அபிவிருத்தி வங்கியின் தலைமையகம் எங்கு அமைந்துள்ளது?

09. உலக தாய்மொழி தினம் எந்த திகதியில் அனுஷ்டிக்கப்படுகிறது?

10. சாரண இயக்கத்தின் தந்தை என போற்றப்படுபவர் யார்?


அனுசரணை

**SAIFI TRADING COMPANY**

IMPORTERS OF PAPER & BOARD

No. 96, New Moor Street, Colombo - 12.


உங்களது விடைகளை ''ஆசிரியர் ஒளிஅரசி, இல. 85, ஜயந்த மல்விமாராச்சி மாவத்தை, கொழும்பு - 14'' என்ற முகவரிக்கு 20.02.2015 இற்கு முன்னர் அனுப்பி வைக்கவும்.

### பொது அறிவு தொடர் - 02

முழுப்பெயர் : ..............................................

..............................................

முகவரி : ..............................................

..............................................

..............................................

தொலைபேசி இல.: ..............................

ஒப்பம் : ..............................................

# சாதனை மங்கை

துப்பாக்கி என்றாலே அலறி ஓடும் பெண்கள் மத்தியில் துப்பாக்கி சுடுதல் போட்டியில் பாடசாலை மட்டத்தில் தெரிவாகி படிப்படியாக பல போட்டிகளைக் கண்டு இன்று சர்வதேச தரத்தில் பயிற்சியாளராக தெரிவு செய்யப்படவுள்ள நெல்லயடி அத்தாய் என்னுமிடத்தை வசிப்பிடமாக் கொண்டவரும் நெல்லியடி மத்திய கல்லூரி மாணவியுமான சாதனைப் பெண் ஸ்ரீ. தயானியுடனான நேர்காணல் :

★ சமூகத்தின் விதிமுறைகள் பெண்களின் சாதனைக்கு பல முட்டுக்கட்டைகளைப் போடும் இக்காலத்தில் அதுவும் வடபகுதியில் இப்படியான ஒரு துறையில் சாதிக்கவேண்டும் எனும் எண்ணம் எப்படி வந்தது?

ஏதாவது ஒரு துறையில் சாதிக்கவேண்டும் எனும் எண்ணம் சிறுவயது முதல் எனக்குள் இருந்தது. பாடசாலை மட்டப்போட்டியில் தெரிவாகி பயிற்சிக்காக மதவாச்சி சென்றபோது எங்கள் பாடசாலை மட்டுமே ஒரே ஒரு தமிழ்ப் பாடசாலை. அங்கு வழங்கப்பட்ட பயிற்சியும் போட்டியாளர்களின் வீச்சுமே இத்துறையில் சாதிக்கும் எண்ணத்தை என்னுள் விதைத்தது.

★ உங்களுக்குப் போட்டியாக யாரை எண்ணுகின்றீர்கள்?

போட்டியாளர் என்று யாரையும் கருதுவதில்லை. முழுத்திறமையாகச் செயற்படவேண்டும் என்று மட்டுமே எண்ணுகின்றேன்.

★ உங்கள் வெற்றியின் துணையாக எதனை எண்ணுகின்றீர்கள்?

தன்னம்பிக்கை, விடாமுயற்சி, அதிபர், ஆசிரியர்களின் வழி நடத்தல் மற்றும் ஆலோசனை 'கடினப்பயிற்சி' குடும்பத்தினரின் கவனிப்பு இவை எல்லாமே.

★ திறமைகள் இருந்தும் சில சமூகங்களில் அதனை வெளிப்படுத்தாதிருக்கும் பெண்களுக்கு நீங்கள் என்ன கூற விரும்புகின்றீர்கள்?

ஒவ்வொரு பெண்ணுக்குள்ளும் நிச்சயம் ஒவ்வொரு திறமை உண்டு. முதலில் அதனை உணரவேண்டும். அதனை வெளிப்படுத்தும் திறனை வளர்த்துக்கொள்ள வேண்டும். தடைகளைத் தாண்டி தனது இலக்கை அடைய முயற்சிக்கவேண்டும்.

★ ஒரு வெற்றி மங்கையாய் சாதிக்க நினைப்பவர்களுக்கு என்னகூற விரும்புகின்றீர்கள்?

வெற்றி என்பதை உடனே அடைந்துவிட முடியாது. என்னுடைய விளையாட்டுப் பயணம் எனது சிறிய வயதில் ஆரம்பமானது. நான் பல தோல்விகளையே அதிகம் சந்தித்திருக்கின்றேன். தோல்விகளைப் பார்த்து துவண்டிருந்தால் இன்று இந்த வெற்றி இல்லை. அதனால் தோல்விகளை வீழ்ச்சியாக எண்ணாது தொடர்ந்து முயற்சித்தால் வெற்றி அடையலாம்.

★ உங்கள் சாதனைக்குத் துணைபுரிந்தோர் பற்றி?

சிறிய வயதில் என்னை ஆர்வமுடன் விளையாட்டில் ஈடுபடுத்திய ராஜசீலன் ஆசிரியர், அதிபர், பயிற்சி தரும் அன்ரன் ஆசிரியர், ஆசிரியர்கள், பாடசாலைச்சமூகம், நண்பர்கள் எனது குடும்பத்தினர்.

★ உங்களின் இத்துறை மீதான விருப்பை - வெற்றியை உங்கள் குடும்பம் எப்படிப் பார்க்கின்றது?

எனது சிறிய வயது முதல் நான் விளையாட்டுத்துறையில் அதிக ஆர்வம் கொண்டு விளங்கியதால் எனது பெற்றோர் எனது தெரிவிற்கு ஒத்துழைப்பு தருபவர்களாகவே இருந்தனர். அதனை விட எமது சுற்றம்



உறவுகள் என யாருமே விளையாட்டுத்துறையில் ஆர்வம் உள்ளவர்களல்ல. இதுவும் அவர்களின் அதீத ஆதரவிற்குக் காரணமாய் அமைந்தது.

★ மகளிர் தினம் பற்றிய உங்கள் கருத்து யாது?

ஒரு நாளைக் கொண்டாடுவதால் மாத்திரம் பெண்களின் உரிமைகள் கிடைத்துவிடுவதில்லை. முழுச்சமுதாயமும் பெண்களின் மீதான வன்முறையைப்பற்றி உணர்ந்து அவர்களுக்கான அன்பு, ஆதரவு, பாதுகாப்பு என்பவற்றை மனப்பூர்வமாக சரியான முறையில் வழங்குவதன் மூலமே பெண்கள் பூரண சுதந்திரம் பெற முடியும். ●

# கோபத்தின் விளை

அவசர உலகத்திலே இயந்திரமாய் அலைகின்ற மனிதர்களுக்கு ஆறுதலாய் இருக்கின்ற விடயங்களில் குழந்தைகள் என்ற விடயம் மிக முக்கியமானது. இயந்திரங்களாய் அலைந்துவிட்டு வீட்டினுள் வந்து குழந்தைகளுடன் விளையாடுவது அவர்களுக்கு பாரிய நிம்மதியைக் கொடுக்கின்றது. ஆனால், இந்த பாக்கியம் எல்லோருக்கும் கிடைப்பதில்லை.

இதன் பின்னணியிலேயேதான் ஒரு தனியார் கம்பனியில் இலட்சக்கணக்கான சம்பளம் பெறும் தம்பதியினருக்கு எட்டு வயதுடைய பெண் குழந்தை யொன்று. அக்குழந்தையினுடைய வலது கையிலே மின்னழுத்தி (Iron Box) தவறுதலாக சுடுபட்டு



வைத்தியசாலையிலே அனுமதிக்கப்பட்டு நான்கு நாட்களின் பின்னர் அந்தக் காயத்திற்காக சுற்றபட்டிருந்த துணி அகற்றப்பட்டது. இச்சந்தர்ப்பத்திலே குழந்தை யைப் பார்வையிட வந்த உள வள ஆலோசகர் ஒருவர் அக்குழந்தையைப் பார்வையிட்டு அப்பெற்றோர்களை சந்திக்கவேண்டும் என்று கூறினர்.

அவரின் வேண்டுகோளுக்கிணங்க அப்பெற் றோர்களை சந்திப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டது. அவ் உளவியலாளர் அவர்களிடம் பல வினாக்களைத் தொடுத்துவிட்டு இறுதியாக உங்கள் குழந்தைக்கு உண்மையாக என்ன நடந்தது என்று கூறுங்கள் என்றார். அவர்கள் வைத்தியரிடம் சொன்னது போன்று மின்னழுத்தி தவறுதலாக பட்டது என்றுதான் கூறினார்கள். சுமார் இரண்டு மணித்தியாலங்கள் அவர்களுடன் நடந்த கலந்துரையாடலின் பின்னர் அதிர்ச்சியான உண்மையொன்று வெளியே வந்தது. திருமணம் நடந்து ஏழு வருடங்கள் இவர்களுக்கு குழந்தை பாக்கியம் இருக்கவில்லை. இவ்வாறு தவமிருந்து பெற்றெடுத்த அந்தப் பெண் குழந்தைதான் இன்று வைத்தியசாலையில் சிகிச்சைப் பெறுகின்றது. உண்மையிலே இந்தப் பெண் குழந்தைக்கு மின்னழுத்தி படவில்லை. ஒருநாள் வீட்டிலே பலாப்பழம் உண்டு விட்டு அந்தக் கத்தியில் இருக்கும் பசையினைப் போக்குவதற்கு அதனை அடுப்பிலே வைத்திரு ந்தாள் அந்த குழந்தையின் பெண் ணின் தாய்.

கணவன் - மனைவிக்கிடையில் நடந்த வாக்குவாதம் ஒன்றின்போது'' எல்லாவற்றுக்கும் இவள்தான் காரணம்'' எனக் கோபப்பட்ட கணவன் அந்தக் கத்தியை எடுத்து குழந்தையின் கையில் வைத்து விட்டார். வலியால் துடித்த குழந்தையின் கையிலிருந்து கத்தியை அகற்ற முடியவில்லை.

உடனடியான வைத்தியசாலை ஒன்றிலே கொண்டுசென்று அக்கத் தியை வெட்டி அகற்றி விட்டு கட்டுப் போட்டு மின்னழுத்தி பட்டதாக சம்பவத்தை மாற்றி விட்டனர் பெற்றோர்.

தமது ஒரு நிமிட கோபத்தை அடக்கத் தெரியாமையினால் தவமிருந்து பெற்ற அக்குழந்தையை ஒரு அங்கவீனக் குழந்தையாக மாற்றி இன்றும் அக்குழந்தை தனது கையை முழுமையாக நீட்டி மடக்க முடியாமல் மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கின்றது. பின்னர் தமது தவறை உணர்ந்த பெற்றோர் அக்குழந்தை மீது அதிக கரிசனை காட்டி தாமும் எதுவித மனக் கசப்புகளும் இல்லாமல் சந்தோசமாக வாழ்ந்து வருகின்றார்கள். எவ்வாறா யினும் குழந்தையின் கை சற்று குறையுடனே காணப்படுகின்றது.

வீட்டின் உயிர்நாடிகளான இல்லத்தரசிகளே இந்த சம்பவத்தில் யார் மீது தவறு என்பதை விடு வோம். யாராக இருந்தாலும் தமக்கு வருகின்ற கோபத்தை ஒரு சில வினாடிகள் அடக்க முயற்சித்தால் எந்தொரு பிரச்சினையும் வாழ்வினிலே ஏற்படாது. எனவே, பொறுமை என்பதனை எமது வாழ்விலே கடைப்பிடித்தால் இல்லம் செழிப் படையும். ●

# காதல் மைனாக்கள்

இரண்டு நாட்களாக வீட்டில் ஒரே இடி, மின்னல்... வீட்டிலா...? திகைக் காதீர்கள். வீட்டில் ஒரு சின்ன பிரச்சினை; அதைத்தான் இப்படி சொன்னேன்.

பிரச்சினை ஓயவில்லை...

ஏங்க உங்களால வர முடியுமா...? முடியாதா...? சொல்லுங்க... நான் ஏதும் பேசவில்லை... உங்க ஆளுங்க விசேசம்னா... தட்டாம போவீங்க...

இல்ல அதப்பத்தி சொல்லல... வேலை... ஆமா பொல்லாத வேலை எப்பப்... பாரு... க்... உ... முகத்தை திருப்பிக் கொண்டாள். விசயம் இதுதான். அவளின் உறவினர் திருமண நிச்சய ஏற்பாடு... வரும்



புதன்கிழமை... எனக்கு கணக்காயிர வேலை கணக்குகளை சரி பண்ணனும். முன்பே முடித்துவிடலாம் என்றிருந்தேன்.

ஏங்க மறுபடி சொல்றேன் அப்புறம்... ஒ உங்க ஆளுங்க

எந்த விசேசத்துக்கும் என்ன கூப்பி டாதீங்க... ஆமா... இப்படியே வாக்குவாதம் ஒன்றுக்கில்லாத பிரச்சினை பெரிதாகிக் கொண்டே சென்றது. சாப்பிடும் தட்டை நங்... என வைக்கிறாள்... விக்கல் எடுத்தால் முகத்தை திருப்பி வைத்துக்கொள்கிறாள்.

இதைப் பார்த்த என்மகளும் அவ ளோடு ஒட்டிக்கொண்டாள்... கூட்டணி இல்லாத கட்சி போல தனித்து விடப் பட்டேன்... புரண்டு புரண்டு படுத்தேன் தூக்கம் வரவில்லை... எப்பொழுது தூங்கினேன் தெரியவில்லை.

திறந்திருந்த ஜன்னல் வழியே ஊர் குருவி களின் க்ரிச்... குரிச்... க்ரிச்... கீச்... கூச்சல் சப்தம். விடிந்த காலை நேரத்தின் வெளிச்சமும் சேர்ந்து என்னை எழுப்பியது.

மெல்ல எட்டிப் பார்தேன். ஜன்னலின் கீழே தான் சப்தம். நான் கண்ட காட்சி ஆச்சர்யமும் சற்று அதிர்ச்சியையும் கொடுத்தது. ஒரு மைனா தரை யில் மல்லாந்து கிடக்கிறது; எழ முயற்சிக்கிறது.

அதை விடாமல் சினிமா வில்லனைப் போல் ஒரு காலால் மிதித்தபடி இன்னொரு மைனா ஆக்ரோசமாக கொத்தி தாக்கிக்கொண்டிருந்தது.

வில்லனா...? கதாநாயகனா...?

அருகில் இன்னொரு மைனா இரு இறக்கை களையும் விரித்தபடி தடுக்க முயற்சிக்கிறது. (அது ஒரு பெண் மைனாவாக இருக்கலாம்)

அதை சுற்றிலும் ஊர் குருவிகள் குதித்து குதித்து கத்தியபடி க்ரிச்... குரிச்... க்ரிச்... கீச்... இவையும், ''வேண்டாம் சண்டை'' என தடுக்க முயற்சிக் கின்றன. சமையல் அறையில் இருந்த மனை வியை; ஓசைப்படுத்தாமல் சைகைசெய்தபடியே அவளின் கையை பிடித்து அழைத்து வந்தேன்.

உஷ்... உதட்டின் மேல் விரல் வைத்தபடி... பார்க்க சைகை செய்தேன். என் காதின் அருகில் சன்னமாக ''பாவங்க...'' என்றாள். ஹேய்... சட்டென அனைத்தும் பறந்தன. கீழே கிடந்த மைனா சுதாரித்து எழுந்து பறந்தது. வில்லன் மறுபடி தாக்கப் பறந்தது. எல்லாம் ஜாகையை மாற்றிக்கொண்டன.

எனக்கு புரிந்துவிட்டது. இது பறவைகளின் காதல் சண்டை. அதுவும் தன் காதலில் தோற்ற பறவை மற்றதை இப்படி பழி வாங்கப் புறப்படுமா?... எனக்கு ஆச்சர்யம் தான். இருக்கலாம்... பறவைகளுக்குள்ளும் நம்மளைப் போல் பல வித உணர்வுகள் இருக்கிறது இல் லையா...? கோழிச்சண்டை பார்த்திருக்கிறேன் ஆனால், மைனாக்கள் சண்டை எனக்கு புதிதுதான்.

காலையில் பேப்பர் வந்தது. படிக்க கண்ணாடி தேடினேன். டி.வி. விளம்பரத்தில் வருவதைப் போல் மணக்க மணக்க காஃபி கொண்டுவந்தாள்.

'' ம்... ம்...'' எடுத்துக்கங்க ஜாடை.

''லீவு போட்டரேன்... நிச்சயத்திற்கு போலாம்.'' சொல்லி விட்டு நிமிர்ந்து பார்க்கிறேன். அவள் முகம் மலர்ச்சியில்... மைனாக்களின் சண்டை நம்ம சண் டைக்கு 'எண்ட்' கார்ட் போட்டுருச்சே...! ●

# மகளிர் தினம் உருவான கதை

தற்போது உலகம் முழுவதும் கொண்டாடப் படும் சர்வதேச மகளிர் தினம் உருவானதே ஒரு போராட்டக் களத்தில்தான். 1900ஆம் ஆண்டின் முதல் பத்து ஆண்டுகளில் பெண்கள் பொருளாதாரரீதியாகவும் சமூகரீதியாகவும் கடுமையாக பாதிக்கப்பட்டிருந்தனர். இவற் றிற்கு எதிராக உலகம் முழுவதும் உள்ள பெண்கள் வெகுண்டெழுந்து போராடிக்கொண்டிருந் தனர். சில நாடுகளில் பெண்களுக்கான அமைப்புகள் தோற்றுவிக்கப்பட்டன.

1907-ல் ஜெர்மனியில், ஸ்டட்கார்ட் என்ற நகரில் முதன் முதலாக 'சோசலிச பெண்கள் மாநாடு' நடைபெற்றது. இந்த மாநாட்டில் 15 நாடுகளிலிருந்து 59 பெண் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர். உலகம் முழுவதுமுள்ள பெண்கள் அமைப்புகளை ஒருங்கிணைப்ப தற்கு ஒரு சர்வதேச பெண்கள் அமைப்பு இம்மாநாட்டில் உருவாக்கப்பட்டது. இந்த அமைப்பிற்கு கிளாரா ஜெட்கின் செயலா ளராக தேர்வு செய்யப்பட்டார்.

1908-ம் ஆண்டு முதன்முதலில் நியூ யார்க் நகரில், 15000-க்கும் மேற்பட்ட பெண் கள் பேரணியாக சென்று தங்களின் வேலை நேரத்தை குறைக்க வலியுறுத்தியும், தேர் தலில் வாக்களிப்பதற்கான உரிமை கோரி யும், தங்களுக்கு நியாயமான, சமவேலைக்கு சமஊதியம் வழங்கவேண்டும் என்று வலியு றுத்தி முழக்கமிட்டனர்.

1909-ல் ஆடை தயாரிக்கும் தொழிலில் ஈடுபட்டிருந்த மகளிர் தங்களுக்கு நியாயமான



ஊதியம் வழங்க வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து வேலைநிறுத்தம் மேற்கொண்டனர். அமெரிக்காவின் சோசலிஸ்ட் கட்சி தேசிய அளவிலான முதல் மகளிர் மாநாட்டை பெப்ரவரி 28ஆம் திகதி நடத்தியது. அன்றைய தினத்திலிருந்து 1913 வரை பெப்ரவரி கடைசி ஞாயிற்றுக்கிழமை சர்வதேச பெண்கள் தினமாக கொண்டாடப்பட்டது.

ஜெர்மனியில், 1910இல் கோபன்ஹேகன் நகரில் ஜெர்மனியின் சோசலிச ஜனநாயக கட்சி இரண்டாவது மகளிர் மாநாட்டை நடத்தியது. இதில் 17 நாடுகளிலிருந்து 100க்கும் மேற்பட்ட பெண்கள் கலந்துகொண்டனர். இவர்கள் பல்வேறு நாடுகளின் தொழிற்சங்கங்களின் பிரதிநிதிகளாகவும், சோசலிஸ்ட் கட்சியின் பிரதிநிதிகளாகவும், மகளிர் அமைப்புகளின் பிரதிநிதிகளாகவும் இருந்தனர். பின்லாந்து நாட்டின் நாடாளுமன்றத்திற்கு தேர்ந்தெடுக்கப்பட்ட 3 நாடாளுமன்ற உறுப்பினர்களும் பிரதிநிதிகளாக வந்திருந்தனர். இந்த மாநாட்டில் சோசலிஸ்ட் ஜனநாயக கட்சியின் மகளிர் பிரிவு தலைவராக இருந்த கிளாரா ஜெட்கின், பெண்களின் கோரிக்கைகளை வலியுறுத்தி ஒவ்வொரு ஆண்டும் சர்வதேச மகளிர் தினத்தை நடத்திட வேண்டும் என்ற தீர்மானத்தை முன்மொழிந்தார். இந்தத் தீர்மானம் அனைத்து பிரதிநிதிகளாலும் ஏகமனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டது.

தொடர்ந்து 1911இல் சர்வதேச மகளிர் தினம் முதன்முதலாக ஆஸ்திரியா, டென்மார்க், ஜெர்மனி, சுவிட்சர்லாந்து ஆகிய நாடுகளில் மார்ச் மாதம் 19ஆம் திகதி கொண்டாடப்பட்டது. இந்த நாடுகளில் ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்ட பெண்கள் கலந்துகொண்ட பேரணிகள் நடைபெற்றன. இந்த பேரணிகளில் பெண்கள் வேலை செய்வதற்கான உரிமை. தேர்தல்களில் வாக்களிப்பதற்கான உரிமை, பயிற்சிபெறுவது, பொது அலுவலகங்களில் வேலைசெய்வது, சமூகத்தில் பாகுபாடின்றி நடத்தப்பட வேண்டும் போன்ற கோரிக்கைகள் வலியுறுத்தப்பட்டன.

அதே ஆண்டில் மார்ச் மாதம் 25ஆம் திகதி அன்று நியூயார்க் நகரில் நடைபெற்ற ஒரு முக்கோண தீ விபத்தில், பணியில் ஈடுபட்டிருந்த 140 பெண்கள் உயிரிழந்தனர். இவர்களில் பெரும்பாலானோர் இத்தாலி நாட்டைச் சேர்ந்தவர்கள். இந்த விபத்து அன்றைய தினம் அமெரிக்க நாட்டில் பெண்களுக்கு பாதுகாப்பற்ற நிலை இருந்ததை வெளிப்படுத்தியது. இதன் பின்னர், தொழிலாளர் சட்டங்களை கடுமையாக்க வேண்டிய நிர்ப்பந்தம் அரசுக்கு ஏற்பட இந்த நிகழ்ச்சி அடிகோலாக அமைந்தது. இதே ஆண்டில் பெண்கள் நடத்திய 'ரொட்டியும் ரோசாப் பூவும்' என்ற இயக்கம் பெண்களின் கோரிக்கைகளை வலியுறுத்துவதாக அமைந்தது. இத்தகைய தொடர்ச்சியான போராட்டங்கள் மூலமே பெண்களுக்கு வாக்களிக்கும் உரிமையும் வேலைசெய்யும் உரிமையும் சம ஊதியம் பெறும் உரிமையும் பிற்காலத்தில் கிடைத்தன.

1913-14இல் ரஷ்ய நாட்டில் முதன் முறையாக சர்வதேச பெண்கள் தினம் கொண் டாடப்பட்டது. 1913ஆம் ஆண்டு பெப்ரவரி கடைசி ஞாயிறு அன்று நடைபெற்ற மாநாட்டில் 'மார்ச் 8 பெண்கள் தினம்' கொண்டாட முடிவு செய்யப்பட்டது. 1914இல் போருக்கு எதிராக பெண்கள் ஐரோப்பிய நாடுகள் முழுவதிலும் பேரணி நடத்தினர். 1917-ல் ரஷ்ய பெண்கள் 'ரொட்டிக்காகவும் போருக்கு எதிராகவும்' பெப்ரவரி கடைசி ஞாயிறு அன்று வேலை நிறுத்தம் செய்தனர். அப்போது நடைபெற்ற போரில் இரண்டு இலட்சத்திற்கும் மேற்பட்ட ரஷ்ய வீரர்கள் உயிரிழந்திருந்தனர். இந்த வேலை நிறுத்தத்தை தடைசெய்ய ஆரம்பத்தில் அரசு முயற்சி செய்தபோதும் பின்னர் ரஷ்ய நாட்டு பெண்களுக்கு வாக்களிக்கும் உரிமையை முதல் முறையாக தந்தது குறிப்பிடத்தக்கது. அந்த வீரஞ்செறிந்த வேலை நிறுத்தம் ரஷ்ய ஜூலியன் காலண்டர் படி பெப்ரவரி 23 என்றாலும் உலகம் முழுவதும் கடைப்பிடித்து வரும் காலண்டர் படி மார்ச் 8 ஆகும். அந்த வரலாற்றுச் சிறப்புமிக்க நாளே நாம் இன்று கொண்டாடும் மார்ச் 8 சர்வதேச மகளிர் தினமாகும்.

இன்று சர்வதேச மகளிர் தினம் உலகில் அனைத்து நாடுகளிலும் உற்சாகமாக கொண்டாடப்படுகிறது. சீனா, வியட்நாம், ரஷ்ய நாடுகளில் இன்று மகளிர் தினத்திற்கு அரசு விடுமுறை விடப்படுகிறது. அமெரிக்காவில் மார்ச் மாதம் முழுவதும் பெண்கள் வரலாற்று மாதம் கொண்டாடப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. ●

# ஆஸ்கார் விருதுகள்





உலகெங்கிலும் உள்ள சினிமா ரசிகர்களால் அன்னாந்து பார்க்கப்படுகின்ற விருது... ஆஸ்கர். ஒவ்வோர் ஆண்டும் பெப்பரவரி மாதம் அகாடெமி ஆஃப் மோஷன் பிக்ஸர்ஸ் ஆர்ட் அண்ட் சயின்ஸ் அறக்கட்டளை (AMPAS) வழங்கும் ஆஸ்கர் விருது விழா உலகை ஈர்த்துவிடுகிறது. சிறந்த நடிகர், நடிகை, துணை நடிகர், துணை நடிகை, திரைப்படம், அனிமேஷன் திரைப்படம், ஒளிப்பதிவு, உடையமைப்பு, இயக்கம், ஆவணப்படம், ஆவண குறும்படம், படத்தொகுப்பு, வெளிநாட்டுத் திரைப்படம், சிகை அலங்காரம், பாடல், இசை, கலையமைப்பு, அனிமேஷன் குறும்படம், குறும்படம், ஒலித்தொகுப்பு, ஒலியமைப்பு, விஷுவல் எஃபக்ட், தழுவிய திரைக்கதை, திரைக்கதை என்று 24 பிரிவுகளில் அளிக்கப்படுகின்ற ஆஸ்கர் விருதுகள் ஹாலிவுட் திரைக் கலைஞர்களின் மாபெரும் இலட்சியமாக இருக்கின்றன.

இவ்விழாவின் நேரலை நிகழ்ச்சியைத் தொலைக் காட்சி வழியே உலகம் முழுவதும் கண்டுகளித்த பார்வை யாளர்களின் எண்ணிக்கை 53 மில்லியனாக இருக்கும் என்று கணக்கிட்டிருக்கிறார்கள். ஆஸ்கர் இத்தனை வரவேற்பைப் பெறக் காரணம் அவ்விருதுகள் வழங்கக் கடைபிடிக்கப்படும் விதிகளும் தர ஒழுங்குகளுமே என்று மதிப்பிடுகிறார்கள் அமெரிக்காவுக்கு வெளியே இருந்து அகாடெமி விருதுகளை விமர்சிக்கும் பலர்.

இது அமெரிக்கத் தயாரிப்பு, இங்கிலாந்து தயாரிப்பு,





மூன்றாம் உலக நாடுகளின் தயாரிப்பு என்றெல்லாம் ஆஸ்கர் பேதம் பார்ப்பதில்லை. சிறந்த வெளிநாட்டு மொழிப்படம் என்ற பிரிவுக்கு அனுப்பப்படும் படங்களைத் தவிர, மற்ற பிரிவுகளுக்கான போட்டியில் கலந்துகொள்ள விரும்பும் படங்கள் ஆங்கிலத்தைப் பேச்சு மொழியாகக் கொண்டு நேரடியாக ஆங்கிலத்தில் உருவாக்கப்பட்டிருக்க வேண்டும்.

40 நிமிடங்களுக்குக் குறைவாக இருக்கக் கூடாது. அமெரிக்காவின் லாஸ் ஏஞ்சல்ஸ் மாநிலத்தில் ஒரு சில திரையரங்குகளிலாவது வெளியாகி ஏழு நாட்கள் ஓடியிருக்க வேண்டும். இந்த அடிப்படைத் தகுதிகளுக்கு அப்பால் போட்டியில் கலந்துகொள்ள விரும்பும் படங்கள் எந்த வகைமையில் அடங்கினாலும் அவற்றின் ஒளிப்பதிவு, ஒலிப்பதிவு ஆகியவற்றுக்கு அடிப்படை அளவுகள் நிர்ணயிக்கப்பட்டிருக்கின்றன.

இவை எல்லாவற்றுக்கும் மேலாக விருதுக்குப் பரிந்துரைக்கப்படும் படங்களையும் கலைஞர்களையும் சுமார் 4700 அகாடெமி உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கிறார்கள். இவர்கள் அனைவருமே திரைப்படத்துறையின் பலவேறு பிரிவுகளில் மிகச் சிறந்த பங்களிப்பைச் செய்தவர்கள்; செய்துகொண்டும் இருப்பவர்கள். இவர்கள் யார் என்பதை அகாடெமி ரகசியமாகவே வைத்திருக்கிறது.

அண்மையில் இடம்பெற்ற 87 ஆவது விருது வழங்கல் நிகழ்வுகளிலும் இத்தகைய விதிகளும் பின்பற்றப்பட்டு 24 பிரிவுகளின் கீழ் வழங்கப்பட்டது. இதில் பேட்மன் படம் நான்கு விருதுகளை வென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.








### திகில் மன்னன் ராஜேஷ்குமார் எழுதிய

# இருட்டில் வைத்த குறி

7

யோகேஷ் கேட்டான்.

''ஏனப்பா... டாக்டரை வரவழைக் கட்டுமா?''

''வேண்டாம்... வாந்தி எடுத்துவிட்டு வந்து கொஞ்ச நேரம் ரெஸ்ட் எடுத்தால் போதும்.'' சொல்லிக்கொண்டே பாத்ரூமுக் குள் நுழைந்துகொண்டார்.

பிரணவ் யோகேஷிடம் திரும்பினார்.

''உங்களுடைய அப்பாவை இனிமேல் குடிக்க அனுமதிக்காதீர்கள்.''

''சொன்னால்... அவர் கேட்கமாட்டார்.'' யோகேஷ் சொன்ன விநாடி - அருகே டீப் போயின் மேலிருந்தடெலிபோன் துடித்தது.

ரிஸீவரை எடுத்தான்.

''ஹலோ''

''மிஸ்டர் பிரணவ் இங்கேதான் இருக் கிறார். அவரைப் பேசச்சொல்ல வேண்டுமா? ஒரு நிமிஷம் பொறுங்கள்'' என்று சொன்ன யோகேஷ், ரிஸீவரைப் பிரணவ்விடம் நீட்டினான்.

''போன் உங்களுக்குத்தான். யாரோ ஒரு பெண்.''

ரிஸீவரை வாங்கிச் செவிமடுத்த பிரணவ், மலாய் மொழியில் வேகமாகப் பேசினார். அரை நிமிட நேரத்தில் பேச்சை முடித்துக் கொண்டு ரிஸீவரைச் சாத்தினார். புன்னகை யோடு யோகேஷிடம் நிமிர்ந்தார்.

''டெலிபோனில் பேசியவள் என் மனைவிதான். இரவு எட்டு மணிக்கு மேல் இந்த ஹோட்டலில் - இந்த எண் அறையில் இருப்பேன் என்று அவளிடம் சொல்லியி ருந்தேன். வீட்டிற்கு விருந்தாளிகள் வந்திருக் கிறார்களாம். என்னை வரச்சொல்கிறாள். நான் கிளம்பட்டுமா?

பிரணவ் எழுந்தார்.

புவனேஷ் குறுக்கிட்டுச் சொன்னான்.

''சாப்பிடாமல் போகிறீர்களே...''

''சாப்பிட்ட வரைக்கும் போதும். என் வீட்டிற்கு வந்திருப்பவர்கள் அவளுடைய உறவினர்கள். நான் தாமதமாகப் போனால் வீட்டில் போரே உருவாகிவிடும். அப்பாவி டம் சொல்லிவிடுங்கள். நான் கிளம்புகிறேன்.

பிரணவ் விடை பெற்றுக்கொண்டு கிளம் பினார். அவர் கிளம்பிய பத்து நிமிடத்துக் கெல்லாம் பாத்ரூமிலிருந்து வெளிப்பட்டார் மார்த்தாண்டம்.

வெகுவாய்ச் சோர்ந்துபோயிருந்தார்.

''இப்ப எப்படியப்பா இருக்கு?'' யோகேஷும் புவனேஷும் கேட்டுக்கொண்டே வந்து அவருடைய தோளைப் பற்றினார்கள்.

''பிரணவ் போயிட்டாரா?''

''போயிட்டார்.''

''ரூமோட கதவைத் தாழ்போட்டிருக்கிறாயா?''

''போட்டிருக்கு.''

படுக்கைக்குப் போய்ச் சாய்ந்து கொண்டவர் மெல்லிய குரலில் சொன்னார். ''சிங்கப்பூர் பொலிஸ் ஆக்ஸிடென்ட் ஸ்பொட்டைக் கண்டுபிடித்துவிட்டார்கள். நாம் இனிமேல்தான் ஜாக்கிரதையாக இருக்கவேண்டும்.''

யோகேஷ் தலையில் அடித்துக் கொண்டான்.

''ஏனப்பா இப்படிப் பயப்படுகிறீங்கள்? பொலிஸ் அக்ஸிடண்ட் ஸ்பொட்டைத்தானே கண்டுபிடிச்சிருக்கிறார்கள். நாங்கள் டய மண்ட்ஸை எடுத்ததைக்கண்டு பிடிக்க முடியாதே...?''

''அப்பாவுக்கு எவ்வளவு தைரியம் சொன்னாலும் இவர் இப்பிடி நடுங்கிக்கொண்டுதான் இருப்பார். ஒரு ஸ்லீப்பிங் ட்ப்ளட்டை எடுத்துக்கொடு. போட்டுவிட்டு நித்திரை கொள்ளட்டும்.''

''அதெல்லாம் வேண்டமப்பா. மார்த்தாண்டம் மறுக்க - மறுக்க பிடிவாதமாக மாத்திரையைக் கொண்டுவந்து கொடுத்தான் யோகேஷ்.

''அதை முதலில் விழுங்குங்கள் அப்பா... அப்பதான் டென்ஷன் குறையும்.'' புவனேஷ் தண்ணீர் நிரம்பிய டம்ளரை நீட்டினான். மார்த்தாண்டம் வாங்கிக்கொண்டு மாத்திரையை உதட்டுக்குக் கொடுத்தார்.

டி.வியில் 11 மணி வரைக்கும் ஒரு ஜப்பானியப் படத்தைப் பார்த்துக்கொண்டிருந்துவிட்டு அப்போதுதான் கண்ணயர்ந்தான் யோகேஷ். புத்தகம் படித்துக் கொண்டிருந்த புவனேஷ், புத்தகம் மார்பின் மேல் கவிழ்ந்த நிலையிலேயே சன்னமான குறட்டையிலிருந்தான். மார்த்தாண்டம் ஒருக்களித்து ஒரு குழந்தைமாதிரி தூங்கிக் கொண்டிருந்தார்.

நிமிஷங்கள் சில கரைந்திருந்தபோது...

அறைக்குள் அந்த விசித்திர சத்தம் கேட்டது. யாரோ சுவாசிக்கத் திணறுகிற மாதிரியான சத்தம்.

யோகேஷ் விருட்டென்று எழுந்து அமர்ந்தான். 'கர்... முர்... ஹக்... ஹக்... கர்... முர்... ஹக்... ஹக்...

சிரமமாய் மூச்சை இழுத்து விடுகிற சத்தம்.

யோகேஷ் பார்வையைச் சுழற்ற மார்பை வலக்கையில் பற்றிக்கொண்டு துடிக்கும் மார்த்தாண்டம் கண்ணுக்குச் சிக்கினார்.

''அப்பா...''

கட்டிலில் இருந்து எழுந்து சுவரில் இருந்த சுவிச்சைப் போட்டுவிட்டு கட்டிலை நோக்கி ஓடினான் யோகேஷ்.

புவனேஷும் விழித்து, ''என்ன யோகேஷ்?'' என்று கேட்டபடி வந்தான்.

அறைக்குள் வெளிச்சம் நிரம்பியது. கட்டிலில் துடித்தபடி தெரியும் மார்த்தாண்டத்தைப் பார்த்ததும் பதற்றம் அவனையும் பற்றிக்கொண்டது.

''அப்பா...''

இருவரும் பக்கத்துக்கொருவராக அமர்ந்தார்கள்.

'' எ... என்னப்பா... செ... செய்யுது?

மார்த்தாண்டம் பேசமுடியாமல் திணறினார். ''அ... அ... அ...'' பேச்சு வராமல் வாய்க்குள்ளேயே நாக்கு சுழன்றது. முகம் ரத்தமாய் சிவந்துபோயிருந்தது.

''யோகேஷ்... நீ... நீ... போய் டாக்டர்... கிடைப்பாரா என்று ரிசப்ஷனில் கேள்.'' புவனேஷ் சொல்ல யோகேஷ் இன்டர்கோமின் ரிஸீவரை எடுத்தான். பட்டினைத் தட்டிவிட்டுக் கத்தினான். ''ஹலோ... ஹலோ...''

ரிசப்ஷனிலிருந்து ஒரு பெண்ணின் குரல் கேட்டது. தெளிவான ஆங்கில உச்சரிப்பு.

''என்ன வேண்டும் உங்களுக்கு?''

'' ஒரு டாக்டர் கிடைப்பாரா?''

''யாருக்கு... என்ன உடம்பு?''

''என்னுடைய அப்பாவுக்கு மார்புவலி. வலியால் சிரமப்படுகிறார். ஹோட்டலில் எவரேனும் டாக்டர்கள் தங்கியிருந்தால்... அவர்களுக்குத் தகவல் கொடுத்து...''


''மன்னிக்கவேண்டும். ஹோட்டலில் இப்போது டாக்டர்கள் எவரும் தங்கியிருக்கவில்லை. டாக்டருக்கு நாங்கள் ஏற்பாடு செய்கிறோம். பேஷண்டுக்குப் பக்கத்தில் உங்களைத் தவிர வேறு யாராவது இருக்கிறார்களா?''

''இருக்கிறார்கள்''

''நல்லது. அவர்களிடம் பேஷண்டைப் பார்த்துக் கொள்ளும் பொறுப்பை ஒப்படைத்துவிட்டு நீங்கள் ரிசப்ஷனுக்கு வாருங்கள்.''

**(தொடரும்...)**

# மனித உடம்பில் இவ்வளவு விஷயங்களா?



♦ நன்கு வளர்ந்த ஒரு மனிதனின் உடலில் மொத்தம் 206 எலும்புகள் உள்ளன. ஆனால், அவன் குழந்தையாக இருக்கும் போது அவனுடைய உடலில் 300 எலும்புகள் இருக்கும் அவன் வளர வளர அவற்றில் 94 எலும்புகள் மற்ற எலும்புகளுடன் இணைந்து விடுகிறது.

♦ நாம் 6 விநாடிக்கு ஒரு முறை கண்களை இமைக்கிறோம். சாதாரணமாக வாழ்நாளில் சுமார் 25 கோடி முறைகள் கண்களை இமைக்கிறோம்.

♦ நமக்கு இரண்டு கால்கள், இரண்டு கண்கள், இரண்டு காதுகள், இரண்டு கைகள் இவைகள் ஒரே அளவாக இருப்பதில்லை காரணம்கருவில் சிசு வளரும்போது அதன் உறுப்புகள் ஒரே சீராக வளர்வதில்லை. இந்த மிகச் சிறிய வத்தியாசம் தான் நம்மை அழகுபடுத்திக் காட்டுகிறது. நம் இடது கால் செருப்பை விட வலதுகாலின் செருப்பு வேகமாக தேய்வது கூட இந்த சிறு வித்தியாசத்தால்தான்.

♦ மனிதன் இறந்தபின் அவனது ஜீரண உறுப்புகள் தொடர்ந்து 24 மணி நேரம் வரை செயல்படுகிறது. அவனது எலும்பு தொடர்ந்து 4 நாட்கள் வரை செயற்படுகிறது. தோல் தொடர்ந்து 5 நாட்கள் வரை பணி செய்கிறது. கண் மற்றும் காது தொடர்ந்து 6 மணி நேரம் பணி செய்கிறது தசைகள் ஒரு மணி நேரம் செயல்படுகிறது. அவனது சிறுநீரகம் தொடர்ந்து 6 மணி நேரம் செயற்படுகிறது. ஆக அவனது உயிர் பிரிந் தாலும் அவனது உடல் உறுப்புகளின் செயற்பாடுகள் நிறுத்தப்படவில்லை.

♦ 50 நாட்களுக்கு ஒரு முறை மாதவிடாய் ஆகும் பெண்களுக்கு 300 நாட்களில் குழந்தை பிறக்கிறது. 28 நாட்களுக்கு ஒரு முறை மாதவிடாய் ஆகும் பெண்களுக்கு 280 நாட்களில் குழந்தை பிறக்கிறது. இது தவிர மாதவிடாய் பிரச்சனைகள் உள்ள பெண்களுக்கு குழந்தை பிறப்பும் சற்று முன்னாடியே (குறை பிரச வம்) அமைந்துவிடுகிறது. பெண்கள் இது விஷயத்தில் கவனம் கொள்ள வேண்டும்.

♦ பகலில் 8 மில்லிமீட்டர் சுருங்கி இரவில் 8 மில்லி மீட்டர் உயர்ந்து விடுகிறோம். காரணம், பகலில் நமது வேலைகள் செய்யும்போது தண்டு வடத்திலுள்ள குறுத்தெலும்பு வட்டுகள் ஈர்ப்பு விசைகாரணமாக அழுத்துகின்றன. இதனால் உயரம் குறைகிறது. இரவில் எவ்வித விறைப்புத் தன்மையும் இல்லாமல் படுத்து உறங்குவதால் நமது உடம்பின் உயரம் கூடுகிறது.

♦ நம் இரத்தத்தில் சிவப்பணுக்களின் ஆயுட்காலம் 127 நாட்கள்தான் அதன் பிறகு அது மடிந்துவிடும். புது சிவப்பணுக்கள் உருவாகும். இரத்தத்தில் வெள்ளை அணுக்களின் ஆயுட்காலம் 120 நாட்கள்.

♦ நம் உடலில் சுமார் 20 லட்சம் வியர்வை சுரப்பிகள் இருக்கின்றன. அவை ஒரு நாளில் சராசரியாக 5 லிட்டர் முதல் 6 லிட்டர் வியர்வையை வெளிப்படுத்துகின்றன.

♦ நமது கைகளில் நடுவிரலில் நகம் வேகமாகவும், கட்டை விரலில் நகம் மெதுவாகவும் வளர்கின்றன. நம்முடைய உடல் பாரத்தால் கைவிரல் நகத்தைவிட கால்விரல் நகம் மெதுவாக வளர்கிறது.

♦ நாம் இரவில் தூங்கும்போது அசையாமல் தூங்குவதில்லை, சுமார் 40 முறை அந்தப் பக்கம், இந்தப்பக்கமாகப் புரண்டு படுக்கிறோம்.

♦ நம்முடைய உடல்தோலின் பருமன் மிகக் குறைந்தபட்சம் மில்லி மீட்டர் கண்ணிமைகளிலும், அதிகபட்சமாகப் பருமன் 4 முதல் 6 மில்லி மீட்டராக உள்ளங்கைகளிலும், அடிப் பாதங்களிலும் அமைந்திருக்கிறது.

♦ மூளை அதிகமாக வேலை வாங்கும் மனித உறுப்பு கட்டை விரல்கள்.

♦ மனித உடலில் மிகவும் கடினமான பாகம் தாடை எலும்பு.

♦ மனித மூளை 80 முதல் 85 சதவீதம் தண்ணீரைக் கொண்டதாகும்.

♦ கல்லீரல் 500 விதமான இயக்கங்களை நிகழ்த்துகிறது.

♦ நம் உடல் தசைகளின் எண்ணிக்கை 630.

♦ நம் உடலின் மொத்த எடையில் 12 சதவீதம் பங்கு இரத்தம் உள்ளது.

♦ நம் தலைமுடி 1 லட்சத்திலிருந்து இரண்டு லட்சம் வரை உள்ளன. அவை 1 மாதத்திற்குள் 1-1/4 செ.மீ. வளர்கின்றன.

♦ மண்டை ஓடு மனிதனின் 80 ஆம் வயது வரை வளர்கிறது.

♦ மனித முகங்களை மொத்தம் 520 வகைகளுக்குள் அடக்கிவிடலாம்.

♦ மனித நாக்கின் நீளம் 10 செ.மீ.

♦ நாம் படுத்திருக்கும்போது 1 நிமிடத்திற்கு 9 லிட்டர் மூச்சுக் காற்றும் உட்கார்ந்திருக்கும்போது 18 லிட்டர் மூச்சுக்காற்றும், நடக்கும்போது 1 நிமிடத்திற்கு 27 லிட்டர் மூச்சுக்காற்றும் தேவைப்படுகிறது.

♦ நமது சிறுநீரகத்தில் பத்து லட்சத்திற்கும் மேற்பட்ட வடிகட்டிகள் இருக்கின்றன. இவைகள் ஊறுகாய், உப்புக்கருவாடு, சாராயம் போன்றவற்றால் பாதிப்படைகிறது.

♦ பெண்களைவிட ஆண்களுக்கு மூளை மிகப்பெரியது. பெண்களை விட சுமார் 4000 உயிரணுக்கள் ஆண்கள் மூளையில் கூடுதலாக இருக்கிறது.

♦ மனித உடலில் மிகப்பெரிய உறுப்பு தோல்.

♦ நமது தலையின் எடை 3.175 கிலோ கிராம்.

♦ மூளையின் 100 கோடி நியூரான்கள் நமக்கு 4 வயதுக்குள் கிடைத்துவிடும்.

♦ நாம் ஒரு பொருளை இறுக்கிப்பிடிக்க நம்கட்டை விரலிலுள்ள 3 தசைகள்தான் பெரும் பங்கு அளிக்கின்றன. மனிதனை ஒத்த உருவம் கொண்ட சிம்பன்ஸி குரங்கிற்கு இந்த 3 தசைகள் கிடையாது.

♦ மூளையின் மடிப்புகளே அறிவு கூர்மையை தீர்மானிக்கிறது.

♦ மனித உடலில் இருக்கும் இரத்தம் 30 அடி தூரம் வரை பீய்ச்சியடிக்கும்.

♦ பிறந்த குழந்தைக்கு வெள்ளை / கறுப்பு நிறங்களைத் தவிர வேறு நிற வேறுபாடே தெரியாது.

♦ மனித உடலில் 33 முள்ளெலும்புகள் உள்ளன.

♦ இதயத்தை, சிறுநீரகத்தை, கல்லீரலை, முழங்காலை மாற்றலாம். ஆனால், மூளையை மட்டும் மாற்றவே முடியாது. காரணம், ஞாபகங்கள், நினைவுகள், எதிர்காலத்தில் மாற்ற மீண்டும் இதயத்திற்குத் திரும்ப எடுத்துக் கொள்ளும் நேரம் 30 செக்கன் ஆகும்.

●




சிவப்பு கிரகம் என அழைக்கப்படும் செவ்வாயில், உயிர்கள் வாழ ஏற்ற சூழல் நிலவுகிறதா? என விஞ்ஞானிகள் தீவிர ஆய்வு நடத்திவருகின்றனர். இது ஒருபுறமிருக்க, அங்கு மனிதர்களை குடியேற்றும் திட்டத்தை உலக நாடுகள் மேற்கொண்டு வருகின்றன. அதன்படி சுமார் 40 பேரை கொண்ட ஒரு காலனியை அங்கு நிறுவ திட்டமிடப்பட்டு உள்ளது.

நெதர்லாந்தை மையமாகக் கொண்டு செயல்பட்டு வரும் தனியார் நிறுவனமான 'மார்ஸ் ஒன்' அமைப்பு, இதற்கான பணிகளை மேற்கொண்டு வருகிறது. விண்வெளி பயணம் மேற்கொள்ளும் தகுதி வாய்ந்தவர்களை தேர்வுசெய்யும் பணிகளை இந்த நிறுவனம் ஏற்கனவே தொடங்கிவிட்டது. இதற்கான அறிவிப்பு வெளியான உடனே, உலகம் முழுவதிலும் இருந்து 2 லட்சத்து 2 ஆயிரத்து 586 பேர் செவ்வாய் பயண திட்டத்துக்கு விண்ணப்பித்தனர். இது ஒரு வழி பயணம் ஆகும். செவ்வாய் கிரகத்துக்கு பத்திரமாக போய் சேர்ந்தால் அங்கு இருந்து திரும்பி வரமுடியாது.

இந்த வினோத பயணத்திற்காக உலகம் முழுவதும் இருந்து விண்ணப்பித்தவர்களின் பட்டியலில் இருந்து 3 சுற்று சோதனைகள்

நடத்தி, 50 ஆண்கள், 50 பெண்
தயாரிக்கப்பட்டு உள்ளது. இ
இருந்து 39 பேர், ஐரோப்பியர் 31,
மற்றும் ஓசியானியாவில் இருந்

முன்னதாக 2 ஆவது சுற்
செய்யப்பட்டனர். ஆனால், மா
மருத்துவ அதிகாரி நார்பர்ட் கிரா
கூறுகையில், 'எவ்வளவு வலி
நேர்காணலில் பங்கு பெற்றிருக்கி
அசந்துபோனோம். இந்த தேர்
என்று கூறினார்.

சாரதா பிரசாத் இந்தியாவி
பல்கலைக்கழகத்தில் மெக்கா
வருகிறார். இவர், நிருபர்க
கிரகத்துக்கான பயண தேர்வுக்கு
செய்யப்பட்டனர். இதில் இ
நான்தான் என்பதில் மிகவு



# வாய்க்கிரக ஒரு வழிப்பயணத்திற்கு
# களுக்கு இணையாகச் செல்லும் பெண்கள்!

ண்கள் கொண்ட 100 பேர் பட்டியல்
இந்த பட்டியலில் அமெரிக்காவில்
, ஆசியாவில் இருந்து 16, ஆப்பிரிக்கா
ந்து தலா 7 பேர் அடங்குவர்.

ற்றின் முடிவில் 660 பேர் தேர்வு
மார்ஸ் ஒன் நிறுவனத்தின் தலைமை
ாப்ட் நடத்திய இது குறித்து நார்பர்ட்
ிமையான பங்கேற்பாளர்கள் இந்த
கிறார்கள்? உண்மையிலேயே நாங்கள்
ர்வு மிகவும் கடினமாக இருந்தது'

வின் கேரள மாநிலத்தை சேர்ந்த
கானிக்கல் என்ஜினீயரிங் படித்து
களிடம் கூறியதாவது, செவ்வாய்
கு, 3 ஆவது சுற்றில் 100 பேர் தேர்வு
இந்தியாவை சேர்ந்த ஒரே பெண்
யும் மகிழ்ச்சியும், பெருமையும் அடைகிறேன். நான் தேர்வு செய்யப்பட்டது, எனக்கு 13 ஆந்திகதியே தெரியும். இருப்பினும், வெளியே சொல்லக்கூடாது என்று கூறிவிட்டனர்.

செவ்வாய் கிரகத்துக்கு சென்றால், திரும்ப முடியாது என்பதால் ஆரம்பத்தில் எனது பெற்றோர் இதற்கு சம்மதிக்கவில்லை. இப்போது எனது பெற்றோர் முழு சம்மதம் தெரிவித்துவிட்டனர். எனக்கு விண்வெளி அறிவியலிலும், தொழில்நுட்பத்திலும் ஆர்வம் அதிகம். அத்துடன், சவால்களை எதிர்கொள்வதிலும் சாகசங்கள் புரிவதிலும் ஆர்வம் உண்டு. செவ்வாய்க் கிரக பயணத்தில் இவை இரண்டும் இருப்பதால், செல்வாய்க் கிரகத்தில் குடியேற ஆர்வமாக இருக்கிறேன் என்று கூறினார்.

தற்போது தேர்வு செய்யப்பட்டவர்களிடம் இன்னும் சில கடினமான சோதனைகள் நடத்தப்பட்டு இறுதிப்பட்டியல் தயாரிக்கப்படும். அந்த பட்டியலில் இடம்பிடிப்போருக்கு 7 ஆண்டுகள் விண்வெளி பயிற்சி அளிக்கப்பட்டு 2024 ஆம் ஆண்டிலிருந்து பகுதி பகுதியாக செவ்வாய்க் கிரகத்துக்கு அனுப்பிவைக்கப்படுவர் என மார்ஸ் ஒன் அமைப்பு கூறுகின்றது. ●




# மாதொருபாகன் சர்ச்சையும் கொழும்பு தமிழ்ச்சங்கக் கலந்துரையாடலும்

இலக்கிய கலந்துரையாடல்கள் எனும் பெயரில் நடைபெறுகின்ற கூட் டங்கள் பெரும்பாலும் தனிமனித துதி பாடுபவை யாகவோ அல்லது இலக்கிய வாதிகள் எனும் மகுடம் சூட்டப்பட்ட சிலர் அதிமேதாவித் தனத்துடன் எவ்வித இரசனையும் இன்றி ஒரு விடையத் தைப்பற்றி மிகவும் தட்டையாக பேசிக் கொண்டிருக்க, பார்வையாளர்கள் இருக்கவும் முடியாமல் எழுந்து செல்லவும் முடியாமல் நெளிந்து கொண்டிருக்கும் ஒன்றா கவோ காணப்படுகின்றன. இப்படியான கூட்டங்களில் சிக்குண்டு தவிக்கின்ற சந்தர்ப் பங்களில் எனக்கு இரண்டு வகையான விபரித எண் ணங்கள் தோன்றுவதுண்டு. ஒன்று இலக்கிய பேச்சு என்கின்ற பெயரில் வதைத்துக்கொண் டிருப்ப வர்களை கொன்றுவிடலாமா? என எண்ணத் தோன்றும் அல்லது இப்படியான பேச்சை எல்லாம் கேட்க்க வேண்டியிருக்கின்றதே பேசாமல் தற்கொலை செய்து வாழ்க்கையை முடித்துக்கொள்வோமா? என சுய கழிவிரக்கம் கொள்ளவைக்கும் இதனால் பெரும்பாலும் இலக்கியக் கூட்டங்களை தவிர்த்துக் கொள் வதை வழக்கமாக கொண்டுள்ளேன்.

ஆயினும், அண்மையில் கொழும்பு தமிழ்ச்சங்கத்தில் மாதொருபாகன் நூல் தொடர்பான இலக்கியக் கருத்தாடற்களம் நடைபெற உள்ளது என்கின்ற செய்தி என்னை அதிகம் கவர்ந்தது. இலக்கியக் கலந்துரையாடல்களில் இருந்த தயக்கம் காரணமாக வழமைபோல் இச் செய்தியினைக் கண்டுகொள்ளாமலேயே விட்டுவிட எண்ணிய போதும் மாதொருபாகன் என்ற நூல் தொடர்பான சர்ச்சையில் எனக்கிருக் கின்ற ஆர்வமும் அது பற்றிய மற்றவர்களின் கருத்தை அறியவேண்டும் என ஆவலும் அக்கூட்டத்தில் கலந்துகொள்ளத் தூண்டியது. ஏற்பட்டது. (விதி யாரைத்தான் விட்டது) அதில் கலந்துகொண்டபோதுதான் விளங்கியது அட எவ்வாறான பெரிய தவறை செய்துவிட்டோம் என்று. சில உள்நோக்க ங்களைக் கொண்ட, பக்கசார்பான, விடய ஞானமற்ற இத்தகைய இலக் கிய கருத்தாடற் களங்கள் சாமானியர்களுக்கு இலக்கியம் தொடர்பான ஓர் எதிர்வினையும், அருவருப்பையும் தோன்ற வைத்துவிடுகின்றதே என்ற ஆதங்கம் என்னுள் வியாபித்திருந்ததை அக்கலந்துரையாடலின் இறுதியில் உணர்ந்து கொண்டேன். அன்றைய கலந்துரையாடலில் கலந்துகொண்ட பார்வையாளர்களில் பலர் மாதொருபாகன் என்ற நூலைப் பற்றியோ அது தொடர்பில் அண்மையில் எழுந்திருந்த சர்ச்சைகளைப்பற்றியோ அறியாதவர்களா கவே இருந்தனர் என்பதை புரிந்துகொள்ளக் கூடியதாக இருந்தது. இதுவே கூட்ட

ஏற்பாட்டாளர்களுக்கு வசதியாக போயிற்றோ என்னவோ? அன்றைய பேச்சாளர்களும் மாதொரு பாகன் என்ற நூல் தொடர்பில் ஆழ்ந்த வாசிப்பு இல்லாதவர்கள் போலவே பேசினார்கள். ஒன்று மட்டும் தெளிவாக விளங்கியது. கூட்டத்தில் கருத்துக் கூறிய பேச்சாளர்கள் தென்னிந்திய பத்திரிகைகளில் வெளிவந்த விமர்சனங்களை மட்டும் வாசித்து விட்டு அங்கு வந்துள்ளனர் என்பதுடன் மாதொருபாகன் என்ற நூல் தொடர்பில் அவர்களிடத்து ஆழ்ந்த வாசிப்பு இருந்ததாக தெரியவில்லை. அங்கு பேச வந்த பேச்சாளர்களில் ஒருவர் தனக்கு தெரிந்த மேற்க்கத்தேய இலக்கியத்தைப்பற்றியும், மாதொருபாகனையும் மகாபாரதத்தையும் இணைத்து துரோபதைக்கு ஐந்து கணவன்மார்கள் இருந்திருக்கிறார்கள். எனவே, மாதொருபாகன் நூலில் தெரிவிக்கப்பட்ட கருத்துக்களில் தவறு ஏதும் இல்லை எனக்கூறி இதிகாசங்கள் தொடர்பிலும் மாதொரு பாகன் என்ற நூல் தொடர்பிலும் தமக்கிருக்கின்ற




அறிவின்மையை வெட்டவெளிச்சமாக வெளிப்படுத்தியிருந்தார்.

இந்த கூத்துக்களெல்லாம் ஒரு வழியாக நிறைவேறி முடிந்து, கூட்டத்தினர் தம்மை ஆசுவாசப்படுத்திக்கொள்ள முனைந்தபோது பார்வையாளர்கள் கருத்துத் தெருவிக்கலாம் என ஓர் அறிவிப்பு வந்தது. அப்போதுதான் உச்சக்கட்ட விபரீதம் நடந்தது. பார்வையாளர் கூட்டத்தில் இருந்து எழுந்துவந்த ஒருவர் தனது மகள் பாடசாலை மட்ட போட்டி ஒன்றில் சிறுகதையில் முதலிடம் பெற்றது பற்றியும் அது தொடர்பான சர்ச்சைகள் பற்றியும் சிலாகித்து கூறி மரத்தால் விழுந்தவனை மாடேறி மிதித்தது போன்ற ஓர் அவல நிலைக்குள் அனைவரையும் ஆழ்த்தினார்.

இங்கு வலியுறுத்த வந்த விடயம் யாதெனில், இந்தியாவின் தமிழ்நாட்டில் அண்மையில் இடம்பெற்ற மாதொரு பாகன் என்ற நூல் தொடர்பான சர்ச்சையும் அதனை எழுதிய பெருமாள் முருகன் என்ற எழுத்தாளருக்கு ஏற்பட்ட மன உளைச்சலும் மிகவும் உணர்வு பூர்வமானவை, மிகவும் ஆழ்ந்து கவனத்துடன் கலந்துரையாடப்பட்டிருக்க வேண்டிய விடயம்.

இது ஓர் எழுத்தாளன் மற்றும் ஒரு சமூகப் பிரிவினர் என்ற இரண்டு தரப்பினரின் உணர்வுகளுடன் தொடர்புபட்ட விடயம். இது பற்றிய கலந்துரையாடலை பொறுப்பற்ற விதத்தில் வடிவேலுவின் நகைச்சுவை போன்று கையாண்டிருப்பது தவறு என எண்ணத்தோன்றுகின்றது.

கொழும்பு தமிழ்ச்சங்கம் போன்ற சமூக அங்கீகாரம் கொண்ட அமைப்புக்கள் வெறுமனே சில பதிவுகளுக்காக மாத்திரம் ஏனோதானோ எனச் சில கலந்துரையாடல்களை நடத்துவது அதன் ஒட்டுமொத்த செயற் பாட்டையும் தரங்குறையச் செய்யும் ஒன்றாக அமைந்துவிடாதா? இலக்கிய வாதிகள் மேடையில் பேசும்போது பேசுகின்ற விடயம் பற்றிய ஆழ்ந்த அறிவு இல்லாது வெறுமனே கருத்துரைப்பதானது இளம் தலைமுறையினருக்கு ஒரு தவறான முன்னுதாரணத்தையும் வழிகாட்டலையும் வழங்குவதாகாதா? இது தவறில்லையா? இலக்கிய அமைப்புக்களே இலக்கியவாதிகளே இது பற்றிச் சிந்திப்பீர்களா? ●

# நீங்கள் நலமா?

## டாக்டர் சாருலதா பதிலளிக்கிறார்

**கேள்வி :** நான் ஒரு ஓய்வுபெற்ற அரசாங்க ஊழியன். எனக்கு இரத்த அழுத்த நோய் இருக்கிறது. இதனால் எனக்கு மாரடைப்பு வரலாம் என நினைக்கிறேன். மாரடைப்பு வந்தால் என்ன முதல் உதவி செய்வது, மாரடைப்பு வருவதை எப்படி உணர்வது?

**பதில் :** இரத்த அழுத்தம் உள்ளவர்களுக்கு மாரடைப்பு, சிறுநீரகக் கோளாறு, பக்கவாதம் உள்ளிட்ட நோய்கள் வருவதற்கான வாய்ப்பு உள்ளது. இதைத் தடுக்க இரத்த அழுத்தம் உள்ளவர்கள் இரத்த அழுத்தத்தை கட்டுப்படுத்துவதே முதல் கட்டமான நடவடிக்கை. சர்க்கரை நோய் உள்ளவர்கள், கொலஸ்ட்ரால் அதிகம் உள்ளவர்கள், உடற்பயிற்சி செய்யாதவர்கள் போன்றவர்களுக்கும் மாரடைப்பு வர கூடுதல் வாய்ப்பு உள்ளது. இதைத் தடுக்க தினமும் நடைப்பயிற்சி, உணவுக் கட்டுப்பாடு, இரத்த அழுத்தத்தைத் தடுக்கும் மாத்திரைகளை உட்கொள்வது அவசியம். இடது பக்க நெஞ்சுவலி, இடது தோள்பட்டை, இடது கை வலிப்பது, மூச்சு திணறல், படபடப்புடன் கூடிய வியர்வை போன்றவை தொடர்ந்து இருந்தால் அது மாரடைப்புக்கான அறிகுறி. எனவே, உடனடியாக அருகில் உள்ள மருத்துவமனையை நாடுங்கள். மாரடைப்பு வருமோ என பயம் கொண்டிருந்தால், மருத்துவரை கலந்து ஆலோசித்து சிகிச்சை பெறுங்கள்.

**கேள்வி :** எனக்கு வயது 28. நீண்ட நேரம் உட்கார்ந்து இருந்தாலோ அல்லது நின்றாலோ கால்கள் மரத்துவிடுகின்றன. இப்படி, மரத்துப்போகிற கால்களைச் சரிப்படுத்தி எழுவதற்குள் போதும் போதும் என்றாகிவிடுகிறது. ஏன் இப்படி நடக்கிறது? என்ன சிகிச்சை எடுத்துக்கொண்டால், இந்தப் பிரச்சினையைத் தவிர்க்கலாம்?

**பதில் :** 'உங்களுக்கு, கால் நரம்புகள் பாதிக்கப் பட்டிருக்கலாம். இந்தப் பாதிப்பு விற்றமின்கள் பி, டி மற்றும் இரும்புச்சத்துக் குறைபாடு காரணமாகவோ, தைராய்டு சுரப்பில் குறை பாடு இருந்தாலோ ஏற்பட லாம். தவிர, சர்க்கரை நோய் அல்லது சர்க்கரை நோய்க்கு முந்தைய நிலை (Prediabetes - IGT) மற்றும் முடக்கு வாதம் ஆகிய நோய்களின் அறிகுறியாகவும் இருக்க லாம். சில சமயங்களில், முதுகெலும்புக்குக் கீழ் பகுதியில் சவ்வு விலகுவ தாலும் (Lumbar Disc Prolapse) கால் நரம்புகள் பாதிக்கப்பட லாம். உங்களுக்கு எதனால் இந்தப் பிரச்சினை ஏற்பட்டுள்ளது என்பதை முதலில் கண்டறிய வேண்டும். அதன் பிறகுதான் சிகிச்சையைப் பரிந்துரைக்க முடியும். எனவே, முதலில் நரம்பியல் மருத்துவர் அல்லது உங்கள் குடும்ப மருத்துவரை அணுகி ஆலோசனை பெறுங்கள். அவர் சில பரிசோதனை களைப் பரிந்துரைப்பார். பரிசோதனை முடிவுகள் அடிப்படை யில் சிகிச்சை பெறுவது நல்லது.'

**கேள்வி :** எனக்குக் கடந்த பெப்ரவரி 2011இல் திருமணம் நடந்தது. அடுத்த ஆண்டே, முதல் குழந்தை பிறந்தது. குழந்தை பிறந்த பிறகு எனது மனைவிக்கு மாதவிடாய் ஏற்படவில்லை. அடுத்தடுத்து ஏப்ரல் 2013, ஆகஸ்ட் 2014 எனக் குழந்தைகள் பிறந்தன. ஆனால், முதல் குழந்தை பிறந்ததில் இருந்து இதுநாள் வரை மாதவிடாய் வரவே இல்லை. இதனால் என் மனைவிக்கு ஏதேனும் பிரச்சினை இருக்குமா? விளக்கமாக பதில் தாருங்கள்...'

**பதில் :** 'குழந்தைப் பிறப்பு வரை மாதவிடாய் சுழற்சி சரியாக வந்திருக்கும்பட்சத்தில் மீண்டும் மாதவிடாய் சுழற்சி ஏற்பட, சராசரியாக 10 மாதங்கள் வரை ஆகும். உங்கள் மனைவியின் வயதும், பிரசவித்த முறையும் குறிப்பிடவில்லை. அடுத்தடுத்துப் போதிய இடைவேளை இல்லாமல் பிரசவிப்பது பெண்ணின் உயிருக்கே ஆபத்து என்று மருத்துவ ரீதியாக நிரூபிக்கப்பட்டுள்ளது. மாதவிடாய் வராமல் இருப்பதற்கு, இந்த அடுத்தடுத்த கர்ப்பங்களினால் ஏற்பட்ட உடல் அழற்சி முக்கியக் காரணமாக இருக்கலாம். ஹீமோகுளோபின் (Haemoglobin) பரிசோதனை, உடல் எடை மற்றும் உயரம், இடை மற்றும் இடுப்பு சுற்றளவு, தைராய்டு, சர்க்கரை அளவு போன்ற பரிசோதனைகள் எடுக்கப்பட்டு, அதன் முடிவைக்கொண்டு, மகளிர் நலச் சிறப்பு நிபுணர், மற்றும் நாளமில்லா சுரப்பிகள் நிபுணரை (Endocrinologist) ஆலோசித்துத் தகுந்த சிகிச்சை பெறலாம். மேலும், மேற்கொண்டு குழந்தைகள் பெற்றுக்கொள்ளாமல் இருப்பது உங்கள் மனைவியின் ஆரோக்கியத்துக்கு நல்லது.'

**கேள்வி :** உறவினர், நண்பர்கள் வீடுகளுக்குச் சென்றால் கிரீன் டீ சாப்பிடுகிறீர்களா என்று கேட்கிறார்கள். ஸ்டார் ஹோட்டல்கள், தியேட்டர்கள், மால்கள் முதல் சைக்கிளில் டீ கேன் வைத்து விற்பவர் வரை எங்கும் கிரீன் டீ. எடை குறைய கிரீன் டீ குடியுங்கள் என விளம்பரங்கள். கிரீன் டீ உண்மையாகவே உடலுக்கு நல்லதா? எடையைக் குறைக்கிறதா? கிரீன் டீயில் என்னென்ன சத்துக்கள் இருக்கின்றன?

**பதில் :** கிரீன் டீயில் ஃப்ளேவோனாய்டு (Flavonoid), கேட்டச்சின் (Catechin) முதலான பாலிபீனால்கள் (Polyphenol) அதிகம் உள்ளன. இவை சிறந்த ஆன்டி ஆக்ஸிடன்ட்களாகச் செயல்பட்டு, உடலில் உள்ள செல்கள் சிதையாமல் பாதுகாக்கின்றன. இளமையிலேயே வயதான தோற்றம் வராமலிருக்க, தினமும் ஒரு கப் கிரீன் டீ அருந்தலாம். கிரீன் டீயில் சிறிதளவு காஃபின் (Caffeine) இருக்கிறது. இது மூளையில் உள்ள நியூரோ டிரான்ஸ்மீட்டர்களைத் தூண்டி, நரம்பு இயக்கங்களைப் புத்துணர்ச்சி அடையச் செய்கிறது. இதனால் சுறுசுறுப்பான உணர்வு கிடைக்கும். மூளை நன்றாக இயங்கும்.

கிரீன் டீ தொடர்ந்து சாப்பிட்டு வருபவர்களுக்கு, மறதி நோயான அல்சைமர், மூளையில் டோபோமைன் சரியாகச் சுரக்காததால் வரும் பார்கின்சன் போன்ற நோய்கள் வருவதற்கான வாய்ப்பு 25 சதவிகிதம் குறைகிறது.பற்களில் ஸ்ட்ரெப்டோகோக்கஸ் மியூட்டன்ஸ் (Streptococcosmutans) என்ற பாக்டீரியா வளர்ந்தால், பற்கள் பாதிக்கப்பட்டு சொத்தையாக மாறும் அபாயம் உண்டு. கிரீன் டீ குடித்தால், அதில் இருக்கும் கேட்டசின் இந்த வகை பாக்டீரியாக்களை அழித்து, பற்களைக் காக்கும். கிரீன் டீ இன்சுலின் செயற்பாட்டை சிறிதளவு அதிகரிக்கும். எனவே, சர்க்கரை சேர்க்காமல் கிரீன் டீ குடிப்பது, சர்க்கரை நோயாளிகளுக்கு நல்லது. கிரீன் டீயைத் தொடர்ந்து குடிப்பவர்களுக்கு, டைப்-2 சர்க்கரை நோய்க்கான வாய்ப்பு குறைகிறது. சர்க்கரை சேர்க்காமல் கிரீன் டீ




அருந்தினால், உடலில் உள்ள தேவையற்ற கெட்ட கொழுப்புகள் கரையும். எனவே, உடல் எடையைக் குறைக்க விரும்புபவர்களுக்கு ஏற்றது.

இதயத்துக்குச் செல்லும் வால்வுகளில் கொழுப்புக்கட்டிகள் சேர்வதைத் தடுக்கும் வல்லமை பெற்றது கிரீன் டீ. இதய நோய்கள் அண்டாமல் இருப்பதற்கும், பக்கவாதம் வராமல் இருக்கவும் கிரீன் டீ அருந்தலாம். கிரீன் டீயில் அமினோ அமிலங்கள் உள்ளன. இது உடல் மற்றும் மனச்சோர்வைப் போக்கக் கூடியது. எனவே, மன அழுத்தம் உள்ள சமயங்களில் கிரீன் டீ அருந்தலாம்.

கிரீன் டீ, ஆன்டி ஆக்ஸிடன்ட் நிறைந்தது என்பதால் உடலில் தேவையற்ற கட்டிகளை வளரவிடாது. பெருங்குடல், மார்பகம் மற்றும் ப்ராஸ்டேட் புற்றுநோய் போன்றவை வருவதற்கான வாய்ப்புகளை கிரீன் டீ குறைக்கிறது.

# "ஒளி அரசி" குறுக்கெழுத்துப்போட்டி

## 'ஒளிஅரசி' குறுக்கெழுத்துப்போட்டி
## இல. 16



**போட்டி முடிவு திகதி 25.03.2015**

### இடமிருந்து வலம்

1. தீயின் ஒரு நிலை, உறவு.
2. உள்ளத்தில் கோபமிருந்தால் வார்த்தையில் வருவது.
4. அல்லோல கல்லோலம்.
5. தண்ணீர் என்பதன் சிங்கள வடிவம் (குழம்பியுள்ளது)
9. இது எட்டு உண்டு.
10. புள் என்பதன் ஒத்தபதம்.
11. இராமாயணத்தின் நாயகி.
12. வீடு பெருக்க உதவும்.
14. காயம்.
15. விதவை என்பதன் எதிர் பதம்.
16. நளவெண்பாவின் பறவை.
18 இது இருந்தால் பறக்கலாம்.

### மேலிருந்து கீழ்

1. நடிகர் கார்த்தி நடித்த படம்.
3. பௌத்தர்களின் கடவுள்.
4. ஆய கலைகள்.
6. காற்று (திரும்பியுள்ளது)
7. லைலாவின் காதலன்.
8. பழி.
11. இதை ஒளித்து வைத்தால் திருமணம் நிற்காது.
13. சிலப்பதிகாரத்தின் நாயகி.
17. அன்னை.


Be Es En Traders
அச்சக பொருட்களின்
மொத்த விற்பனையாளர்
Tel: +94 11 2348418

அனுசரணை


**இல.14 இல் 500/= பரிசு பெறும் அதிஷ்டசாலிகள்**

ரோஜிதா ஜீவகுமார்
33/7 , அண்ணாமலை வீதி,
சுதுமலை தெற்கு, மானிப்பாய்.

சகிலா துரைராஜா
201/4, தர்மபுரம்,
கிளிநொச்சி.

கே.சுவர்ணலதா
சாமியன் அரசடி,
கரவேட்டி மத்தி, கரவேட்டி.

**சரியான விடைகளை எழுதி பாராட்டு பெறுபவர்கள்**

1. மணிமேகலை வரதராஜன்
5/3, மாரியம்மன் கோவிலடி,
கல்லடி, மட்டக்களப்பு.

2. பரமேஸ்வரி திரவீர
31 சதுக்கம் வீதி,
மட்டக்களப்பு.

3. ஜெயந்தி காந்திரோய்
அல்வாய்,
நெல்லியடி.


4. சுகிர்தா திருச்செல்வம்
வீரமுனை,
மட்டக்களப்பு.

5. கந்தையா யோகராணி,
சரசாலை தெற்கு,
சாவகச்சேரி.

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| இ[1] | ள[2] | நீ[3] | ர் | | கா[4] | வோ | லை | உ[15] |
| ந் | கு[5] | தி | | | உ | ண | கூ | ண |
| தி | ம் | ப[16] | | நா[9] | க | ம் | | வு |
| யா | ப | தி | | ளி | | கு[14] | ளி | ர் |
| இ[7] | ம் | ஸை[8] | | த | | ள் | | ம[18] |
| டை | வு | ன | க[19] | ழ் | | ள | | ல |
| ப[10] | ட் | டா | பி | சே | க[11] | ம் | ப[17] | ர் |
| சி | | | | | ட | | த | |
| உ[13] | ற | வு | | | ல்[12] | ப | வி | ல |

ஓர் எழுத்தாளனின் தொகுப்பு என்பது வெறுமனே வாசித்தலுக்காக மட்டுமே வெளிவருவது அல்ல. கலைநயத்தோடும் சுவைநயத்தோடும் சமூகத்திற்குத் தேவையான நல்ல பல கருத்துக்களைச் சொல்லிவிடுவதில் எழுத்தாளனின் பங்கு அளப்பரியது. தன்னுடைய எழுத்தின் மூலம் சமூகமானது சிறு மாறுதலையாவது அடைந்துவிடாதா? எனும் ஏக்கமே ஒவ்வொரு எழுத்தாளனினதும் எண்ணமாக உள்ளது. அத்தகைய ஓர் எதிர்பார்ப்புடனும் வாஞ்சையுடனும் உருவாக்கப்பட்டிருக்கிறது இந்த மண்வாசனை எனும் சிறுகதைத் தொகுப்பு.

ஊனம் என்பது சாதனைக்குத்தடையல்ல என்பதற்கு சரியான சான்று எழுத்தாளர் பாலேஸ்வரன் அவர்கள். கண்பார்வை அற்ற இவரது முதற்படைப்பான மண்வாசனை என்னும் படைப்பு கண்டாவளை என்னும் சிறு கிராமத்தின் வாழ்வியல் முறைகள், தொன்றுதொட்டு வரும் பழக்கவழக்கங்கள், கிராமத்தின் எழில் கொஞ்சும் வனப்புமிகு காட்சிகள், அக்கிராமத்து மக்களுடைய மனங்களின் எண்ணச்சிதறல்கள் எனப் பல்வேறுபட்ட அம்சங்களைத்தாங்கி வெளிவந்துள்ளது. சமூகம் தொடர்பாக எழுத்தாளருக்குள்ள மனப்பதிவுகளும் மாறாத கவலைகளும் அவரின் சிறுகதைகளின் மூலம் வெளிவந்துள்ளன. தேவை ஒரு சான்றிதழ், திருமணங்கள் சொர்க்கத்தில் நிச்சயிக்கப்படுகின்றன, நம்பிக்கை, இரத்தம், தொலைபேசி தந்த தொல்லை, மரண அறிவித்தல், கரையைத்தேடும் அலைகள், அன்புத்தாய், தங்கச்சங்கிலி, மண்வாசனை, யார் உறவு?, சிபாரிசுக்கடிதம், முற்றத்து மல்லிகை வாசனைக்குத் தெரிவதில்லை, செவ்வாய்தோசம், இவர்கள் இப்படித்தான் போன்ற சிறுகதைகள் மனங்களை இரம்மியமாக்கி உணர்வுகளை உரசிச்செல்கின்றன.




ஒரு எழுத்தாளனாய், சமூகசேவையாளனாய், தன்னம்பிக்கையுள்ள மனிதனாய் எனப் பல பரிணாமம் கொண்ட இவரது இப்படைப்பானது வன்னி மண்ணின் வரலாற்றுச் சான்றுகளுள் ஒன்றென்றால் மிகையல்ல.

இவர் போன்ற எழுத்தாளர்களை ஊக்குவிக்க வேண்டியதன் அவசியத்தை உணர்ந்தே மண்வாசனை என்னும் இவரது படைப்பை வெளியிட்டு மகிழ்வித்திருக்கின்றது கண்டாவளைப் பிரதேச செயலகம். கண்டாவளைப் பிரதேசசெயலகத்தின் ஆண்டுவெளியீட்டு மலரான ''வளை ஓசை'' என்னும் நூலிலும் இவரது ஆக்கம் வெளிவந்தமை குறிப்பிடத்தக்கது. ●



# மார்ச்



**மேடம் :** பொறுமை சகிப்புத்தன்மையால் காரிய சித்திகள் ஏற்படும். சிலருக்குக் குருட்டு அதிர்ஷ்டமுண்டு. பிறர் உதவினால் மட்டுமே பயண முயற்சியில் தடம் பதிக்கவும். திருமணம் நிறைவேற்ற தரகர்களின் உதவியை / விளம்பரத்தை நாடுதல். புதியன கொள்முதல் செய்யும்போது நம்பகத்தைப் பாருங்கள். ஓய்வுக்குப் பின்னரும் மீள் நியமனம் பெற விழைதல். அசாதாரண வேகம் விபத்தைத் தரலாம். பொறுப்பின்றி எவருக்கும் உதவக்கூடாது. பணம் பெறுகையில் சரியாகக் கணக்கிடவும். பெற்றோரின் நோய் நிலையினால் விடுப்பில் நிற்க நேரிடலாம். சுரண்டிப் பாருங்கள். பணம் சேரலாம்.



**இடபம் :** பழைய மனையை மெருகூட்ட முயல்வீர்கள். சகோதர வழியில் தலையிடுவதைக் கைவிடுங்கள். பிள்ளைகளின் தவறுகளைப் பவ்வியமாகக் கண்டிக்கவும். மேலதிகாரிகளுடன் சுமுகமாக உறவினைப் பேணுவது அவசியம். திகதி தப்பிய பொருட்கள் பற்றி விழிப்பாக இருங்கள். கௌரவ பதவிகள் கிட்டலாம். விவசாய நடவடிக்கைகள் இலாப மீட்டும். மேலும் ஒரு கிளை நிறுவனம் நிறுவ ஆதங்கப்படுவீர்கள். விஷக்கடி பற்றி எச்சரிக்கை நன்று. செய்தொழிலில் போதிய கவனம் எடுங்கள். திருடர் எதிரிகளினால் கவலை தக்கவைக்கும். நோய் நீங்கும்.



**மிதுனம் :** நிலுவையின் ஒரு பகுதியாவது கைக்கு எட்டும். புதிய ஜீவன் உருவாகும். சொத்துப் பிரச்சினை சுமுக நிலைக்கு வரும். திசாபுத்தி நன்றெனின் புதியன தொடங்கலாம். காதலில் வீசிய புயல் தணியும். பெற்றோரின் புத்திமதியைக் கேட்டதால் துயர் வடிந்துவிடும். வெற்று காசோலையில் கையொப்பம் இடாதீர்கள். மூத்த சகோதரியின் உதவியினால் வாகன யோகமுண்டு. பழுதான உணவுப் பண்டங்களால் தேகநலப் பாதிப்புண்டு. வாய்ச் சம்பிரதாயத்தினால் காரியத்தைச் சாதித்துக்கொள்ளல். தற்காலிகப் பணி நிரந்தரமாகிவிடும்.



**கடகம் :** பரீட்சைச் சித்தியினால் அரசுப் பணி, புலமைப்பரிசில், வெளியூர் யோகம், உயர்கல்வி முதலியன கிட்டும். தாயாரின் நோயில் கூடிய கவனம் எடுங்கள். கடனை அடைக்க மேலும் கடன் பெறுதல். பயண முகவரினால் சிலர் மோசடிக்குள்ளாதல். நட்டம் காரணமாக பங்குத் தொழிலில் சேர முற்படல். பணம் / பெண் காரணமாக மாமன்மாருடன் முறுகல்நிலை தக்கவைக்கும். பழைய பொருட்களை மெருகூட்டி விற்க முயலுதல். இயற்கைச் சீற்றத்தினால் பொருளாதாரம் பாதிக்கப்படலாம். அதிர்ஷ்ட எண்களில் பெயரை அமைத்தால் கஷ்டங்கள் விலகும்.




**சிம்மம் :** சுப நிகழ்வுகள் எதிர்பாராது ஏற்படும். தம்பதியர் மத்தியில் சந்தேகம் முளைத்து சந்தோஷத்தைக் கெடுக்கும். வாய்ச்சொல் மூலம் கொடுத்த பணத்தைப் பெற முறையிடச் செல்லல். ஞாபகமறதியினால் பொருட்களை இழந்துவிடலாம். பாதுகாப்பில் அதி உச்சக் கவனத்தைச் செலுத்துங்கள். கௌரவக் குறைவினால் சிலர் பங்கினைக் கைவிட்டுத் தனித்தியங்க முற்படல். பரீட்சைப் பாதிப்பினால் கல்விக்கு முற்றுப்புள்ளி வைத்துவிடலாம். நன்கு விசாரணை செய்த பின்னரே மணமகன் பற்றி முடிவெடுங்கள். வாகன யோகமுண்டு.



**கன்னி :** புதிய முயற்சி ஆரம்பிக்க பண உதவி கிடைக்கும். புத்திர உற்பத்தி மனதிற்கு மகிழ்வு தரும். பரீட்சைச் சித்தியினால் வெளியூர் மணமகனைச் சென்றடையும் யோகமுண்டு. அரசுப் பதவிகள் கிடைக்கும். புதியன சேர பிதாவும் சகோதரர்களும் உற்றதுணையாக இருப்பர். மாதாவின் தேகநலம் மேம்படும். மனைக்கு வரும் புதியவர்களினால் எச்சரிக்கை நன்று. புண்கள் குணமடையும். பங்குப்பிரச்சினை மனதிற்கு நிறைவை ஏற்படுத்தும். அனுமதி பெறுவதற்காக அலைச்சலும் அகால வேளை உணவும் ஏற்படும். பணம் பெற தனித்துச் செல்வதைத் தவிர்க்கவும்.


# மாத இராசிபலன்



**துலாம் :** பதவி முன்னேற்றம்/சம்பள உயர்ச்சி ஏற்படும். சிலருக்கு இடமாற்றக் கடிதம் பதகளிப்பை ஏற்படுத்திவிடும். புதிய நட்பை முளையிலேயே கிள்ளி விடுங்கள். காணாக்கடியினால் வருந்த நேரிடும். வாகனப் ஓட்டப் போட்டி அசாதாரண வேகம் விபத்தைத் தரலாம். தொலைந்த ஆவணம் கைக்கு எட்டும். பிதாவின் நோய் குணமடைதல். நன்றி மறந்த நண்பரை எண்ணி மனக்கிலேசமடைதல். ஈகோவைக் கைவிட்டு சக ஊழியர்களுடன் சுமுகமான உறவினைப் பேணி காரியத்தை வெற்றிகர மாக்குங்கள். பொருட்கொள்வனவிற்காக திடீர் பயணமேற்படும்.



**விருச்சிகம் :** திட்டமிடலினால் பணி நிலைப்பாடு மேம்பாடடையும். புதியன தொடங்க விரும்பின் பணபலத்தையும் பாருங்கள். பங்குத்தொழிலை நாடவேண்டாம். நீர்த் தத்தில் கவனமெடுங்கள். போலியான பொருட்கள் வந்துசேரும் அபாயமுண்டு. முகம் பார்த்துக் கதைப்பதினால் துயர வெள்ளம் வடிந்துவிடும். முறைதவறிய காதல், வயோதிபத்திலும் பாலியல் துஷ்பிரயோகம், கட்டாயத்திருமணம், போதைவஸ்துப் பாவனையிலும் சிக்க நேரிடலாம். சனி நோயில் கூடிய கவனம் எடுங்கள். இயன்றவரை காசோலைகள் வாங்குவதைக் கைவிடுங்கள். பயணங்களை ஒத்திவைக்கவும்.



**தனு :** உடையவர் பாராவிட்டால் ஒருமுழம் கட்டையாவதுபோல் செய்தொழிலில் மிக மிக விழிப்பாக இருக்கவும். வெளியூர்ப் பயணம் மதில்மேல் பூனை நிலையை எண்ண வைக்கும். காற்றுள்ளபோதே தூற்றுவதுபோல் தேடிவருகின்ற அதிர்ஷ்டத்தைக் கைவிடவேண்டாம். மஞ்சள் கோட்டிலும் விபத்து ஏற்படலாம். வியாபார உத்திகளை மேற்கொண்டு தேங்கிய பொருட்களை விற்க முயலுங்கள். ஆவணக் குறைபாட்டினால் விபத்தை எதிர்பாருங்கள். நோய்கள் குணமடைய மருந்தில்லாத மருத்துவத்தை நாட முற்படல். நம்ப நடந்தாலும் நம்பி மட்டும் நடந்துவிடவேண்டாம்.




**மகரம் :** வியாழ சனீஸ்வர கிரகங்களின் யோக நிலையில் சாதகமாக இருப்பதினால் ஈடுபடுகின்ற முயற்சிகள் வெற்றிக்கம்பத்தை தொட்டுவிடும். தடைப்பட்டிருந்த விவாகம், வெளியூர்ப் பயணம் என்பன அந்தமாதிரி இன்பமூட்டும். பிள்ளைகளின் உயர்விற்காக சேமிப்பைத் தொடங்குதல். அயலவருடன் ஏற்பட்டிருந்த பகை மறைந்துவிடும். காணாமல்போனவர் பற்றிய நற்செய்தி எட்டும். சொந்த மனை பூமியில் கால்பதித்தல். ஆசிரிய - மாணவ உறவினால் ஸ்திரம் ஏற்படல். ஆவணங்கள் தொலைந்தாலும் பின்னர் கைக்கு வந்து சேரும். காதலில் ஏற்பட்ட சோதனை விலகும். புத்திர பேறுண்டாகும்.



**கும்பம் :** புதிய முயற்சிகள் ஆரம்பத்தில் இழுபடினும் பின்னர் நன்மையைக் கொண்டுவரும். எதிரியைக் கண்டவிடத்து மௌனத்தையும் பொறுமையையும் கைக்கொள்ளவும். பிரமுகர்களின் சிபார்சினால் புதிய பதவி ஏற்படும். அடகுவைத் தவை ஏலம் போகும் அபாயம் உண்டு. விபத்தில் எச்சரிக்கையாக இருங்கள். மனை யாளின் சொற்கேட்டதினால் மோசடி விலகிவிடும். நம்பகத்தன்மை மேலிட்டதனால் பிறருக்கு உதவி செய்ய பின்னடித்தல். கையூட்டுப் பெறுவதனால் பதவிக்குக் கேடு வரலாம். பிதா மற்றும் சகோதரர் கருணையால் தொழில் ஆரம்பிக்க உதவி ஏற்படும்.



**மீனம் :** கணக்கு வழக்கில் சந்தேகம் ஏற்பட்டதால் வாடிக்கையைக் கைவிடல். மறைமுக எதிரிகளினால் தொழிலுக்கு பாதிப்பு உண்டாகும். புதிய முயற்சிகள் ஆரம்பிக்க ஏற்ற நிலையம் தேடுதல். இரவுநேரப் பிரயாணம், துணையின்றி தனித்துச் செல்வதைக் கைவிடவும். மங்கள நிகழ்வுகள் ஏற்படும். ஐரோப்பிய நாடுகளின் எல்லை களைத் தாண்டுவதில் கெடுபிடிகளை எதிர்பாருங்கள். கலைஞர்கள், விளையாட்டுத் துறையினர் பாராட்டும் பரிசில்களும் பெறுவர். பெற்றோரின் சண்டையில் பிள்ளைகள் நடுவர்களாகச் செயற்படுதல். உணவுக்கட்டுப்பாட்டினால் நீரிழிவு குணமாதல்.



# ஸ்ரீ பத்ம புராணக்கதை

தக்ஷிண தேசத்தில் வேதமோதும் அந்தண குலத்தவர் வசிக்கும் புரந்தரமென்றொரு நகரமுண்டு. அதில் தேவசர்மா என்றோர் அந்தணர் இருந்தார். அவர் வேதாந்தங்களை நன்கு கற்றவர். அதிதிகளை ஆராதிப்பவர். யாகம் முதலான கர்மங்களை நன்கு அனுஷ்டிப்பவர். எத்தனையோ யாகங்களைச் செய்தும் அவருக்குத் திருப்தியோ, அமைதியோ ஏற்படவில்லை. ஆகவே, முற்றும் துறந்த முனிவர்களை அண்டி அவர்களிடம் ஞானோபதேசம் பெற்றுவந்தார். ஒருசமயம் ஒரு ஞானி அவருக்குத் தரிசனம் தந்தார். அவரை வணங்கி தனக்கு முக்தி கிடைக்கும் வழியை போதித்தருள வேண்டுமென வேண்டினார். அவர் ''ஸௌரபுரம் என்ற பட்டணத்தில் மித்திரவிந்தன் என்றோர் ஆடு மேய்க்கும் இடையர் குலத்து ஞானி இருக்கிறார். அவரிடம் சென்று ஞானோபதேசம் பெறுவாயாக'' என்று சொல்லிச் சென்றார்.

தேவசர்மா ஸௌரபுரம் சென்று அந்த ஊருக்கு வடக்கேயுள்ள காட்டில் ஒரு தடாகத்தின் கரையில் அமர்ந்திருந்த அந்த ஆயர் குலத்து மகானைத் தேடிக் கண்டுபிடித்தார். அந்த மகான் இருக்கும் சுற்றுப்புறங்களில் ஒன்றுக்கொன்று விரோதமுள்ள பிராணிகளெல்லாம் விரோதம் நீங்கி அன்புடன் பழகிவந்தன. தேவசர்மா அவரைப் பணிவுடன் அணுகி வணங்கி நின்றார். அவரும் அன்புடன் வரவேற்று அமரச்செய்தார்.

தேவசர்மா, அந்த மகானிடம் தனக்கு மனச்சாந்தியும், முக்தியும் ஏற்படும் உபாயத்தை உபதேசித்தருள வேண்டுமென வேண்டினார். இதைக் கேட்டு சற்று யோசித்த மித்ரவிந்தன் ''வித்துவானே! முன்னொரு காலத்தில் நடந்த சம்பவம் சொல்கிறேன் கேளும். கோதாவரிக் கரையில் பிரதிஷ்ட்டான என்றொரு நகரமுண்டு. அங்கே துர்த்தமன் என்றொரு வேதியர் இருந்தான். அவன் விக்ரமன் என்ற அரசனிடம் பல தானங்களைப் பெற்று வயிறு வளர்ப்பதையே வாழ்க்கை குறிக்கோளாகக் கொண்டிருந்தான். அவன் நாளடைவில் மரணமடைய யமதூதர்கள் அவன் உயிரைக் கொண்டு நரகம் புகுந்தார்கள். அங்கே பல தண்டனைகளை அடைந்து ஒரு தூரசாரமுள்ள வேடர் குலத்தில் பிறந்தான். அவன் ஓர் அரச குலத்தில் பிறந்த பெண்ணை மணந்தான். அவள் கணவனால் திருப்தியடையாது பரபுருஷர்களைக் காதலித்து

மகிழ்ந்துவந்தாள். வெகுகாலம் ஓர் வேறு ஒருவனுடன் வாழ்ந்து கர்ப்பம் தரித்தாள். அவளுக்கு ஒரு பெண் குழந்தை பிறந்து யௌவனம் நிறைந்து அழகாக வளர்ந்த அவளையும் அவனே மணந்தான். அப்பொழுது முதல் மனைவி கிழவியாகி மரணமடைந்து டாகினி என்ற பூதமாகப் பிறவியெடுத்தாள். பின் தன் முதல் புருஷனான வேடனை கொன்று தின்றுவிட்டாள். பிறகு இருவரும் இறந்து வேடன் சிறுத்தையாகவும், அவள் ஆடாகவும் பிறந்தார்கள்.

அந்த ஆட்டை நான் மற்ற ஆடுகளுடன் மேய்த்து வரும் நாளில் ஒரு சிறுத்தை ஆட்டு மந்தையையே கொன்றுவிடுமோ என்று அஞ்சும்படி பாய்ந்து வந்தது. நான் ஆடுகளை விட்டு ஓடினேன். அந்தச் சிறுத்தை, முன் ஜென்மத்தில் ஏற்பட்ட விரோதத்துடன் அந்த ஆட்டின் மீது பாய வர ஆடு பயமில்லாமல் அதன் அருகில் சென்று நின்றது. அந்தச் சிறுத்தை ஏதும் செய்யாமல் சும்மா இருந்துவிட்டது.

அதைக் கண்டு ஆடு, ''ஏன் ஐயா சும்மா நின்றுவிட்டீர்? என்னைக் கொன்று உமது பசியை ஆற்றிக்கொள்ளும்'' என்றது. சிறுத்தையோ இந்த இடத்தில் வந்ததும் என்னுடைய பசி தாகங்கள் நீங்கிவிட்டன. உன்னிடம் துவேசமும் இல்லை. இது என்ன விசித்திரம்'' என்றது.

அதற்கு ஆடு, ''இந்த இடத்தில் வந்தவுடன் எனக்கு பசியில்லாமல் போனதற்கும் உமக்குப் பகைமை நீங்கியதற்கும் காரணம் யாதென உரைக்க வேண்டுமென சிறுத்தையைக் கேட்க, ''எனக்குக் காரணம் தெரியாது. அந்த மரத்தின் மீது உட்கார்ந்திருக்கும் குரங்கைக் கேட்போம்'' என்றது.

நாமெல்லோரும் அந்தக் குரங்கிடம் சென்று கேட்போம். குரங்கு சொல்லிற்று, ''ஐயா அதோ பாருங்கள் அங்கே ஒரு கோயில் காணப்படுகிறதே அதில் சிவ லிங்கம் ஒன்றிருக்கிறது. அதை பிரம்மாவே பிரதிஷ்டை செய்தார். அந்த லிங்கத்துக்கு தினந்தோறும் ஸுகர்மா என்றொரு மேதாவி பூஜை செய்து வந்தார். ஒருசமயம் அவரிடம் ஓர் அதிதி வந்தார். அவரை அந்தணர் நன்கு உபசரித்தார். அவர் ஸுகர்மாவைப் பார்த்து, ''ஐயா என்ன இது. தினந்தோறும் நீர் செய்ததையே செய்து கொண்டிருக்கிறீரே. இதன் பலன் யாது?'' எனக் கேட்க, ஸுகர்மாவும் ''ஸ்சாமி எனக்கு எதுவும் தெரியாது. சிவனை சதா பூஜை செய்கிறேன். எனக்கு ஞானோபதேசம் செய்தருள வேண்டுமென்றே பகவானுக்குப் பூஜை செய்கிறேன்'' என்றார்.

அதைக் கேட்ட அதிதி மனம் மகிழ்ந்து பகவத் கீதையின் இரண்டாவது அத்தியாயத்தை ஒரு கற்பாறை மீது எழுதி அதை ஸுகர்மாவுக்கு உபதேசம் செய்து ''இதை பாராயணம் செய்து வருவீரானால் உம் எண்ணங்களெல்லாம் நிறைவேறும்'' என்று சொல்லிச் சென்றார்.

> ''இந்த இடத்தில் வந்தவுடன் எனக்கு பசியில்லாமல் போனதற்கும் உமக்குப் பகைமை நீங்கியதற்கும் காரணம் யாதென உரைக்க வேண்டுமென'' சிறுத்தையைக் கேட்டது.

ஸுகர்மாவும் ஸாக்ஷாத் சிவபெருமானே தனக்கு உபதேசம் செய்ததை அறிந்து கீதையின் இரண்டாவது அத்தியாயத்தைப் பாராயணம் செய்துவந்தார். அவர் செல்லுமிடமெல்லாம் அமைதி நிலவியது. எவருக்கும் பசி தாகம் இல்லாமல் போயிற்று என்று அந்த வானரம் சொல்ல நாங்கள் அனைவரும் அந்தக் கற்பாறை உள்ள இடத்துக்குச் சென்றோம்.

அங்கே கீதையின் இரண்டாவது அத்தியாயம் எழுதப் பட்டிருந்தது. நீயும் கீதையின் இரண்டாவது அத்தியாயத்தை பாராயணம் செய்தால் சாந்தி அடைவாய் என்று மித்திரவிந்தன் சொல்ல தேவ சர்மாவும் தம் பட்டணத்துக்கு வந்து ஒரு சுப முகூர்த்தத்தில் பகவானுடைய சந்நிதானத்தில் ஒரு பிரம்மனோத்மரிடம் கீதையின் இரண்டாவது அத்தியாயத்தை உபதேசம் பெற்று பாராயணம் செய்து தேசவியோகமான பின் பரபதமடைந்தார். ●



# உன்னால் முடியும்!

என்னடி பெண்ணே!
இன்னும் உறக்கம்
இருள் விட்டு விலகி
எழுந்திரு கண்ணே!

உன்னை வெல்லவும்
இவ்வுலகம் வெல்லவும்
எதுவென்றபோதும்
எதிர்கொள்ளடி பெண்ணே!

விழித்திருக்கும்போதே
திருட்டுப்போகும் உலகம்
விழி உறங்கும்போதும்
விழிப்புணர்வு நெஞ்சுக்குள்
திடமாய் இருத்தல் வேண்டும்

நீ
எட்டுவைத்து நடக்கும்
ஒவ்வொரு அடியும்
ஏகாந்தமாக வேண்டும்
எச்சரிக்கையும் கூட வேண்டும்
இன்னல்கள் களைய வேண்டும்
இருளகன்று ஒளிவீசவேண்டும்

முன்னேறி வருவது
முக்கியமில்லை!
முன்னேறும்போது
பின்னுக்குள்ளத்தை
முறித்துவிட்டேறினால்
முன்னுக்கு வந்தும்
பயனொன்றுமில்லை!

அடுப்படியாகட்டும்
அரசவையாகட்டும்
ஆட்சிசெய்யும் போது
அளவுக்குமீறிய
அவசரமோ! ஆத்திரமோ!
ஆணவமோ! அதிகாரமோ!
ஆகாதென்பதை
அறிந்து நடந்தால்

பொறுமையைக் கொண்டு
பெருமை சேர்த்தால்
புரியாத மனங்களும்
பூரிப்படையும்
பொன்னான
பெண்ணினம் கண்டு
போற்றி வாழ்த்தும்

சீரழிந்து விடுவது சுலபம்
சீராக வாழ்வது சிரமம்
சிரமத்தில் சிரத்தையெடு
சிறப்புகள் சிதறாமல் வரும்

சிந்தனைகளை
செதுக்கி முடிவெடு
செழித்தோங்கும்
வாழ்க்கை வந்து சேரும்

பெண்ணே!
உன்னால் முடியும்
உன்னை வெல்லவும்
இவ்வுலகை வெல்லவும்...



## மகளிர் தின சிறப்புக்கதை

# நந்தவனம்

''வேலைக்குப் போற பொண்ணுதான் எனக்கு வேணும்'' சத்யன் தீர்மானமாகச் சொன்னான். ''எதுக்கு சத்யன் நீ பெரிய கம் பனியில வேலைப் பாக்கிறாய். உன் மாசச் சம்பளமே போதுமே. அது தவிர, நமக்கு சொந்த வீடு, கார் இருக்கு. சொத்துகளும் இருக்கு. அப்பாவோட வியாபாரத்தை உங்கண்ணன் பார்த்துக் குறான். உன்னையும் வியாபாரத்துக்கு வரச் சொல் லிட்டிருக்காரு. நீதான் அத காதுல போட்டுக் கொள்ரீயே இல்ல. நீ வெளிய போய் வேலை பார்க்கறதே உங்க அப்பாவுக் குப் பிடிக்கல. இதுல உனக்கு வரப்போறவள் வேலைக்குப் போக்ணும்னா. எப்படிடா?''

''அம்மா....''

''நான் சொல்றன்னு கோபப்படாத.''

''சொல்லுடா''

''நீயும் அப்பாவும் சொல்ற எல்லாத்துக்கும் அண்ணன் தலையாட்டுவான். நான் அப்படி இல்ல. எனக்கு என் கால்ல நிக்கணும். நான் படிச்சேன். எனக்குப் பிடிச்ச வேலய தேடிக் கிட்டேன்.''

''அம்மா, கல்யாணம் என்கிறது ஒரு மனுஷனோட சொந்த விருப்பம். அதுல வேற எவரும் தலையிட முடியாது. என் விருப்பப் படி ஒரு பெண்ணை பாருங்க. நான் சொன்னா சொன்னதுதான்'' என்று சத்யன் கோபத்துடன் கூறி சென்றுவிட்டான். ''நான் கெடந்து இங்கே அவஸ்தைப்படுறன். அவங்கப்பா என்னனா வேலைக்குப் போற பொண்ணு வேணானு சொல்லுறாரு. இவன் இப்படி சொல்லிட்டு போறான்'' என்று புலம்பிக் கொண்டிருக்கையில்,

''அத்தே சாப்பிட வர்றீங்களா...?'' என்று ஒரு குரல். மூத்த மருமகள் பவித்ரா. பவ்யமாக எதிரே வந்து நின்றாள்.

''எனக்கு இப்ப பசிக்கல.''

''சரி அத்தே''

பவித்ரா உள்ளே போய்விட்டாள்.

அவளுக்குப் பசித்தது. ஆனால், சாப்பிடக் கூடாது. அது அந்த வீட்டுச் சட்டம். மாமனார், மாமியார், கணவன், மைத்துனன் எல்லாம் சாப் பிட்ட பிறகுதான் சாப்பிடவேண்டும். அவர்களும் தங்களுக்குப் பசிக்காவிட்டாலும் பவித்ராவுக் குப் பசிக்குமே என்று நினைக்கவும் மாட்டார்கள்.

பவித்ரா சொந்தக்காரப் பெண். மூத்தவன் சரவணன். அவனுக்குப் பெரிதாகப் படிப்பு ஓடவில்லை. அப்பா அவனை வியாபாரத்தில் இறக்கி விட்டார். பெரிய இடத்தில் பெண் பார்க்க முடியாது. அவரது ஒன்றுவிட்ட தங்கை மகள் பவித்ரா. தன் பெற்றோர்களை இழந்து அநா தையாக இருந்ததால் அவளையே சரவண னுக்கு முடித்துவிட்டார் அப்பா. பவித்ரா மூத்த மகள். படிப்பு அரைகுறை என்றாலும் அழகிய

தோற்றமும் அடக்கமும் நிறைந்தவள். எந்த மதிப்பும், எந்த உரிமையும் அந்த வீட்டில் அவளுக்கு இருந்ததில்லை. கல்யாணமாகி ஐந்து வருடங்கள் முடிந்துவிட்டன. இதுவரையும் குழந்தைகள் ஏதும் இல்லை. அதற்கு மாமியாரின் குத்துப்பேச்சு. மொத்தத்தில் பட்டும், நகையும் போட்டு பங்களாவில் வாழும் பணக்கார அடிமை பவித்ரா. சரவணனும் அவ்வாறே. எந்த உரிமையும் இல்லை. ஆரம்பம் தொட்டே வாயில்லாப் பூச்சாக வாழ்ந்துவிட்டான். சுயமாகச் செயற்படும் ஆற்றல் இல்லை. அப்பாவின் நிழலே சொர்க்கம் என்று ஆகிவிட்டதால் அவனுக்கு நாக்கு என்ற ஒன்று இருப்பதே சுத்தமாக மறந்துபோனவன். இளையவன் சத்யன் துடுதுடுப்பானவள். எவரையும் சட்டென்று எடுத்தெறிந்து பேசிவிடுவான். பின்விளைவு களைப் பற்றி கவலையே படமாட்டான். சுயமாகப் படித்து அவனுக்குப் பிடித்த வேலையையும் தேடிக் கொண்டு ஜமாய்க்கிறான். பெண் பார்க்கத் தொடங்கி விட்டார்கள். அம்மாவின் தவிப்பு அதிகமாகிவிட்டது. அன்று இரவு சாப்பாட்டின்போது எல்லோரும் ஒன்றுகூட அப்பா பேச்சை ஆரம்பித்தார்.

''பார்வதி நாளைக்குப் போய் பொண்ணை பார்த்துட்டு வரலாம்'' என்றார் சத்யனின் அப்பா ராஜேந்திரன்.

''அவ என்ன படிச்சிருக்கா அப்பா?''

''அவளுக்கு ஏன்டா படிப்பு. கோடீஸ்வரனோட ஒரே மகள்.''

''ஸாரிப்பா எனக்கு வேணா'' என்று வார்த்தைகளை உடைத்தெறிந்தான். ''எனக்கு படிச்ச பெண் வேணும். வேலைக்குப் போய் கைநிறைய சம்பா திக்கணும். கோபத்துடன், ''அதெல்லாம் அவசிய மில்லை'' என்று அப்பா கூற, ''அப்பா வாழப்போறது நான். இதுல என் விருப்பம் மதிக்கப்படலைனா எனக்கு இந்தக் கல்யாணமே தேவையில்லை'' என்று சத்யன் விவாதிக்க,

''உனக்குத் திமிரா'' அப்பாவின் குரல் உயர்ந்தது.

''தன்னம்பிக்கைக்குப் பேரு திமிர்னா, இது திமிராவே இருக்கட்டும். அதை இல்லைனு சொல்ல நான் தயார்ரா இல்லை'' என்று பதிலுக்குக் குரல் உயர்த்திய சத்யன், பாதியுடன் சாப்பாட்டை விட்டு எழுந்து போய் விட்டான். ''நான் சொல்ற பொண்ண கட்டிக்காட்டி இவன் இந்த வீட்ல இருக்கவேணாம்'' என்று கோபத்தைக் கொட்டிய அப்பாவும் எழுந்து உள்ளே போய்விட்டார்.

அம்மா, சரவணன், பவித்ரா மூவரும் ஸ்தம்பித்து நின்றார்கள். பெருமூச்சு விட்டபடி அம்மா, ''என்னடா சரவணா இது'' என்று மூத்தவனின் அருகில் வந்தவாறு, ''இந்தப் பிரச்சினைக்கு என்னத்தான் தீர்வு?'' சிறிது நேரம் மௌனமாய் நின்ற பார்வதியும் ராஜேந்திரனை பின்தொடர்ந்தாள். ''நீங்க சரி, மாமாகிட்ட பேசுங்க'' என்று மெல்லிய குரலில் பவித்ரா அருகில் வந்தாள்.

''உங்ககிட்டேயாவது கதைக்கிற உரிமை இந்த வீட்ல எனக்கு இருக்கா?''

''ஏன் பவித்ரா இப்படி கேக்கிற?''

''நீங்க ஊமையாய் பிறந்தாச்சு, பிறவி ஊமைகள் பேசமுடியாது. ஆனாவாய் உள்ள பிள்ளையாவது ஆசைப்பட்ட வாழ்க்கைய வாழட்டுமே''

''பவித்ரா...!''

''பாவம் சத்யன். இந்த வீட்டுக்கு இன்னொரு அடிமை வேணுமா? நான் போதாதா?'' என்று விம்மினாள். சரவணன் வேதனையுடன் அவளைப் பார்த்தான். ''எனக்காக நீங்க பேசாதீங்க. பேசவும் மாட்டீங்க. அதை நான் எதிர்பார்க்கவும் இல்லை'' சரவணனின் மௌனம் நீடித்தது. ''உங்க தம்பிக்காக பேசுங்க. அவராவது அவர் இஷ்டப்படி வாழ்க்கை வாழட்டுமே.''

பார்வையில் வலி தெரிந்தது. எழுந்து வேகமாக உள்நோக்கி நடந்தான். அப்பா தன்னறையில் நடந்துகொண்டிருந்தார். சரவணன் உள்ளே நுழைந்தான். ''அப்பா....'' நிமிர்ந்தார். கண்களில் கோபம் நிறைந்து வழிய காணப்பட்டார். ''கல்யாணம் சந்தோஷமா அமையிலனா வாழ்க்கை வேதனை ஆயிடும். தம்பிக்கு அப்படி ஆக வேண்டாமேப்பா!''

''எனக்கே உபதேசமா? நீயும் தொடங்கிட்டியா....?''

''அய்யோ. இல்லையப்பா. அந்த தகுதியெல்லாம் எனக்கில்ல அப்பா. சத்யன் மேல உள்ள பாசம்...''

''அது எனக்கில்லையா?''

''இருக்கு. நிறைய இருக்கு. அவனும் எவரையும் காதல் பண்ணிட்டு வந்து நிக்கலை. படிச்ச உத்தியோகம் பார்க்கிற பொண்ணை கேக்குறான். அப்படி ஒருத்திய நீங்களே தேர்ந்தெடுத்து குடுங்களேன். உங்களுக்கு அந்தப் பெருமையும் கிடைக்கும் இல்லையா?'' அப்பா பார்வையில் இருந்த தீவிரம் குறைந்தது.

''படிச்ச உத்தியோகம் பார்க்கிற பொண்ணுக்குத் திமிர் இருக்காதா?''

''இருந்தா உங்களுக்கு அடக்கத் தெரியாமையா அப்பா?''

''ஆமாம்''

''தம்பி மனசுபோல வாழ்க்கை அமையட்டும்பா. எனக்காக இதுவரை உங்ககிட்ட கேட்டதில்லை. பவித் ராவுக்காகப் பேசினதில்லை. தம்பிக்காக இந்த ஒரு வாட்டி மாத்திரம்....''

''சரி நீ போ. நான் யோசிக்கனும். உங்க அம்மாவை வரச் சொல்லு.''

''சரியப்பா'' சரவணன் வெளியே வந்தான்.

''அப்பா கோபப்படலேயே அநேகமாக சிந்திப்பார் போல'' என்று தனக்குள் பேசியபடி தன் அறைக்குள் சென்றான். மறுநாள் காலை... அப்பா அழைத்தார். சரவணன் ஓடி வந்தான். சத்யனும் இருந்தான்.

''உனக்கு படிச்ச உத்தியோகம் பார்க்கிற கை நிறைய சம்பாதிக்கிற பொண்ணுதானே வேணும்?''

''ஆமாம்''

''நான் தேர்ந்தெடுக்கலாமா....?''

''தாராளமா. ஆனா அந்தப் பொண்ண எனக்குப் பிடிச்சிருக்கணும். அவக்கிட்ட நான் தனியா பேச நீங்க சம்மதிக்கணும்''

''பார்க்கலாம்'' அப்பா ஒரு மணி நேரத்தில் தரகரை வரவழைத்தார். தரகரும் வந்தார். சகல விடயங்களையும் கூறினார். ''நாளைக்கு நீங்க கேட்ட தகுதியுள்ள ஒரு பொண்ணோட வாறேன் சார்.'' விடைபெற்றுச் சென்றவர், சொன்னபடி மறுநாள் வந்துவிட்டார்.''சார் மூணு பெண் பார்திட்டு வந்திருக்கேன். ரெண்டு பொண்ணுங்க பணக்கார வீட்டுப் பொண்ணுங்க. ஒன்னு மிடில்கிளாஸ் பொண்ணு. புகைப் படத்தைக் காட்டினார்.

''சத்யன் இருக்கானா பவித்ரா?''

சத்யன் வந்தான்.

''இந்த மூணு போட்டோல உனக்கு எது புடிச்சிருக்கு?'' சத்யா பார்த் தான். ஒன்றைத் தேர்ந்தெடுத்தான்.

பிரியங்கா - மிடில்கிளாஸ் பொண்ணு. ரயில்வே அதிகாரியின் மகள். மூன்று பெண்களில் இளையவள் பிரியங்கா. தனியார் கம்பெனில வேலை பார்க்கின்றார். மாதம் சத்யனுக்கு இணையான சம்பளம். ஒரு வருட வேலையில் தன் குடும்பத்தைக் கட்டியெழுப்பி விட்டாள்.''மத்தப் பொண்ணுங்க பணக்காரங்க. ஆனா, இந்தப் பொண்ணத்தான் எனக்கு புடிச்சிருக்குப்பா. இந்தப் பொண்ணையே பார்க்கலாம்'' - என்றான் சத்யன். மறுநாளே பார்ப்பதற்காக ஏற்பாடு செய்யப்பட்டது. மாலை நான்கு மணிக்கு அப்பா, அம்மா, சத்யன், சரவணன் நான்கு பேருமாய் பெண் பார்க்கச் சென்றா ர்கள். வாடகை வீடுதான். அப்பா ரிடையராக ஒரு வருடம் இருந்தது. பிரியங்கா சுடிதாரில்தான் வந்தாள்.

> அப்பாவிடம் நேருக்கு நேர் நின்று கொஞ்சமும் சளைக்காமல் - தோற்காமல் எதிர்த்து வாதாடி அப்பாவையே சமாதானம் செய்த முதல் பெண்.

ஹலோ சொன்னாள். எல்லோரிடமும் கலகலவென பேசினாள். ''உன்கூட என் பிள்ளை தனியாப் பேச ஆசைப்படுறான் மா'' 'எதுக்கு? அவர் என்ன கேக்கணுமோ அதை பகிரங்கமாக இங்கேயே கேக்கலாம். எந்த உறவும் உண்டாகாம என்ன ரகசியம்?'''என்னைக் கல்யாணம் பண்ணிக்கிட்ட பிறகு நான் வேலைய விட சொன்னா விட முடியுமா?''

''அப்படி சொல்ல காரணம்?''

''எங்கக் கிட்ட நிறையப்பணம் இருக்கு. நீ சம்பாதிச்சுதான் குடும்பம் நடக்கணும்னு இல்லை''

''வெரிகுட். நான் வேலைய விட முடியாது. அந்த அபிப்பிராயம் இருந்தா நம்ம கல்யாணம் நடக்கவேண்டாம். ரெண்டு அக்காங்க கல்யாணம் முடிஞ்சு எங்கப்பா கடன்ல இருக்காங்க. இப்ப என் கல்யாணம். அதனால என் அஞ்சு வருஷ சம்பளம் எங்கப்பாவுக்குத்தான் போகும். அதுக்கு நீங்க சம்மதிச்சாதான் இந்தக் கல்யாணம்.''

''ஒரு நிமிஷம்மா. நீ எங்க வீட்டு மருமகள் ஆன பின்னால உங்கப்பாவுக்கு எப்படி சம்பளத்தை தரமுடியும்?'' ''முதல்ல அவரோட மகள், இனிமேல

தானே உங்க மருமகள்''

''புருஷனை விட தகப்பனார் உசத்தியா?''

''அப்படி நான் சொல்லலை. என் பணமே வேண்டாம்னு சொல்ற நீங்க அதை நான் எவருக்குத் தந்தா என்னானு விடலாமே''

''பிரியா'' அப்பா குரல் கொடுத்தார்.

''இப்படியே நீ பேசினா உனக்கு கல்யாணம் நடக்கும்னு தோணல'' நடக்கலைனா போகட்டும். பெண் தனிச்சு வாழற சக்தியைத் தர்றதுதானே படிப்பும், உத்தியோகமும். இல்லைனா எப்பவும் அடிமையாத்தான் இருக்கணும்''

''புரட்சியான சிந்தனையா?''

''இல்ல. யதார்த்தமான எண்ணம்.''

''சரி. உன்னால எங்களுக்கு என்ன லாபம்?''

''நான் மாடு இல்ல வாங்கினதும் பால் கறந்து விக்க. மருமகள். மன்னிக்கவும் இவர்யாரு?''

''என் மூத்த பிள்ள சரவணன்''

''இவருக்கு கல்யாணம் ஆச்சா?''

''ஆச்சு. பவித்ரா இவன் மனைவி''

''அவங்க ஏன் வரலை இன்னிக்கு?''

''அவ வரணுமா, வேண்டாமானு தீர்மானிக்க வேண்டியது நாங்க.''

''அவங்க என்ன படிச்சிருக்காங்க?''

''பள்ளிக்கூடம் தாண்டலை''

''சம்பாதிக்கிறாங்களா?''

''படிப்பே இல்லனு சொல்றன். பின்ன எப்படி அவ சம்பாதிப்பா?''

''அவங்களால உங்களுக்கு என்ன உபயோகம்? ஸாரி என்னால என்ன லாபம்னு கொஞ்சம் முன்னாடி கேட்டீங்களே. அதனாலதான் இத கேக்குறன். ஏன்னா அவங்களும் உங்க வீட்டு மருமகள் இல்லையா?''

''மொத்தத்துல சம்பளம் இல்லாத வேலைக்காரி.''

சரவணன் முகம் சிவந்தது.

''நீ அதிகம் பேசற'' அப்பா சீற,

''இல்லை சார். மேற்படி வேலைகளை ஒரு பணக்கார வீட்ல வேலைக்காரிதான் செய்வானு நான் கேள்விப்பட்டிருக்கேன். அதனால சொன்னேன். ம்ம்ம்... விடயத்துக்கு வருவோம். நீங்க சொன்ன வீட்டு வேலைகளை எல்லாம் நானும் உங்க வீட்டுக்கு வந்தா செய்யத் தயாரா இருக்கேன். ஐமீன்... இன்னொரு வேலைக்காரி''

''நீ பெரிய படிப்பெல்லாம் படிச்சவள்.''

''தப்பில்ல. உன்னால என்ன லாபம்னு கேட்டீங்களே அதுக்கு இது பதில். நீங்க சம்பளம் தர்றதா இருந்தா உங்க மூத்த மருமகள் சம்பளத்துல பாதி எனக்கு வரும். அது இல்ல. அதனால பிரச்சினை இல்ல. இப்ப உங்க பிள்ள என்னக் கல்யாணம் செஞ்சுக்கலாமா?'' அப்பா எழுந்தார். ''தாராளமா.... நீ படிச்சவள் உத்தியோகம் பார்க்கிறவள். ஆனா, பவித்ரா செய்யிற வேலைகளை நீ செய்யத் தயாரா இருக்கணும்''

''நிச்சயமா''

''இந்தக் கல்யாணம் நடக்கும். அப்புறம் நீ பேச்சு மாறினா, நீ உன் வேலையவிட வேண்டி வரும்''

''ஒப்புக்குறன்'' சத்யன் ஆடிப்போனான். அப்பாவிடம் நேருக்கு நேர் நின்று கொஞ்சமும் சளைக்காமல் - தோற்காமல் எதிர்த்து வாதாடி அப்பாவையே சமாதானம் செய்த முதல் பெண். அவளிடம் மதிப்பே உண்டாகி விட்டது சத்யனுக்கு.

''கல்யாணம் எங்க செலவு''

''மன்னிக்கணும். நாங்க பிச்சக்காரங்க இல்ல. எங்களால முடிஞ்சதை நாங்கச் செய்யத்தான் போறோம்''

''சம்மதம்''

''என்னைக்கு நிச்சயதார்த்தம்?'' பிரியங்காவின் அப்பா பவ்யமாகக் கேட்க, ''இன்னைக்கே. இப்பவே'' என்றார் சத்யனின் அப்பா. அங்கேயே வெற்றிலைத்தட்டு மாற்றிக்கொள்ளப்பட்டது. திகதியும் குறிக்கப்பட்டது. ஒரே மாதத்தில் கல்யாணம். வீடு வந்து சேர்ந்தார்கள். அன்று இரவு சரவணன் பவித்ராவிடம் சகலமும் சொன்னான். ''ரொம்ப நல்ல பொண்ணா இருக்கா'' என்றான் சரவணன். ''எல்லாம் இப்பப் பேசுவா படிச்சவ. தந்திரசாலி, கழுத்துல தாலி ஏறினதும் போக்கே மாறும். சத்யனை இழுத்துட்டு தனிக்குடித்தனம் போகப் போறா''

''அப்படியா சொல்ற?''

''நடக்குதா இல்லையானு பாருங்களேன்.

''நடக்கட்டும்.''

நடந்தா நானும் இந்த வீட்ல இருக்க மாட்டேன். நீ சம்பளமில்லாத வேலைக்காரியா இந்த வீட்ல கெடந்து கஷ்டப்பட வேணாம். நானும் அப்பாவுக்கு அடிமையும் இல்லை. நாங்களும் வெளியே போயிறலாம்.'' பவித்ரா ஆடிப்போனாள். ''என் புருஷனா இப்படி பேசுறார்? இந்த ஊமையை இப்படி பேச வைச்சது யாரு? அந்த பிரியங்கா இவர மறைமுகமா உசுப்பி விட்டாளா? இவருக்கா ரோஷம் பொத்துட்டு வருகுது?'' என்று பல கேள்விகளைத் தனக்குள்ளே கேட்டுக் கொண்டாள். பவித்ராவுக்கு அந்த இரவு முழுக்க உறக்க

மில்லை. சாதாரணமாக - அதிகமாக பேசாத சரவணன் தினசரி அவளிடம் பேசத்தொடங்கினான். கல்யாணம் முடிந்துவிட்டது. பிரியங்காவின் பிடிவாதப்படி சுமார் மண்டபத்தில் அவர்களது செலவில்தான் நடந்தது. ஆரத்தி எடுக்கப்பட்டு உள்ளே அழைக்கப்பட்டதும், பூஜையறையில் பிரியங்கா விளக்கேற்றினாள். முடிந்ததும் நேராக பவித்ராவிடம் வந்தாள். ''அக்கா நான் சமைக்கிறேன்.''

''இருக்கட்டும்.
நீ இன்னைக்குத்தானே வந்திருக்க''

''தப்பில்ல. என்னால இந்த வீட்டுக்கு என்ன லாபம்னு எவரும் கேட்கக்கூடாது. இப்பவே வேலைகளை பொறுப்பெடுக்கிறேன். விடிஞ்சதுல இருந்து ராத்திரி வரைக்கும் நீங்க செய்ற வேலைகள பட்டியல் போட்டு கொடுங்க. நான் காலைல எட்டரை மணிக்கு போகணும். அதுவரைக்கும் செய்ய முடிஞ்ச அளவு செய்றன். மாலை ஆறரைக்கு வந்துடுவேன். மிச்ச வேலைகள் வந்து செய்றேன்''

''வேண்டாம் பிரியங்கா.
நீ ஆபிஸ் வேலையையும் பாக்கணும். நான் இந்த வேலைகள பார்த்துக் குறேன். ''அது பிறந்த வீட்டுக்காக. இது புகுந்த வீட்டுக்காக'' சத்யன் - பிரியங்கா அன்று முதலிரவு அறைக்குள் வந்தார்கள். சத்யன் தொட, ''உங்கண்ணியோட கைவிலங்கு என்னைக்கு உடையுதோ அன்னைக்குதான் எங்களுக்கு முதலிரவு.''

''இப்ப குட் நைட்''
காலை நான்கு மணிக்கு எழுந்தாள் பிரியங்கா. அதீத வேகம். பவித்ரா நாள் முழுவதும் செய்யும் வேலையை பிரியங்கா ஒருத்தியே மூன்று மணி நேரங்களில் முடித்து விட்டாள். வீட்டில் மாமனார் உட்பட மாமி, சத்யன் என அத்தனை பேரும் மிரண்டு போனார்கள். ஒரே மாதத்தில் பிரியங்கா எல்லாரையும் மிரள வைத்து விட்டாள். வேலை நேரம் போக பவித்ராவுக்கு ஆங்கிலம், கம்பியூட்டர் என சகலமும் கற்றுத் தந்தாள்.மூன்றே மாதங்களில் பவித்ரா பெருமளவு தேர்ச்சிப் பெற்றுவிட பவித்ராவுக்கு தான் வேலை பார்க்கும் கம்பெனியில் இருபதாயிரம் சம்பளத்துக்கு ஒரு வேலை வாங்கிவிட்டாள்.

குடும்பமே மிரண்டு போனது. ''மாமா எந்த வேலையும் வீட்ல கெட்டுப் போகலை. நாளைலேருந்து அக்கா என்னோட வேலைக்கு வர்றாங்க'' என்றதுமே சரவணன் சந்தோஷத்தில் துள்ளிவிட்டான். எதுவும் தெரியாத அப்பாவி, அடிமையா இருந்த பவித்ராவுக்கு சகல விடயங்களை கற்றுத்தந்து விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தி சமூகத்தில் அவளையும் தனித்து நடமாடவிட முடியும் என்று நிரூபித்த பெண். வந்தது முதல் சண்டை போட்டதில்லை. ஒரு விவாதமோ, விபரீத விளைவுகளோ இல்லை. எந்த வேலையும் நிற்கவும் இல்லை. சிரிப்பைத்தவிர வேறு எதுவும் இல்லை. குடும்பத்தின் குதூகலம் கொஞ்சமும் குறையவில்லை. அபார சாதனை.

அன்றைக்கு மாலை பிரியங்கா வீடு திரும்பினாள். அவள் எதுவும் சொல்லவில்லை. பவித்ராதான் ஆரம்பித் தாள்.''மாமா, பிரியங்காவுக்கு லண்டன் போற வாய்ப்பு வந்திருக்கு. ரெண்டு வருஷ வேலை. மாதச் சம்பளம் காசுக்கு கிட்டத்தட்ட பத்து இலட்சம். இங்கேயுள்ள சம்பளமும் கிடைக்கும். அங்க சகல வசதிகளும் இருக்கு. அடுத்த வாரமே கிளம்பணும்''

''வாழ்த்துக்களம்மா''

''மன்னிக்கவும் மாமா. நான் போகலை''

''ஏன்மா? அற்புதமான வாய்ப்பு உன் அப்பா கடனை ஆறே மாசத்துல அடைச்சிடலாமே''

''அதுக்காக போகமுடியுமா மாமா? இந்த வருஷம் இல்லாட்டி என்ன, கடனை அடுத்த வருஷம் கட்டிக்கலாம்தானே. இங்கே என் கணவர், மாமனார், மாமியார், அன்பான அக்கானு எனக்கொரு குடும்பம் இருக்கு. எல்லாத்தையும் தனியா விட்டுட்டு அப்படி என்ன லண்டன் உயர்வு? பணத்துக்காக குடும்பத்தையும், பாசத்தையும் விட்டுட்டுப் பறந்து போறதுல எனக்கு விருப்பம் கிடையாது. நான் இந்த மண்ணுக்குச் சொந்தமான பொண்ணு. எனக்குப் பணம் பெரிசில்லை.''

அம்மா அழுதுவிட்டாள். அப்பா அருகில் வந்தார்.

''என்ன மன்னிச்சிரு பிரியங்கா. நீ உன் வேலையை இங்கேயே தொடரலாம். என் கம்பெனிக்கும் ஓ.. ஸாரி நம்ம கம்பெனிக்கும் ஆலோசனை தர அப்பப்ப நேரத்தை ஒதுக்குவியாம்மா?''

''நிச்சயமா மாமா''

''இப்ப காபி குடும்பா'' குரல் கேட்க திரும்பினார்கள் சரவணனும், சத்யனும். காபி கோப்பைகளுடன் மனைவிகள் எதிரே வந்து பவ்யமாக நின்றார்கள். ●

தகவல் தொழிநுட்பம் கம்பெனியில் வேலை பார்க்கும் மதுவிற்கு (அமைரா ) பல முகங்கள், சம்பவங்கள் முன்ஜென்ம நினைவாக வருகின்றன. முன்ஜென்ம காதலன் போலிருக்கும் அஸ்வினை (தனுஷ்)யும் காதலிக்கிறார் அமைரா. போன பிறவியில் தனக்கும் தன் காதலன் மாரிக்கும் இழைக்கப்பட்ட அநீதியை கண்டுபிடிக்கும் அமைரா அதற்கு காரணமான வில்லனிடமிருந்து தப்பித்தாரா என்பதை சிறப்பாக காட்டியிருக்கின்றார்கள் படக் குழுவினர்.

தனுஸிற்கு வழக்கமான கதாபாத்திரம்தான் என்றாலும் நடிப்புக்கு தீனி போடுகிறான் மாரி. மூன்று விதமான கெட்டப்புக்களிலும் வித்தியாசம் காட்டும் உடல்மொழி அவரின் சிறப்பு. அதே போல மூன்று வித கெட்டப்புகளில் கொஞ்ச நேரமே வந்தாலும் நெஞ்சை நனைக்கிறார் சமுத்ரா. பிரபு போல சேதாரத்தை அடித்தெல்லாம் நொறுக்காமல் தேர்ந்தெடுக்கப்பட்ட பாத்திரத்தில் பின்னி எடுத்திருக்கிறார் கார்த்திக். இவரது பாத்திரத்தை முதலில் வெறுமனே உலவவிட்டு பின் விஸ்வரூபம் எடுக்க விட்டிருப்பது சாமர்த்தியம். ஆஷிஷ் வித்யார்த்திக்கு கமிஷனராக பொருத்தமான வேஷம் அமைத்துள்ளது.

முதல் இருபது நிமிடங்கள் வரும் பர்மா உபகதை படத்தின் பிரதான கதைக்கு தேவைதானா? கார்த்திக் கம்பெனியில் எல்லோரும் மாத்திரை எடுத்துக் கொள்ளும் போது மதுவுக்கு மட்டும் ஏன் பூர்வஜென்ம நினைவு வருகிறது? தனுஷ் மேல் மட்டும் ஆர்வம் காட்டும் அமைரா கூடவே உலாவரும் மற்ற பூர்வ ஜென்ம கேரக்டர்களை ஏன் கண்டுகொள்ளவே இல்லை? அவ்வளவு பெரிய கம்பெனியில் திடீரென லிப்ட் விழுவது ஏன்? ஆஷிஸ் வித்யார்த்தி ஏன் ஆர் வைத்த மோதிர விரலை மறைக்கிறார்? 25 வருடங்கள் எதுவுமே ஆகாதபோது ஏன் கார்த்திக் திடீரென பதறுகிறார்? அவ்வளவு பெரிய ஆள் இந்த இரண்டு பேரின் கதையை முடிப்பதற்கு இவ்வளவு நாள் காத்திருக்க வேண்டுமா? இப்படி படம் பார்த்து விட்டு வெளியே வரும் போது தோன்றும் நிறைய ஏன்களை படம் பார்க்கும் போது யோசிக்கவிடாமல் வேகமாக திரைக்கதை அமைத்த விதத்தில் ஜெயித்திருக்கிறான் இந்த அனேகன் ...

**கதாநாகன் :**
தனுஸ்

**கதாநாயகி :**
அமைரா

**இயக்குனர் :**
கே.வி.ஆனந்த்

**இசை :**
ஹரிஸ் ஜெயராச்




# தாயின் வயிற்றில் உள்ள கருவை பாதிக்கும் உணவுகள்

பெண்கள் கர்ப்பமாக இருக்கும் காலத்தில் பாதுகாப்பாக இருக்க வேண்டியது மிகவும் அவசியம். தாய் பாதுகாப்பாக இருந்தால்தானே வயிற்றில் உள்ள சிசுவும் பாதுகாப்பாக இருக்கும். ஆரோக்கிய மற்ற உணவுகள் தாய் மற்றும் கருவில் இருக்கும் சிசு என இருவருக்குமே நல்லதல்ல. உங்கள் வயிற்றில் உள்ள குழந்தை பாதுகாப்பாக இருக்க வேண்டுமானால் தவிர்க்கவேண்டிய விஷயங்களை பார்க்கலாம்.

காஃபைன் அளவு அதிகமாக உள்ள பானங்களான சோடா, கோலா போன்றவைகளை தவிர்க்கவும். கர்ப்ப காலத்தின்போது அளவுக்கு அதிகமாக காஃபைனை உட்கொள்வது, குறிப்பாக முதல் மூன்று மாதங்களில் கருச்சிதைவுகள் ஏற்படுத்தும். அல்லது பிற உடல் ரீதியான பிரச்சினைகளை ஏற்படுத்தும். தொடர்ச்சியாக காஃபைனை உட்கொள்ளும்போது, குறைவான அளவு மற்றும் எடையுடன் பிறத்தல், குறைப்பிரசவம் போன்ற பல பிரச்சினைகள் ஏற்படும் என ஆய்வுகள் கூறுகின்றன. இதனால் பல வித சிக்கல்கள் உண்டாகும்.

பச்சையான, சமைக்கப்படாத உணவுகளான பச்சை முட்டைகள், இறைச்சிகள் மற்றும் மீன் போன்றவற்றைத் தவிர்த்து விடுவது நல்லது. பச்சையான, சமைக்கப்படாத கடல் உணவுகள் தாய்க்கு சில தொற்றுக்களை ஏற்படுத்தும். பச்சை முட்டைகள் அல்லது இறைச்சிகளை உட்கொண்டாலும் கூட கர்ப்பிணிப் பெண்ணுக்கு குறிப்பிட்ட சில ஒட்டுண்ணி நோய்கள் உண்டாகலாம். ஒருவேளை, கர்ப்பிணிப்பெண்ணுக்கு இவ்வகையான உணவுகளினால் தொற்று அல்லது நோய் ஏற்பட்டால், அது தொப்புள் கொடி வழியாக குழந்தையையும் அடையலாம். இதனால் குறைப்பிரசவம் ஏற்படக்கூடும் அல்லது மனநிலை பாதிக்கப் பட்ட குழந்தையாக பிறக்கக் கூடும்.



கர்ப்ப காலத்தின்போது, நோய் எதிர்ப்பு சக்தி குறைவாக இருக்கும்போது, பச்சை உணவுகள், சூடாக்கப்படாத பால் மற்றும் சீஸ் போன்ற வற்றால் இந்த பிரச்சினை ஏற்படும். பதப்படுத்தப்படாத சீஸ் அல்லது சூடாக்காத பாலில் பாக்டீரியாக்கள் இருக்கலாம். இது தொப்புள் கொடி வழியாக சிசுவை அடைந்து, கருச்சிதைவை தூண்டலாம். பாதுகாப்பாக இருக்கவேண்டுமானால், நீங்கள் வாங்கும் பால் மற்றும் சீஸின் லேபிளை நன்றாகப் படிக்கவும். பால் மற்றும் சீஸ் பதப்படுத்தப்பட்டு கர்ப்பிணிப்பெண்கள் உண்ணும் நிலையில் உள்ளது என்பதை கண்டிப்பாகக் குறிப்பிட வேண்டும் என கட்டாயப் படுத்தப்பட்டுள்ளது. பதப்படுத்தப்பட்ட விவரம் இல்லை என்றால் அதனை உடனே தவிர்த்துவிடவும்.

கர்ப்பிணிகள் தாங்கள் குடிக்கும் தண்ணீர் மற்றும் உணவின் மீது பாதுகாப்பாக இருக்கவேண்டும். தெருவோரம் கிடைக்கும் உணவுகளை உண்ணுவதால் தொற்றுக்கள் ஏற்படலாம். மேலும் கர்ப்ப காலத்தில், பெண்ணின் நோய் எதிர்ப்பு சக்தி மிக குறைவாக இருக்கும். இதனால் மற்ற நேரங்களைக் காட்டிலும் இந் நேரத்தில் எளிதில் தொற்றுக் களுக்கு ஆளாகலாம். எனவே கர்ப்பிணித்தாய்மார் தமது உணவுவிடயத்தில் அதிக கவனம் செலுத்துதல் அவசியம்.



# கடல் கொள்ளையர்கள்

## இது கடலை ஆள்பவர்களின் கதை

### வரலாறு – 03

கி.மு. பதினோறாம், பன்னிரண்டாம் நூற்றாண்டுகளில் எகிப்தை அழிக்க கடற்கொள்ளையர்கள் பெரும் பாடுபட்டனர். மூன்றாவது ராம்சேஸின் ஆட்சிக் காலத்தில்தான் அவர்களது தாக்குதல் கடுமையாக இருந்தது.

நைல்நதி முகத்துவாரத்தில் பல ஆண்டுகள் தொடர்ந்து நடந்த யுத்தத்தின் இறுதியில் ராம்சேஸ், கடற்கொள்ளையர்களைத் தோற்கடித்து எகிப்தைக் காப்பாற்றினார். தோல்வியடைந்த பின்னும் பல ஆண்டுகள் அவர்கள் எகிப்து கடற்கரையோரங்களில் கப்பல்களைத் தாக்கித் தொந்தரவு கொடுத்துவந்தனர்.

இந்த கடல்மக்களின் படையெடுப்புக்குப் பின்னர் மத்தியதரைக்கடல் கொள்ளையரின் கூடாரமாக மாறிப்போனது. அடுத்த ஆயிரம் ஆண்டுகளுக்கு மத்தியதரைக்கடலின் பல தீவுகள் கொள்ளையர்களின் தலைமையிடங்களாகச் செயற்பட்டன. எகிப்து பேரரசின் பலம் குறைந்து போனதும் அவர்களுக்குச் சாதகமாகப் போனது.

கிரேக்க நாகரிகம் தழைத்து கிரேக்க நாடுகளின் பலம் பெருகிய பின்னரும் மத்தியதரைக்கடல் கொள்கையர்களின் அட்டகாசங்கள் அடங்கவில்லை. சொல்லப்போனால் கிரேக்க நாடுகளின் எழுச்சி, கடற்கொள்ளையர்களின் வளர்ச்சிக்குத் தூண்டுகோலாக இருந்தது.

கிரேக்க நாடுகளிடையே ஒற்றுமை கிடையாது. அவர்களுக்குள் பல கோஷ்டிகளும், கூட்டணிகளும் இருந்தன. கிரேக்கர்களின் உட்பகையும், அடிக்கடி நடந்த போர்களும் மேலும் பலர் கொள்ளையர்களாவதை ஊக்குவித்தன. போரிடும் கூட்டணிகள் அடிக்கடி மாறிக்கொண்டே இருந்ததால் கொள்ளையர்களுக்கு வேலை எளிதாகிவிட்டது.

ஒரு நாட்டின் வர்த்தகக் கப்பல்களைத் தாக்கிக் கொள்ளையடித்து விட்டு, அதன் எதிரி நாட்டுத் துறைமுகத்தில் பத்திரமாக அவர்களால் பதுங்கிக்கொள்ள முடிந்தது. கிரேக்க சமுதாயத்தில் கடற்கொள்ளை என்பது அன்றாடம் நடைபெறும் நிகழ்ச்சியாகிப் போனது. சண்டையிடும் நாடுகள், கொள்ளையர்களைக் கூலிப்படைகளாகப் பயன்படுத்திக்கொண்டன.

சில நாடுகளின் கடற்படைத் தளபதிகள் போரில்லாத காலத்தில் பகுதிநேரக் கொள்ளை

யர்களாக(!) பணிபுரிய ஆரம்பித்தனர். கைச்செலவுக்குக் காசில்லையென்றால், அரச அதிகாரிகள்கூட கப்பல்களைக் கடத்தி மாமூல் வசூலிக்கத் தொடங்கினர்.

உலகத்துக்கே ஜனநாயக முறையை பிரபலப்படுத்திய ஏதென்ஸ் நகர அதிகாரிகள்கூட இப்படி பகுதிநேர அடாவடியில் ஈடுபட்டதைப் புகழ்பெற்ற ஏதென்ஸ் பேச்சாளர் டெமஸ்தனிஸ் பதிவுசெய்துள்ளார். இப்படி சட்ட ஒழுங்கை நிலைநாட்ட வேண்டியவர்களே கொள்ளைத் தொழிலை ஊக்குவித்ததால் ஏஜியன் கடல், ஏட்ரியாட்டிக் கடல் பகுதிகள் கொள்ளையர்களின் விளையாட்டுத் திடல்களாக மாறிப்போயின.

இல்லிரீயா, சிலிசீயா போன்ற தீவு தேசங்கள் கொள்ளையடிப்பதையே முழுநேரத் தொழிலாகக் கொண்டிருந்தன. அதேபோல சிசிலி தீவும் கடற்கொள்ளையர்களுடைய கோட்டையாக மாறிப்போனது. இவர்கள் கடலில் கொள்ளையடிப்பதோடு நிறுத்திக்கொள்ளாமல் பன்னாட்டு அரசியலிலும் தங்கள் மூக்கை நுழைக்கத் தொடங்கினர்.

பாரசீகப் பேரரசர் இரண்டாம் செர்க்சீஸ் கிரேக்க நாடுகளின் மீது படையெடுத்தபோது அவரது கப்பற்படையில் கொள்ளையர்கள் இடம்பெற்றிருந்தனர் என்று வரலாற்றுக் குறிப்புகள் கூறுகின்றன. கொள்ளையர்களது அரசியல் தலையீடுகளே அவர்களுக்குப் பின்னால் வினையாகிப் போயின.

கிறிஸ்து பிறப்பதற்கு முன்பே கடல் கொள்ளையர்கள் தோன்றிவிட்டார்கள். இவர்கள் வீழ்த்தாத கப்பலில்லை; எதிர் கொள்ளாத இராணுவம் இல்லை.

ஒற்றுமையில்லாத கிரேக்க நகர - நாடுகளை (City States) எளிதாக ஏய்த்துப் பிழைத்துவந்த அவர்களது வித்தைகள் ரோமக் குடியரசிடம் பலிக்கவில்லை. மத்தியதரைக் கடற்பகுதியில் ரோமக் குடியரசின் ஆதிக்கம் ஓங்கத் தொடங்கியவுடன் கொள்ளையர்கள் பலம் குறையத் தொடங்கியது.

ரோமக் குடியரசாலும் கொள்ளையர் பிரச்சினையை ஒரேயடியாகத் தீர்க்கமுடியவில்லை. ரோம் ஒரு நிலம் சார்ந்த நாடு. ரோமப் படையின் பலமே அதன் காலாட்படை வீரர்கள்தாம். ரோம மக்கள் இயற்கையிலேயே நல்ல மாலுமிகள் இல்லை என்பதால் அவர்களது கப்பற்படையும் அவ்வளவு பலம் வாய்ந்ததாக இல்லை. இதனால் ரோமக் குடியரசு தன் முழுப்பலத்தையும் கொள்ளையர் மேல் பிரயோகம் செய்ய பல ஆண்டுகளாயின.

இல்லிரியக் கொள்ளையர்களைத்தான் ரோமக் குடியரசு முதலில் குறிவைத்தது. கி.மு. 229 ஆம் ஆண்டு தொடங்கிய ரோம் இல்லிரியா போர் கிட்டத்தட்ட அறுபது ஆண்டுகள் நீடித்தது. மூன்று முறை ரோமப் படைகள் இல்லிரியா மீது படையெடுத்தன. கொஞ்சம் கொஞ்சமாக இல்லிரிய தீவுகள் ரோமின் கட்டுப்பாட்டில் வந்தன.

கி.மு. 168இல் நடைபெற்ற இறுதிப் போரில் இல்லிரியா முழுவதும் கைப்பற்றப்பட்டு ரோம குடியரசின் மாகாணமாக மாறியது. இந்தக் காலகட்டத்தில் ரோம் கார்த்தேஜ் பேரரசுடன் போரிட்டுக்கொண்டிருந்ததால் கொள்ளையர் தீவுகளின் மீது தனிக் கவனம் செலுத்தமுடியவில்லை. மற்ற கொள்ளையர்களை உடனே அழிக்க அதனால் முடியவில்லை.

இல்லிரியா வீழ்ந்த பின்னும் சிலிசீயக் கொள்ளையர்கள் சுதந்திரமாகச் செயற்பட்டு வந்தார்கள். அடுத்த நூறாண்டுகளுக்கு ரோமின் கவனம் உள்நாட்டு விவகாரங்களாலும் நிலப்போர்களாலும் திசை திரும்பியதை நன்கு பயன்படுத்திக்கொண்டனர்.

இந்தக் காலகட்டத்தில் மத்தியதரைக்கடல் பகுதியில் வலிமையான கடற்படை கொண்ட நாடுகள் எதுவும் இல்லையென்பதும் அவர்களுக்குச் சாதகமாகப் போனது. சிலிசீயக் கொள்ளையரை எளிதாகக் கட்டுப்படுத்தக்கூடிய கார்த்தேஜ் பேரரசையும் ரோம குடியரசு அழித்துவிட்டதால் கொள்ளையரைத் தட்டிக்கேட்க ஆளில்லாமல் போனது.

(தொடரும்...)

# ஒளி அரசி நடாத்திய 2014ஆம் ஆண்டுக்கான 130000/= ரூபா பரிசுப் போட்டி - முடிவுகள்

அனுசரணை
SAIFI TRADING COMMPANY
IMPORTERS OF PAPER & BOARD
No. 96, New Moor Street,
Colombo - 12.

## 1 ஆம் பரிசு 50,000 (தலா 25,000 ரூபா வீதம்)

01. திருமதி தேவநாயகி மாதவன்.
இல. 95. சென்டர் றோட்,
மட்டக்குளிய
கொழும்பு 15.

02. செல்வி நர்மதா தெய்வேந்திரன்.
மட்டுவில் வடக்கு,
சாவகச்சேரி.

## 2 ஆம் பரிசு 30,000 ரூபா (தலா 15,000 ரூபா வீதம்)

01. காந்திமதி செல்வநாதன்.
ஸ்ரீ இராமகிருஷ்ணன் பாடசாலை வீதி,
கோண்டாவில்.

02. திருமதி. முருகையா.
அனுத்மாவத்தை
கொழும்பு 15.

## 3 ஆம் பரிசு 20,000 ரூபா (தலா 10,000 ரூபா வீதம்)

01. ஆ. ஸ்ரீதேவி
இல. 181. ஜெயஸ்ரீபுரம்
பத்தனை.

02. தாஷிர் தஸ்னி இரோஸ.
541, ஆஸ்பத்திரி வீதி,
சாய்ந்தமருது 07.

## ஆறுதல் பரிசுகள் ரூபா 2,000 வீதம்.

01. ஜெ. வெரோணிகா
கஞவான்ஞ்சிக்குடி.

02. சுவர்ணலதா கெங்காதரன்.
கரவட்டி மத்தி, கரவட்டி.

03. நவரட்ணம் குபேரமூர்த்தி.
இணுவில்.

04. கந்தையா ஜெயதர்சினி,
சங்கானை.

05. முகமட் முசாம்மில் முஸாமிதா
எல்லாமுல்ல, பஸியால.

06. ஆர். அருசான்
சாவகச்சேரி.

07. பௌசால் மசின்னா றாசிட்
அக்குறனா.

08. திருமதி சரஸ்வதி வேலாயுதம்
அம்பன், குடத்தனை

09. சின்னையா சந்திரசேகரம்
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்

10. திருமதி குயின்றோசாரி கிறிஸ்ரியன்
ஊர்கவற்றுறை

11. சார் ப சாந்தி
ஹெம்மதாகம

12. திரு றீ. திருநாவுக்கரசு
காரைதீவு 05

13. குமாமட் சஹறப்தீஸ்
பாத்திமா நஸ்வி
திஹாரிய

14. திருமதி வற்சலா துரைசிங்கம்
தெல்லிப்பழை

15. முஹம்மத் அபூபக்கர்
பெனசுல் முனிரா
கஞபோவில

**பரிசு வென்றவர்களுக்கு ஒளிஅரசியின் வாழ்த்துக்களை தெரிவிப்பதுடன் மேலதிக உறுதிப்படுத்தல்களுக்கு 0718628376 என்ற இலக்கத்துடன் மட்டும் தொடர்பு கொள்ளவும்.**

(புள்ளி அடிப்படையில் சம உச்ச புள்ளிகளை பலர் பெற்றமையால் 1ம், 2ம், 3ம், பரிசில்கள் தலா இருவருக்கு பிரித்து வழங்கப் படுகிறது)

# விவாத மேடை 02

ஒளி அரசியின் வாசகர்களுக்கிடையிலான தர்க்க ரீதியான சிந்தனைத் திறனை உயர்த்தும் முகமாகவும் சில சர்ச்சைக்குரிய விடயப்பரப்புக்களை விவாதத்துக்கு உட்படுத்தும் நோக்குடனும் இவ் விவாத மேடை போட்டித் தொடர் ஆரம்பிக்கப்படுகின்றது. வாசகர்களாகிய உங்களது கருத்துக்களை சுதந்திரமாக முன்வைக்கக்கூடிய ஓர் கள மேடையே ஒளி அரசி உங்களுக்கு அமைத்து தந்துள்ளாள். விவாதிப்போம்; தெளிவுபெறுவோம். [போட்டித் தொடர் 01 இற்கான கட்டுரைகள் எதிர்வரும் மாதம் [ஏப்ரல்] பிரசுரிக்கப்படும்.]




## போட்டிக்கான நிபந்தனைகள்

01) ஒவ்வொரு விவாத மேடையிலும் குறித்த ஒரு தலைப்பு தரப்படும். குறித்த தலைப்பை ஆதரித்தோ அல்லது எதிர்த்தோ உங்களது விவாதங்களை முன்வைக்கலாம்.

02) இவ்வாறு அனுப்பப்படும் உங்களது வாதம் 200 சொற்களுக்கு மேற்படாதவாறும் அழகு தமிழிலும் கட்டமைக்கப்படுதல் அவசியம்.

03) இவ்வாறு அனுப்பப்படும் ஆக்கங்களில் மிகச்சிறந்த இரண்டு ஆக்கங்கள் பரிசுக்காக தெரிவு செய்யப்படுவதுடன் தலா ரூ. 750/= பரிசாக வழங்கப்படும்.

04) விவாதங்கள் அனுப்பப்படவேண்டிய இறுதித் திகதிக்கு பின்னர் அனுப்பப்படும் ஆக்கங்கள் போட்டிக்காக தெரிவு செய்யப்படமாட்டாது.

05) உங்கள் விவாதங்களை அனுப்பும்போது ஒளி அரசியுடன் இணைக்கப்பட்டுள்ள போட்டிக்குரிய கூப்பன்களை இணைத்து **இல. 85, ஜயந்த மல்லிமாராச்சி மாவத்தை, கொழும்பு - 14** எனும் முகவரிக்கு அனுப்புதல் வேண்டும்.

### விவாத மேடை 02 இற்கான தலைப்பு

**''ஒப்பீட்டளவின் பெண்களுக்கெதிரான வன்முறைகள் குறைவடைகின்றன? அதிகரித்து செல்கின்றன?''**

**உங்கள் விவாதங்களை அனுப்பவேண்டிய இறுதித் திகதி 25.03.2015**

### விவாத மேடை - 02

முழுப்பெயர் : ......................................

......................................

முகவரி : ......................................

......................................


......................................

தொலைபேசி இல.: ......................................

ஒப்பம் : ......................................

# உங்களுக்குத் தெரியுமா?

✻ உலகில் பெரியதும் உயரமானதுமான அணைக்கட்டின் பெயர் போல்டர் அணை. இது அமெரிக்காவில் உள்ளது.




✻ ஆபிரிக்காவுக்கு அருகே உள்ள தீவான ஸான்ஸிபாருக்கும், பிரிட்டனுக்கும் நடந்த போர்தான் மிகமிகக் குறைந்த நேரத்தில் நடந்து முடிந்த போர். 1896ஆம் வருடம் பிரிட்டன் இராணுவத்திடம் வெறும் 46 நிமிடங்கள் மட்டும் போரிட்டு தோற்றுப்போய் சரணடைந்தது 'ஸான்ஸிபார்.




✻ ரஷ்யாவில் மாஸ்கோவில் உள்ள டிராஸ் மற்றும் சைபீரியா இடையே அமைக்கப்பட்டுள்ள ரயில் பாதை உலகில் மிக நீளமான ரயில் பாதையாகும். 9,200 கி.மீ. நீளமுள்ள இந்த ரயில் பாதை தலைநகர் மாஸ்கோவையும் ஐரோப்பாவையும் ஒட்டியுள்ள ரஷ்யாவின் பிறபகுதிகளையும் இணைக்கிறதாம்.

✻ சூரியன் குளியல் மூலம் நோய்கள் குணப்படுத்தும் சிகிச்சைக்கு ஹீலியோதெரபி என்று பெயர்.

✻ கோமாளி (Clown) என்ற ஒருவகை மீன் தனது பாலினத்தை மாற்றும் ஆற்றல்பெற்றது. இனச் சேர்க்கையின் போது பெண் மீன் இறந்துவிட்டால் உயிருடன் உள்ள ஆண் மீன் பெண் மீனாக மாறி ஒரு ஆண் மீனுடன் இணை சேர்ந்து இனத்தை உருவாக்குகின்றது.



✻ வானவில் எல்லாம் சில நொடிகள் மட்டுமே நம் கண்ணுக்குத் தெரியும். ஆனால், 14.03.1994 அன்று பிரிட்டன் யார்க்ஷயர் என்ற பகுதியில் உள்ள தேவசபைக்கருகில் காலை 9 மணிக்கு தோன்றிய வானவில் சுமார் 6 மணி நேரம் நீடித்ததாம்.



✻ பொதுவாக அனைத்து உயிரிகளுக்கும் ஒரு மூளைதான் காணப்படுகின்றது. ஆனால், குரங்குகளுக்கு 2 மூளைகள் காணப் படுகின்றனவாம். ஒன்று உடலையும், மற்றொன்று வாலையும் இயக்கப் பயன்படுத்துகிறதாம்.

✻ பிறந்த குழந்தைக்கு முதன் முதலில் போடப்படும் தடுப் பூசியின் பெயர் B.C.G. இது குழந்தை பிறந்து ஓரிரு நாட்களிலேயே போடப்பட்டுவிடுகின்றது.

# ரெபெக்கா வெஸ்ட்

பிரிட்டன் எழுத்தாளர், பத்திரிகையாளர், பெண் உரிமை ஆர்வலர் ரெபெக்கா வெஸ்ட் எனப்படும் டேம் சிசிலி இசபெல் ஃபேர்ஃபீல்டு என்பவர் பெண்களில் உரிமைக்காக போராடிய முக்கியமானவர்களில் ஒருவர்.

லண்டனில் பிறந்த இவரின் அப்பா துணிச்சலான பத்திரிகையாளர். வீட்டுக்கு வரும் ரஷ்யப் புரட்சியாளர்கள், அரசியல் ஆர்வலர்கள் அரசியல் பற்றி காரசாரமாக விவாதிப்பார்கள். இது பின்னாளில் இவரது படைப்புகளுக்கு உதவின. அப்பா இறந்தபோது, இவருக்கு 14 வயது. அதன் பிறகு, குடும்பம் ஸ்காட்லாந்தில் குடியேறியது. பணவசதி இல்லாததால் படிப்பைத் தொடர முடியவில்லை. ஒரு நடிகையாக புகழ்பெற வேண்டும் என்ற ஆசையில் லண்டனில் நடிப்பு பயிற்சி மேற்கொண்டார். அப்போது மாற்றிக்கொண்ட பெயர்தான் 'ரெபெக்கா வெஸ்ட்'. பிறகு எழுதுவதில் ஆர்வம் ஏற்பட்டது. 'ஃப்ரீ வுமன்' பெண்கள் வாரப் பத்திரிகையில் சேர்ந்தார். புகழ்பெற்ற எழுத்தாளர் எச்.ஜி.வெல்ஸின் 'மேரேஜ்' நாவலை விமர்சித்து 1912 இல் இந்தப் பத்திரிகையில் காரசாரமாக எழுதினார். அதைப் படித்த வெல்ஸ் இவரது எழுத்தால் கவரப்பட்டார். இருவருக்கும் காதல் மலர்ந்தது. வெல்ஸ் மறையும் வரை இந்த உறவு நீடித்தது.

பெண் உரிமை, சமூக நலனுக்கு குரல் கொடுப்பதிலும் நறுக்குத் தெறித்ததுபோல கூர்மையான விமர்சனம் எழுதுவதிலும் புகழ்பெற்று விளங்கினார் ரெபெக்கா. தி நியூ ரிபப்ளிக், நியூயார்க் ஹெரால்டு டிரிப்யூன், நியூயார்க் அமெரிக்கன் உட்பட ஏராளமான நாளேடுகள், இதழ்களில் எண்ணற்ற கட்டுரைகள், விமர்சனங்கள் எழுதியுள்ளார். இவரது எழுத்தாற்றலை ஜார்ஜ் பெர்னார்ட் ஷா பாராட்டியுள்ளார். பத்திரிகைத் துறையில் படைத்த சாதனைக்காக இவருக்கு 'வுமன்ஸ் பிரஸ் கிளப் அவார்டு' விருதை 1948 இல் அமெரிக்க அதிபர் ட்ரூமேன் வழங்கினார். 'உலகின் தலைசிறந்த நிருபர்' என்று விழாவில் அதிபர் இவருக்கு புகழாரம் சூட்டினார். இவரது எழுத்துகள் புகழோடு, பணத்தையும் குவித்தது.

இரண்டாம் உலகப்போரின்போது, தனது பிரம்மாண்ட வீட்டில் யூகோஸ்லேவிய அகதிகள் பலரைத் தங்கவைத்திருந்தார். ஒவ்வொரு முறை எழுதத் தொடங்கும் போதும் எப்படி ஆரம்பிப்பது என்று யோசிக்க பல மணி நேரம் செலவிடுவாராம். ஒரு நாவலுக்கான அத்தியாயம் ஒன்றை சளைக்காமல் 26 முறை மாற்றி மாற்றி எழுதிப்பார்த்திருக்கிறார். பிளாக் லாம்ப், மீனிங் ஆஃப் டிரேசன், தி ரிட்டர்ன் ஆஃப் தி சோல்ஜர் என வரலாறு, கலாசாரம், அரசியல், போர் குறித்து பல நாவல்களை எழுதியுள்ளார். அமெரிக்க கலை, அறிவியல் அகாடமியின் வெளிநாட்டுக்கான கௌரவ உறுப்பினராக நியமிக்கப்பட்டார்.

இரண்டாம் உலகப் போரின்போதும் அதற்கு முன்பும் உலகம் முழுவதும் சுற்றுப் பயணம் செய்து அரசியல் மற்றும் பயண நாவல்கள் எழுதுவதற்கான விஷயங்களைத் திரட்டினார். இறுதி மூச்சு வரை எழுதிக்கொண்டிருந்த ரெபெக்கா வெஸ்ட் 91 ஆவது வயதில் மறைந்தார். இவரைப் பற்றி 2004 இல் இரண்டு நாடகங்கள் தயாரிக்கப் பட்டுள்ளன. ●



**யதுர்சன், கொட்டாஞ்சேனை.**

**கே :** உலகக்கிண்ணக் கிரிக்கெட் வெற்றி கிண்ணத்தை இலங்கை கைப்பற்றுமா?

**ப :** எனக்கென்னவோ இம்முறை உலகக் கிண்ணப் போட்டியின் இறுதியாட்டத்திற்கே தென்னாசிய அணிகள் எதுவும் செல்லாது போல் தோன்றுகிறது. இலங்கை, இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ் என எந்த அணியுமே தேறும்போல் தெரியவில்லை. போட்டி நடத்தும் அவுஸ்திரேலியாவே கிண்ணத்தை கைப்பற்றும் வாய்ப்புக்கள் அதிகம் என்கிறார்கள். பொறுத்திருந்து பார்ப்போம்.

**கவிதா, நீராவியடி.**

**கே :** விலைவாசி எல்லாம் குறைந்துள்ளதே இப்போது உங்களுக்கு மகிழ்ச்சிதானே அம்மு?

**ப :** அதை ஏன் கேட்கிறீர்கள் கவிதா, சில்லறைத்தட்டுப்பாட்டால் விலை குறைப்பு எதுவுமே மக்களை சென்றடையவில்லை என்பதுதான் என் அபிப்பிராயம். பஸ்கள் ஏறி நடத்துனரிடம் பத்து ரூபா தாளை நீட்டினால் முன்னர் ஒரு ரூபா மிச்சக்காசு வருவதில்லை. இப்போது இரண்டு ரூபா மிச்சக் காசு வருவது இல்லை.

**பிரசன்னா, ஏறாவூர்.**

**கே :** செவ்வாய்க்கிரகத்திற்கு செல்வதற்கு விண்ணப்பிக்கின்றார்களாமே... விண்ணப்பிக்கவில்லையே?

**ப :** ஏதோ கினார் வேலைக்கு விண்ணப்பிக்கவில்லையா? எனக் கேட்பதுபோல் கேட்கிறீர்கள்! இக்கிரகத்திலையே எம்மால் ஒழுங்காக வாழ முடியவில்லை. இதுல போய் செவ்வாய்க் கிரகத்திற்கு வேற. அதுசரி அவர்கள் சொல்கிறார்கள் திரும்பிவர முடியாத பயணம் என்று அதுக்கு போய் பல லட்சம் பேர் விண்ணப்பிக்கிறார்கள். என்னடா உலகமிது!

**பிரபு, யாழ்ப்பாணம்.**

**கே :** பிரபல நடிகைகளின் நிர்வாணப்படங்கள் வெளிவந்துகொண்டு இருக்கின்றனவெ இது சரியா அம்மு? அவர்களும் சக பெண்கள் தானே.

**ப :** சரி என்று யார் சொன்னா? தப்பு தான். சில வக்கிர எண்ணம் கொண்டவர்களின் வேலை இது. ஆனால், எனது நண்பர் ஒருவன் சொல்கின்றார் தங்களது அரை நிர்வாணத்தை காட்டி காசு சம்பாதிப்பவர்கள் தமது முழு நிர்வாணம்




காசில்லாமல் வெளிவரும்போது கொதித்தெழுகிறார்கள்! என்று அவர் சொல்வதிலும் நியாயம் இருக்கும் போல.

**சேகர், வட்டக்கட்சி.**

**கே :** முதுமையில் அனுபவிக்கக்கூடாத மிகவும் கொடிமையானது எது அம்மு?

**ப :** தாங்கள் யாராலும் கவனிக்கப்படாமல் போகின்றோமே, பெத்த பிள்ளைகளும் அது களின்ற பிள்ளைகளும் கூட எங்களை உதாசீனம் செய்கிறார்களே என ஒருவருக்கு ஏற்படக்கூடிய எண்ணம் முதுமையில் மிகவும் கொடியதாக இருக்கலாம் என நினைக்கிறேன்.

**சுபாசினி, மல்லாகம்.**

**கே :** புலம் பெயர்ந்தவர்கள், இடம் பெயர்ந்தவர்கள் இரண்டு சொல்லும் ஒரே அர்த்தமுடையதா அல்லது வேறு அர்த்தமுடையதா?

**ப :** போர்காரணமாகவோ அல்லது வேறு ஏதேனும் ஒரு அனர்த்தம் காரணமாக அதே நாட்டின் எல்லைக்குள் வேறு பகுதிகளுக்கு செல்பவர்களே இடம்பெயர்ந்தவர்கள் எனலாம். இதுவே ஒரு நாட்டில் இருந்து இன்னொரு நாட்டிற்கு குடிபெயர்ந்தவர்கள் புலம் பெயர்ந்தவர்கள் எனலாம். அப்பாட தப்பச்சேனா!!

**பருந்தா, வட்டவளை.**

**கே:** அம்மு, உங்களைகவர்ந்த எழுத்தாளர்கள் யார்?

**ப :** இந்த கேள்விக்கு என்னிடம் நீண்டதொரு பட்டியல் காணப்படுகிறது. அது காலத்துக்கு காலம் வேறுபடுபவையாகவும் காணப்படும். நேற்று பிடித்த எழுத்தாளர் இன்று பிடிக்காமல் போகலாம். இன்று பிடித்த எழுத்தாளர் நாளை பிடிக்காமல் போகலாம். எனது அறிவும் அனுபவமும் விரிவடைய விரிவடைய எனக்கு பிடித்த எழுத்தாளர் மாறியவண்ணம் இருப்பர். இன்றைய திகதியில் எனக்கு பிடித்த எழுத்தாளராக ஜெயமோகனைக் குறிப்பிடலாம்.

# வாசகர் உள்ளங்கள்

**இ. சுரேஷ், நல்லூர்.**

அன்புடன் 'ஒளி அரசி'யை வாழ்த்தி வர வேற்பதில் மாதந்தோறும் மனப்பூர்வமாகக் காத்திருக்கும் இந்த மண்ணின் கவிஞன் என்ற வகையில் எனக்கும் மட்டற்ற மகிழ்ச்சி.

பூவாய்ப் பூத்து மாலையாகும் முன்பே சருகாகும் பூக்களின் நிலை போல்தான் இன்றைய இலக்கிய சஞ்சிகைகளின் ஆயுள் என்ற நிலை மாற்றி வந்த வரத்தில் காணாமற்போகாமல் காலைச் சூரியன் போல் கடமை, கண்ணியம், ஒழுக்கம் தவறாமல் மாதம் ஒருமுறை வந்தாலும் மனதுக்கு இதமாக - சுவையாக - கனதியாக வரும் உன் வரவு இலக்கியரசிக உள்ளம் கொண்ட எங்களுக்கெல்லாம் நல்வரவே!




பல்சுவை, பல ரகம், தரம் என்றாலும் கவிதைகளுக்காக தரும் வயல்நிலம் போதாமல் உள்ளது. சிறுகதை, கட்டுரை என்பவற்றுக்கு இரு பக்கங்கள் ஒதுக்கலாம் என்றால் கவிதை என்ன தரம் குறைந்ததா?

எல்லாம் அவன் செயல். உங்கள் முடிவு. 'ஒளி அரசி' எம் விழிகளுக்கெல்லாம் அரசியாய் வந்து விருந்தளிக்க வேண்டும் என்ற பேரவாவுடன் கரம் கூப்பி முடிக்கின்றேன் இம்மடலை.

**எஸ். எஸ். சாந்தி.**

ஒளிஅரசிக்கு வாழ்த்துக்களுடன்

ஒளிஅரசியின் ஆரம்பகால வாசகி நான். எப்போதும் போல் பெப்ரவரி ஒளிஅரசி நன்றாகத்தான் உள்ளது. எனினும், ஒரு குறை! இதுவரைகாலமும் ஒளிஅரசியின் முகப்பை ஒரு பெண்தான் அழங்கரித்தார். ஆனால், இம்முறை பிரசன்னாவுடன் சேர்ந்த சினேக ஏன் முகப்பை அலங்கரித்தார் என்று தெரியவில்லை. இது பெண்ணாதிக்கம் என்று நினைக்க வேண்டும். ஆனாலும் அது ஒரு குறையாகவே தெரிகின்றது. மனசு அதனை ஏற்றுக்கொள்ள மாட்டேன் என்று அடம் பிடிக்கின்றது. தயவு செய்து இனி இதுமாதிரி செய்ய வேண்டாம். மனசுக்கு கஷ்டமாக இருக்கின்றது.

**தயானி,**
**மாத்தளை.**

இல்லத்தரசிகளின் இனிய இடத்தைப்பிடித்திருக்கும் எங்கள் ஒளிஅரசியின் அனைத்து அம்சங்களும் சிறப்பாக உள்ளன. ஆனால் வழமைக்கு மாறாக பெப்ரவரிமாத இதழில் முன் அட்டையில் ஒரு சினிமா ஜோடியின் படத்தைப் பிரசுரித்திருக்கிறீர்கள். நடிகை சினேகா எமது அபிமானம் கவர்ந்தவர்தான். ஆனாலும் பெண்களுக்காவே வெளிவரும் ஒளிஅரசியின் முகப்பில் இனி ஆண்களின் படங்களை இடம்பெறச் செய்யவேண்டாம் என மிகவும் வினயமாக வேண்டிக் கொள்கின்றேன்.

# அரிசிமா உப்புமா




**தேவையான பொருட்கள்:-**

அரிசிமாவு : இரண்டு கப்

கெட்டி மோர் அல்லது தயிர் : ஒரு டம்ளர்

நல்லெண்ணெய் : ஒரு கரண்டி / ஒன்றரைக் கரண்டி

கடுகு : ஒரு தேக்கரண்டி

பெருங்காயம் : அரை சுண்டைக்காய் அளவு

மோர் மிளகாய் : மூன்று அல்லது நான்கு

உப்பு : தேவையான அளவு

கறிவேப்பிலை : ஒரு ஈர்க்கு

மோர் மிளகாய் ஒவ்வொன்றையும் நான்கைந்து துண்டுகளாகக் கிள்ளி வைத்துக்கொள்ளவும்.

அரிசிமாவை, மோரில் அல்லது தயிரில் கரைத்து, தேவையான அளவு உப்பைச் சேர்த்துக் கலக்கி, ஒரு பாத்திரத்தில் பத்திரமாக வைத்துக்கொள்ளுங்கள். கலவை ரொம்ப கெட்டியாகவும் இருக்கக்கூடாது, ரொம்ப நெகிழவும் இருக்கக்கூடாது. இட்லி மாவு பதத்தில் இருக்கலாம்.

ஒரு இரும்புச் சட்டி அடுப்பின் மீது வைக்கவும்.

அடுப்பைப்பற்ற வைக்கவும்.

எண்ணெயை இரும்புச்சட்டியில் ஊற்றி, எண்ணெய் காய்ந்ததும், அதில் கடுகு, மோர் மிளகாய்க் கிள்ளல்கள், பெருங்காயம் ஆகியவைகளைப் போடவும்.

கடுகு வெடித்ததும் கறிவேப்பிலை இலைகளை ஈர்க்கிலிருந்து உருவி, கிள்ளிப் போடவும். இப்போ கொண்டு வாங்க அந்த தயிர் மாவுக் கலவையை! காய்ந்த, கடுகு வெடித்த, எண்ணெய் மீது அந்தக் கலவையை ஊற்றுங்கள்.

மோர் மிளகாய், கடுகு, பெருங்காயம் எல்லாம் மாவுடன் சேர்ந்து இனிய மணம் வரும் அதை நாசி மூலம் வாங்கி, நுரையீரல் அறைகளில் சற்றுத் தேக்கிவைத்து அனுபவியுங்கள்.



தேவைப்பட்டால் மேலும் தயிர் சேர்க்கலாம். மாவு நன்றாக வேகும் வரைக் கிளறவும்.

சிறிது நேரம் கழித்து, ஒரு தோசைத் திருப்பியை வைத்துக் கொண்டு, மாவுக் கலவையை வெட்டி வெட்டி ஓசைப்படுத்தவும். இப்படி வெட்டி வெட்டி விடும்பொழுது, அரிசிமாவு, சிறு சிறு உருண்டைகளாக ஒரு பௌதிக மாற்றம் அடையும். சில உருண்டைகள் எண்ணெய் குடித்து, மொறு மொறு வென ஆகிவிடும்.

உப்புமாவை அடுப்பிலிருந்து இறக்கும்பொழுது ஒவ்வொரு மாவு உருண்டையும் இரண்டு மில்லி மீற்றர் விட்டம் முதல் ஒன்று அல்லது ஒன்றரை சென்றி மீற்றர் விட்டம் வரை இருக்கும்.

இதற்கு, தொட்டுக்கொள்ள எதுவும் தேவை இல்லை. இதனோடு இருக்கின்ற மோர் மிளகாய்த் துண்டுகள் போதும். அவற்றோடு சேர்ந்து இந்த அரிசி மாவு உப்புமா உருண்டைகளை சம்ஹாரம் செய்யும்பொழுது, சொர்க்க லோக சுகம் கிடைக்கும்.

செய்யுங்க, சாப்பிடுங்க!

# ஈழத்து இசைக் குயில்



அண்மை நாட்களில் நிலத்திலும், புலத்திலும் உள்ள ஈழத்தமிழர்களால் அதிகமாக உச்சரிக்கப்படும் பெயர் ஜெசிக்கா என்பதாக இருக்கும். கனடாவில் வசிக்கும் ஈழத் தமிழ் மாணவியான இவர், விஜய் தொலைக் காட்சியின் "சூப்பர் சிங்கர் ஜூனியர்ஸ் 4" போட்டியில் இரண்டாம் இடத்தைப் பிடித்துள்ளார். இதற்காக தனக்கு பரிசாகக் கிடைத்த ஒரு கிலோ தங்கத்தின் மூலம் கிடைக்கும் ரூ. 30 லட்சத்தை இலங்கையில் வாழும் ஆதரவற்ற தமிழ்க் குழந்தைகளின் வளர்ச்சிக்கு வழங்கியுள்ளார். இவர் நாளிதழ் ஒன்றுக்கு வழங்கிய செவ்வியின் சுவாரிசியமான அம்சங்களில் சில...

**இசையின் மீது உங்களுக்கு ஆர்வம் வரக் காரணம் என்ன?**

இலங்கையின் யாழ்ப்பாணத்தில் உள்ள பருத்தித்துறைதான் எங்களின் சொந்த ஊர். சிறுவயது முதல் நான் கனடாவில்தான் இருக்கிறேன். அங்கே டொரண்டோவில்தான் படிக்கிறேன். ஒன்றிரண்டு முறை எங்கள் சொந்த ஊருக்கு போய் வந்திருக்கிறேன். என் அப்பா இசைக் கச்சேரிகளில் கலந்து கொண்டு பாடுவார். அந்த ஆர்வம்தான் எனக்குள்ளும் இசையை விதைத்தது. பள்ளிக்கு போகும்போதே பாட்டு வகுப்புக்கும் போகவேண்டும் என்று விரும்பினேன். சூப்பர் சிங்கர் நிகழ்ச்சியில் கலந்துகொள்ள வேண்டும் என்பதற்காகவே கடந்த ஓர் ஆண்டு முழுவதும் சென்னையில் இருந்துள்ளேன்.

**"சூப்பர் சிங்கர்ஸ்" இறுதிப்போட்டியில் 'விடைகொடு எங்கள் நாடே' பாடலை நீங்களே தேர்வுசெய்து பாடினீர்களா?**

இலங்கைத் தமிழ் மக்களின் வாழ்க்கையை பிரதிபலிக்கும் 'கன்னத்தில் முத்தமிட்டால்' படத்தில் இடம்பெற்ற பாடல் அது என்பது இதை நான் தேர்வுசெய்ததற்கு முதல் காரணம். இரண்டாவது காரணம், நான் இறுதிப் போட்டியில் இந்தப் பாடலை பாடவேண்டும் என்று எங்கள் நாட்டு மக்கள் பலரும் குறுஞ்செய்தி மூலமாகக் கேட்டனர். இப்படி எங்களது உணர்வுகள் மொத்தமும் ஒன்று சேர்ந்ததால் இந்தப் பாடலைத் தேர்வுசெய்தேன்.

**முதல் பரிசு கிடைக்காததால் வருத்தப் படவில்லையா?**

நிச்சயமாக இல்லை. கனடாவில் இருந்து வந்து இறுதிப்போட்டி வரைக்கும் சென்றதையே பெரிய வெற்றியாக நினைக்கிறேன். அப்பா, அம்மா இருவருமே ஒரு கட்டத்தில் ஊருக்கு போகலாம் என்று முடிவெடுத்தார்கள். ஆனால் என் ஆசைக்காக மட்டுமே அந்த எண்ணத்தை மாற்றிக்கொண்டனர். இந்த வெற்றி அவர்களுக்கும் மகிழ்ச்சியளித்துள்ளது.

**இந்த வெற்றியால் திரைப்பட பின்னணிப் பாடகியாகும் ஆசை பிறந்திருக்குமே?**

கண்டிப்பாக. அதே நேரத்தில் படிப்பையும் விட்டுக்கொடுக்கமாட்டேன். இரண்டையும் சரி நிகராக்கி பயணிக்க வேண்டும் என்பது என் ஆசை. இந்தப் போட்டியில் கலந்துகொண்டதால் எஸ்.பி.பி அங்கிள், ஜானகி அம்மா, சித்ராம்மா, மனோ அங்கிள் எனப் பல பாடகர்களோடு நெருங்கிப் பழகும் வாய்ப்புக் கிடைத்தது. என்னுடன் போட்டியில் கலந்துகொண்ட தோழிகளை விட்டுப் பிரியப்போகிறேன் என்பதுதான் வருத்தமாக உள்ளது. இங்கே பாட்டுப் பாட திரும்பிவருவதன் மூலம்தான் இதையெல்லாம் மீண்டும் பெற முடியும். அதற்காகவே நிறைய பாடல்களைப் பாடவேண்டும் என விரும்புகிறேன் என்றார். ●

முக்கிய குறிப்பு : இதுவரை காலமும் பல்திறன் பரிசுப் போட்டியை நடத்தி வந்த 'ஒளி அரசி' தரம் 5 மாணவர்களின் தவறுகளை பகுத்து அறிந்து அதற்கிணங்க கொழும்பில் வெளிவரும் பிரபல சிங்கள வினாத்தாள்களை மொழிபெயர்த்து தமிழ் மாணவர் சமுகத்திற்கு வழங்க தீர்மானித்துள்ளது என்பதை மகிழ்வுடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

-ஆசிரியர்

# தரம் 5 மாணவர்களை புலமைப் பரிசில் பரிட்சைக்குத் தயார்படுத்தும் சிங்கள மொழி பெயர்ப்பு வினாத்தாள்

வினாத்தாள் 11 — 2015 — நேரம் : 1மணித்தியாலம் 15 நிமிடம்

- **எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**

* **பின்வரும் பந்தியினை வாசித்து 01 தொடக்கம் 05 வரையான வினாக்களுக்கு விடை தருக.**

நானும் எனது மாமாவும் காலை ஏழு மணிக்கெல்லாம் புகையிர நிலையத்தினை அடைந்து விட்டோம். புகையிரத வண்டியும் வந்தது. நானும் மாமாவும் அளவற்ற மகிழ்ச்சியுடன் புகையிரத வண்டியில் ஏறி யன்னல் ஓரமான இருக்கையில் அமர்ந்து கொண்டோம். பின்னர் வண்டி கடகட கடகட என சத்தத்துடன் புறப்பட்டது. நான் எனது சின்னஞ்சிறிய கழுத்தை திசைத் திருப்பி இயற்கையை இரசிக்க ஆரம்பித்தேன். பச்சை பசேலென பூத்துக்குலுங்கும் பசுமையான மரங்களும், இலைகளின் மீது அங்கும் இங்கும் ஓடி விளையாடும் பனித்துளிகளையும் பார்த்து இரசித்த போது என்னை நானே மறந்து விட்டேன். இந்த இடைவெளியில் புகையிரத வண்டியோ பண்டாரவளை, தியதலாவை, ஹப்புதளை போன்ற இடங்களைக் கடந்து சென்றது. மாமாவும் உறக்கத்திலிருந்து எழுந்து என்னை அழைத்து இறங்குவோம் என கூறினார்.

01. இப்பந்திக்குப் பொருத்தமான தலைப்பொன்றை எழுதுக?

..................................................................................................

02. இப்புகையிரத வண்டி கடந்து சென்ற இடங்கள் இரண்டின் பெயர்களை எழுதுக?

..................................................................................................

03. ஒத்தக் கருத்துச் சொற்களைத் தருக?

1) இருக்கை - ............................ 2) உறக்கம் - ............................

04. இப்பந்தியில் காணப்படும் பெயரடைமொழிச் சொல்லொன்றைத் தருக?

..................................................................................................

05. இங்கு காணப்படும் இரட்டை கிளவி, இணைமொழி என்பனவற்றை முறையே தருக?

..................................................................................................

06. பின்வரும் பழமொழிகளைப் பூரணப்படுத்துக.

1) அக்கரை மாட்டுக்கு இக்கரை ..............................................................

2) காற்றுள்ள போதே ..............................................................

07. பின்வரும் சுருக்கக் குறியீடுகளை விரிவான வடிவில் தருக.

1) இ. பெ. கூ ..............................................................................

2) ஐ. நா. ச ..............................................................................

08. பின்வரும் பேச்சு வழக்குச் சொற்களை எழுத்து வடிவில் தருக?


1) வெத்தலை - ............................ 3) காச்சல் - ............................

09. பின்வரும் வாக்கியங்களைப் பூரணப்படுத்துவதற்குப் பொருத்தமான சொல்லை கண்டு அதன் கீழ் கோடிடுக.

1) நான் நேற்றுப் பாடசாலைக்கு ................................. (போவேன், போனேன்)

2) நாளை காலையிலும் ஆதவன் ................................. (உதிக்கும், உதித்தது)

10. பின்வரும் உருக்களுக்கான ஆங்கில பெயரை ஆங்கிலத்தில் எழுதுக.

1)  2) 

.......................................... ..........................................

11. கீழ்க்காணும் சிங்களச் சொற்களுகான தமிழ் கருத்தினை தருக?

1) பூசா - ................................. 2) மேசய - .........................................

12. "நான் பார்த்து இரசித்த விளையாட்டு நிகழ்ச்சி..." என்ற தலைப்பில் 04 வாக்கியம் அமைக்குக. ஒவ்வொரு வாக்கியமும் எழுவாய், பயனிலை தொடர்புடையதாக நான்கு சொற்களுக்குக் குறையாமல் இருத்தல் வேண்டும்.

1) ..........................................................................................................

2) ..........................................................................................................

3) ..........................................................................................................

4) ..........................................................................................................

* **பின்வரும் வினாக்களுக்கு சரியான விடையினை புள்ளிக் கோட்டில் எழுதுக.**

13. | 6 4 0 3 | இவ்விலக்கங்களைக் கொண்டு அமைக்கக்கூடிய மிகப்பெரிய எண்ணுக்கும், மிக சிறிய எண்ணுக்குமிடையிலான வித்தியாசம் யாது?


..........................................

14. பின்வரும் எண்களை உரோம எண் வடிவில் தருக?

1) 25 - .................. 2) 33 - .................. 3) 40 - ..................

15. கவிதா தன்னிடமிருந்த 400ரூபாய் பணத்தில் அரைவாசிப் பங்கை தனது தங்கையிடம் கொடுத்துவிட்டு, மிகுதி பணத்தில் 5/8 பங்கை ஒரேவிலையினைக் கொண்ட 02 புத்தகங்களை வாங்க செலவு செய்தாள். எனின் புத்தகம் ஒன்றின் விலை யாது?

..........................................

16.  இவ்வுருவில் நிழற்றப்பட்டுள்ள பகுதியை தசம எண்ணில் தருக?

..............................................................

17. ஒரு வரிசையில் 42 நபர்கள் நிற்கலாம். இதன்படி 1386 நபர்கள் நிற்பதற்கு எத்தனை வரிசைகள் தேவைப்படும்?

..............................................................

* **பின்வரும் தகவலை வாசித்து 18 தொடக்கம் 21 வரையான வினாக்களுக்கு விடை எழுதுக.**

ராஜா 10 ஆயிரம் ரூபா தாள்களும், 8 நூறு ரூபா தாள்களும் கடைக்குக் கொண்டு சென்றான். மேற்கூறப்பட்ட பணத்தைக் கொண்டு 500ரூபா பெறுமதியான 8 கொப்பிகளும் 100ரூபா பெறுமதியான மென் பானம் ஒன்றும் வாங்கினான். அத்துடன் 80ரூபா பயணச் செலவு ஏற்பட்டது.

18. ராஜா மொத்தமாக கடைக்குக் கொண்டு சென்ற பணப் பெறுமதி யாது?

..............................................................

19. இப்பணத்தைக் கொண்டு 2520ரூபா பெறுமதியான பொருட்கள் எத்தனை வாங்கலாம்?

..............................................................


20. இப் பணத்தொகையில் அவனுக்குப் பொருள் செலவு எவ்வளவு ஏற்பட்டது?

..............................................................

21. வீட்டுக்கு வந்ததும் அவன் கையில் உள்ள மிகுதிப் பணம் எவ்வளவு?

..............................................................

* **22தொடக்கம் 40 வரையான வினாக்களுக்கு சரியான விடையைக் கண்டு அதன் கீழ் கோடிடுக.**

22. 

இச் சூரிய நமஸ்காரமானது எத்தனையாவது படிமுறையாகும்?

1. 04ஆம் படிமுறை
2. 03ஆம் படிமுறை
3. 08ஆம்படிமுறை

23. பின்வரும் தாவரங்களில் ஆணிவேர் அற்ற தாவரத்தினைக் கண்டு கோடிடுக?

1. பப்பாசி  2. தென்னை  3. கொய்யாமரம்

24. தண்டு ஒன்றினை நாட்டுவதன் மூலம் இனத்தினை பெருக்கிக் கொள்ளக் கூடிய தாவரம் எது?

1. ரோஜா  2. மல்லிகை  3. பப்பாசி

25. எல்லா காலங்களிலும் பூக்கக்கூடிய தாவரம் எது?

1. தாமரை  2. கார்த்திகைப்பூ  3. வைகாசிப்பூ

26. அசுத்தமான நீரைப் பருகுவதினால் ஏற்படக்கூடிய நோய் யாது?

1. காய்ச்சல்  2. ஏற்பு நோய்  3. மஞ்சற்காமாலை

27. பின்வரும் விலங்குகளில் அனைத்தும் உண்ணியாகக் காணப்படும் விலங்கினைக் காண்க?

1. நாய்  2. யானை  3. கிளி

28. நீரை அதிகமாகத் தேங்கச்செய்யும் மண்வகை எது?

1. மணல் மண்  2. களிமண்  3. செந்நிற மண்

29.  இவ்வுருவில் காணப்படுபவரின் பெயரைத் தருக.
1. பாரதியார்
2. C. W. W. கன்னங்கரா
3. D. S. சேனாநாயக

30. உள்நாட்டில் திறந்த தபாலொன்றினை அனுப்புவதற்கு ஒட்ட வேண்டிய முத்திரையின் பெருமதி யாது?

1. 4.00ரூபாய் 2. 4.50ரூபாய் 3. 5.00ரூபாய்

31. பால் பெறக்கூடிய தாவரமாக அமையக்கூடியது எது?

1. முல்லை 2. தொட்டாற்சுருங்கி 3. பலா

32. பின்வரும் ஊடகங்களில் எது மிகவும் விரைவாக தகவலை பரிமாற்ற உதவும்?

1. பத்திரிக்கை 2. வானொலி 3. தொலைபேசி

33. களுகங்கை அமைந்துள்ள இடம் எது?

1. களுத்துறை 2. மன்னார் 3. யாழ்பாணம்

34. பலகை ஒன்றினை மட்டமாக சீவுவதற்காக பயன்படுத்தப்படும் உபகரணத்தைத் தெரிக?

1. உளி 2. சீவுளி 3. வாள்

35. உடல் வளர்ச்சிக்கு அதிகமாக பங்களிக்கும் போசனைப்பதார்த்தம் எது?

1. மாப்பொருள் 2. புரதம் 3. கொழுப்பு

36.  இவ்வுருவினை அவதானிப்பதன் மூலம் பெற்றுக்கொள்ளக்கூடிய தகவல் யாது?
1. பாதுகாப்பற்ற புகையிரத கடவை
2. புகையிரத நிலையம்
3. பாதுகாப்பான புகையிரத கடவை

37. அத்தாங்கு என்ற உபகரணம் பயன்படுத்தப்படும் தொழில்துறை எது?

1. மீன் பிடித்தல் 2. கல்லுடைத்தல் 3. தச்சு வேலை

38. பின்வரும் பிராணிகளில் முலையூட்டடியாக கருதப்படுவது?

1. மைனா 2. வௌவால் 3. பருந்து

39. குறித்த பொருளொன்று சர்வதேச தரத்தின் அடிப்படையில் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது என உறுதிப்படுத்தும் குறியீடு எது?

1. **ISO** 2. **SLS** 3. **ADB**

40. பின்வரும் விளையாட்டுகளில் அதிகமாக சக்தி விரையமாகும் விளையாட்டினைத் தெரிக?

1. கரம் 2. சதுரங்கம் 3. கால்பந்தாட்டம்

**பெப்ரவரி மாத சஞ்சிகையில் வெளியான வினாத்தாள் 1ற்கான விடைகள்**

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 01. 3 | 02.3 | 03.2 | 04.2 | 05.2 | 06.2 | 07.2 |
| 08.3 | 09.1 | 10.1 | 11.1 | 12.3 | 13.1 | 14.2 |
| 15.1 | 16.1 | 17.3 | 18.3 | 19.2 | 20.3 | 21.2 |
| 22.1 | 23.3 | 24.2 | 25.2 | 26.2 | 27.2 | 28.3 |
| 29.1 | 30.3 | 31.1 | 32.2 | 33.2 | 34.1 | 35.1 |
| 36.2 | 37.1 | 38.2 | 39.2 | 40.3 | | |

# பிறந்தநாள் வாழ்த்துக்கள்

மார்ச் 2015



ஜெ.நிரோயன்
01 ஆம் திகதி
யாழ்ப்பாணம்



ஸ்ரீதரன் திலக்ஸன்
2 ஆம் திகதி
தவசிக்குளம், மிருசுவில்



எ.சுஜி
03 ஆம் திகதி
யாழ்ப்பாணம்



ரி. சந்துயா
4 ஆம் திகதி
யாழ்ப்பாணம்




ஆர்.அனொஸ்கா
04 ஆம் திகதி
யாழ்ப்பாணம்



சிவகுமார் ராம்குமார்
4 ஆம் திகதி
நெல்லியடி, கரவெட்டி.




பு.றோசியன்
05 ஆம் திகதி
தும்பளை கிழக்கு, பருத்தித்துறை



ஸ். தாரிகா
9 ஆம் திகதி
யாழ்ப்பாணம்



ஸ்ரீஸ்கந்தராசா கேதீஸ்வரி
10 ஆம் திகதி
வத்திராஜன் வடக்கு, தாளையடி



ஆர்.ரொசானி
11 ஆம் திகதி
யாழ்ப்பாணம்



டி. அனுசியா
12 ஆம் திகதி
யாழ்ப்பாணம்



மயூரன் கஜேந்தினி
14 ஆம் திகதி
உடுவில், யாழ்ப்பாணம்



பி.தர்சினி
15 ஆம் திகதி
யாழ்ப்பாணம்



மரின் ஜென்சியா
16 ஆம் திகதி
மண்பிட்டி, நாவாந்துறை, யாழ்ப்பாணம்



தெய்வராசா கவிதா
16 ஆம் திகதி
வத்திராஜன் வடக்கு, தாளையடி



ஜெறாட் அலோசியஸ் வியான்சன்
19 ஆம் திகதி
மணற்காடு, குடத்தனை, யாழ்ப்பாணம்



வி.அப்சரா
27 ஆம் திகதி
யாழ்ப்பாணம்



முகம்மது ரிபாய்தீன் பாத்திமா ஸஹ்றா
28 ஆம் திகதி
அல்பொத்த, படல்கும்புர



பி.எம்.மனிஸ்
30 ஆம் திகதி
விந்துப்பிட்டி, கொழும்பு -13




## ஒளி அரசியின் பிறந்தநாள் வாழ்த்துக் கூப்பன்

புகைப்படம்

முழுப்பெயர் : ....................................

..................................................

பிறந்த திகதி : ....................................

முகவரி : ..........................................

..................................................

தொலைபேசி இல. : ..............................

4ம் பக்கத்தில் உள்ள முகவரிக்கு அனுப்பிவைக்கவும்


24 வைத்தியாலங்களும் கொழும்பிலும்
யாழிலும் இ.சி.ஜி. சேவைகளுக்கு
[குறைந்த கட்டணத்தில்]
United Creation
Specialized In Wedding Cards
Wedding Card Print & Sale
CTP and Colour Separation
Graphic Designing
Office : 51A Negombo Road,
Peliyagoda.
Tel : 011-2938083, 0777-347452
Email : unitprintek@gmail.com
Available Place
(1)Velan Printers
Kilinochchi
(2)Kalaimagal Printers
Vavuniya
(3)Aathavan Printers
Batticaloa
(4)Harani Printers
Thalawakele
(5)New Uthayan printers
Trincomalee
(6)Jeevan Printer
Paruthithurai,Jaffna

# GIRI ELECTRONICS SUPER MARKET

## மெகா பரிசுக் குவியல்

(01.03.2015 தொடக்கம் 30.04.2015 வரை)




ரூபா 10,000இற்கு மேற்பட்ட பொருட்களை கொள்வனவு செய்பவர்கள் இப்பரிசுக் குவியலில் இணைத்துக்கொள்ளப்படுவார்கள்.

AMEX MasterCard VISA

**தமிழ் - சிங்கள புதுவருடத்தை முன்னிட்டு விசேட விலைக்கழிவுடன் பொருட்களைப் பெற்றுக்கொள்ளலாம்.**

No. 286 Kandy Road, Vavuniya. Tel:0776143500, 0245671354

http://www.girielectronics.lk Girielectronicslk

PUBLIC LIBRARY JAFFNA